
Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 28 | விலை - 30 ரூபா   செய்தி: 021 493 0000   விளம்பரம்: 021 493 1111

சுடர் :35   கதிர் :98   மாசி 23ஆம் நாள் வெள்ளிக்கிழமை   06 மார்ச் 2020   வள்ளுவர் ஆண்டு 2051

முச்சந்தி முரளி



"இனவாதம் பற்றி ஆர் எதைக் கதைக்கிறது எண்டு ஒரு விவஸ்தையே இல்லாமல் போச்சு பாருங்கோ !..."

## காணியற்றோருக்கு 21 மில்லியன் ரூபா

கொழும்பு, மார்ச் 6

யாழ்ப்பாணத்தில் காணியற்றோருக்கு காணி வழங்குவதற்காக 21 மில்லியன் ரூபா நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு காணி வழங்குவதற் 25 ➤




## கச்சதீவு பெருவிழா இன்று!

கொழும்புத்துறை, மார்ச் 4

கச்சதீவு புனித அந்தோனியார் திருத்தலத்துக்கான தவக்கால யாத்திரையும் வருடாந்தத் திருவிழாவும் இன்று, நாளை 25 ➤

## மொட்டில் பெரமுன!

கொழும்பு, மார்ச் 6

ஏப்ரல் 25ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் பொதுமக்கள் முன்னணி தலைமையிலான கூட்டணி 'தாமரை மொட்டு' சின்னத்தில் போட்டியிடவுள்ளது என்பதை நேற்று 08 ➤

# இறுதிப்போரில் நடந்தது திட்டமிட்ட இனஅழிப்பே

### குற்றவாளிகளைத் தப்பவிடாதீர்கள்; ஐ.நாவிடம் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 6

இலங்கையில் இறுதிப்போரின்போது நடைபெற்றது தமிழர்களுக்கு எதிரான திட்டமிட்ட இன அழிப்பே யாகும். எனவே, இது தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக்கு வழங்கப்பட்ட முறைப்பாடுகளுக்கு அமைய விசாரணைகளை முன்னெடுத்து நடவடிக்கை எடுக்கவேண்டும். 25 ➤



## 8 குழுக்கள் கட்டுப்பணம்

யாழ்ப்பாணம், மார்ச் 6

ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு நேற்று மாலை வரையில் 8 சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளன. வடக்கில் 5 சுயேச்சைக் குழுக்களும், தெற்கில் 3 சுயேச்சைக் குழுக்களும் கட்டுப் 25 ➤

## அரசியல் கைதிகள் என்று எவருமில்லை

### கோத்தா அந்தர் பல்டி



யாழ்ப்பாணம், மார்ச் 6

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்று மூன்று மாதங்களுக்குள் பயங் 08 ➤

## காணாமல் போனோர் கனடாவிலும் இருக்கலாம்

### கோத்தா எகத்தாளம்

யாழ்ப்பாணம், மார்ச் 6

பாதுகாப்புத் தரப்பினரால் காணாமல் ஆக்கப்படுதல் தொடர்பில் ஒரு சில விதிவிலக்கான சம்பவங்கள் இருக்கலாம். அதற்காக எல் 08 ➤

## கொழும்பில் தமிழரசு இறங்கினால் யானைக்கே பாதகம்!

### மொட்டுக்கு சவால் அல்ல என்கிறார் மஹிந்த

கொழும்பு, மார்ச் 6

'நாடாளுமன்றத் தேர்தலில் தலைநகர் கொழும்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சி போட்டியிட்டால் அது ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான கூட்ட 25 ➤

## என்னால் நினைத்ததை செய்ய முடியவில்லை

### கோத்தா ஆதங்கம் 25 ➤

## வடகிழக்கு வாக்குகள் இனவாத வாக்குகளே

யாழ்ப்பாணம், மார்ச் 6

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அளிக்கப்பட்ட வாக்குகள் இனவாத வாக்குகள். அந்த வாக்குகளைக் கழித்தால் நான் மிகப் பெரிய வெற்றியை ஜனாதிபதித் தேர்தலில் பெற்றுக் கொண்டிருப்பேன். இவ்வாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

பத்திரிகை ஆசிரியர்களுடன் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடத்திய சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதித் தேர்தலில் நான் 14 25 ➤




உங்கள் சம்பளத்தில் அதிக வேலைகளைச் செய்வதற்கு, அனைவருக்கும் ஏற்ற DFCC வங்கியின் செலரி பார்ட்னர் கணக்கை இன்றே ஆரம்பியுங்கள்.

சம்பளத்தைப் போல இருமடங்கு OD வசதி
கவர்ச்சிகரமான வட்டி வீதம்
இலவச டிஜிட்டல் வங்கிச் சேவைகள்
இணையும் கட்டணம் மற்றும் வருடாந்தக் கட்டணம் அற்ற கிரடிட் கார்ட்
DFCC அல்லது LankaPay ATM வலையமைப்பிலிருந்து இலவசமாக பணம் மீளப்பெறுதல்
நடைமுறைக் கணக்கிற்கு ஆரம்ப வைப்பு அவசியமில்லை

DFCC செலரி பார்ட்னர்

*நிபந்தனைகளுக்குட்பட்டது

24 மணிநேர அழைப்பு மையம்: 0112 350000
www.dfcc.lk

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

# வேலையற்ற பட்டதாரிகளை ஏமாற்றியுள்ளார் கோத்தாபய

## ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆட்சி அதிகாரம் தந்தால் 3 மாதங்களுக்குள் நிரந்த நியமனம் என்கிறார் சஜித்

கொழும்பு, மார்ச் 6

'வேலையற்ற பட்டதாரிகளை கோத்தாபய அரசு ஏமாற்றி இருக்கின்றது. நியமனம் வழங்குவதை தேர்தல்கள் ஆணையாளர் இடைநிறுத்துவார் எனத் தெரிந்தே அரசு நாடாளுமன்றம் கலைப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் நியமனக் கடிதங்களை அனுப்பியிருந்தது. அரசு வாக்குறுதியளித்த காலத்துக்குள் நியமனம் வழங்கியிருந்தால் தேர்தல்கள் ஆணையாளர் இடைநிறுத்தியிருக்கமாட்டார்' இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியின் தலைவரும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

'நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆட்சியமைக்கும் அதிகாரம் வழங்கப்பட்டால் அனைத்து பட்டதாரிகளுக்கும் மூன்று மாதங்களுக்குள் அரச துறையில் நிரந்தர நியமனம் வழங்குவேன்' எனவும் அவர் உறுதியளித்தார்.

வேலையற்ற பட்டதாரிகளுக்கு வழங்கப்படும் நியமனங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளமை தொடர்பாக கொழும்பில் அமைந்துள்ள முன்னாள் அமைச்சர் கபீர் ஹாசீமின் இல்லத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

'ஆட்சியமைத்து ஒரு மாதத்துக்குள் வேலையற்ற பட்டதாரிகளை அரச துறையில் உள்வாங்கி, மூன்று மாதங்களுக்குள் நிரந்தர நியமனம் வழங்குவேன் என ஜனாதிபதித் தேர்தலின்போது நான் வாக்குறுதியளித்திருந்தேன். ஆனால், எனது எதிர்வாதி கோத்தாபய, பட்டதாரிகளை ஒரு மாதத்துக்குள் இணைத்துக் கொள்வதாக வாக்குறுதியளித்திருந்தார். பின்னர் ஜனவரியில் நியமனம் வழங்குவதாகத் தெரிவித்திருந்தார். அதன்பின்னர் பெப்ரவரியில் வழங்குவதாகக் கூறியிருந்தார். இறுதியில் நாடாளுமன்றம் கலைப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் குறிப்பிட்ட சிலருக்கு அவசரமாக நியமனக் கடிதங்கள் தபாலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் நியமனங்கள் வழங்குவது, இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படுவது தேர்தல் சட்டத்துக்கு முரணாகும். அதனடிப்படையிலே பட்டதாரிகளுக்கான நியமனக்கடிதங்கள் வழங்குவதை தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் இடைநிறுத்தி இருக்கின்றார். அத்துடன் நாடாளுமன்றம் கலைக்கப்படும் திகதியை அரசு ஏற்கனவே அறிந்திருந்தது. நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் நியமனம் வழங்குவதை தேர்தல்கள் ஆணையாளர் இடைநிறுத்துவார் என தெரிந்துகொண்டே அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. இதன் மூலம் அரசு 44 ஆயிரம் பட்டதாரிகளையும் ஏமாற்றி இருக்கின்றது. அத்துடன், பட்டதாரிகளுக்கான நியமனத்தை இடைநிறுத்த நானே செயற்பட்டதாக அரசு பொய்ப் பிரசாரம் ஒன்றையும் மேற்கொண்டு வருகின்றது' என்றார்.

(ம-22)

# பொஜமுன தனித்து ஆட்சியமைக்கும்!

## இப்படிக் கூறுகின்றார் சுசில்



கொழும்பு, மார்ச் 6

'நாடாளுமன்றத் தேர்தலில் சிறீலங்கா பொதுமக்கள் முன்னணி தலைமையிலான கூட்டணி மூன்றிலிரண்டு பெரும்பான்மைக்கும் அதிகமான ஆசனங்களைப் பெற்று பலமான அரசை அமைக்கும் இவ்வாறு பொதுமக்கள் முன்னணியின் முக்கியஸ்தர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பொதுமக்கள் முன்னணியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொதுமக்கள் முன்னணி ஜனாதிபதித் தேர்தலில் கூட்டணியின் ஊடாகவே போட்டியிடும். பொதுத் தேர்தலில் பொதுமக்கள் முன்னணியால் 20 ஆசனங்களைத் தனித்துப் பெறமுடியும். • கூட்டணியில் இணைந்துள்ள கட்சிகளின் ஆதரவுடன் மூன்றிலிரண்டு பெரும்பான்மைக்கும் அதிகமான ஆசனங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். கட்சியின் உள்ளகப் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியாத ஐக்கிய தேசியக் கட்சியிடம் மக்கள் மீண்டும் ஆட்சி அதிகாரத்தை ஒப்படைக்கமாட்டார்கள். வரலாற்றுப் பின்னணியைக் கொண்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் இன்றைய நிலைமை கவலைக்குரியது. கட்சியின் அடிப்படைக் கொள்கைகளுக்கு அப்பால் சென்று செயற்படும்போது இவ்வாறான நிலைமையே தோற்றம் பெறும்' - என்றார்.

(ம-22)

### பட்டதாரிகள் நியமனம்

# ஆணைக் குழுவிடம் கேள்வி எழுப்புவேன்

யாழ்ப்பாணம், மார்ச் 6

பட்டதாரிகளை அரச சேவையில் இணைத்துக் கொள்வதற்காக பயிலுநர்களாக ஆள் சேர்ப்புச் செய்யும் நடவடிக்கைகளை இடைநிறுத்தும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உத்தரவு தொடர்பில் ஆணைக்குழுவை கேள்விக்கு உட்படுத்தவுள்ளதாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

பத்திரிகை ஆசிரியர்களுடனான சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

'பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குவதை இடைநிறுத்தும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தீர்மானம் தவறானது. இந்த நியமனம் அரசியல் நோக்கத்துக்காக வழங்கப்படவில்லை. என்றார் கோத்தாபய.

(ஒ.5)

# நியமனங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 6

வடக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளராக திருவாகரனும் விவசாய அமைச்சின் செயலாளராக சிவபாதசுந்தரமும் நேற்று முதல் நியமிக்கப் பட்டுள்ளனர்.

வடக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளராக இதுவரை காலமும் பணியாற்றிய சிவபாதசுந்தரம் மாகாண விவசாய அமைச்சின் செயலாளராக நியமிக்க ப்பட்டுள்ளார். இவ்வாறு இடமாற்றப்பட்டதனால் ஏற்பட்ட பொதுச் சேவை ஆணைக் குழுவின் செயலாளர் வெற்றிடத்திற்கு திருவாகரன் நியமிக்கப்பட்டுள் ளார்.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளராக பணியாற்றிய திருவாகரன் கடந்த ஆளுநரின் காலத்தில் கொழும்புக்கு இடமாற்றப்பட்டிருந்த நிலையில் தற்போது மீண்டும் வடக்கு மாகாணத்துக்கு மாற்றலாகி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-105)

# சடலத்தை பொறுப்பேற்குக

யாழ்ப்பாணம், மார்ச் 6

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ள சடலமொன்றை அடையாளம் காண உதவுமாறு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை நிர்வாகம் கோரியுள்ளது.

இது தொடர்பில் மருத்துவமனையின் தரப்பில் இருந்து விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:

கடந்த 3ஆம் திகதி 55 வயது மதிக்கத்தக்க உயர்ந்த மெல்லிய உடல்தோற்றமுடைய நபரொருவர் யாழ்ப்பாணம் பேருந்துத் தரிப்பிடத்தில் விழுந்து கிடந்துள்ளார். அதையடுத்து பொதுமக்கள் 1990 இலக்கத்துக்கு அழைப்பெடுத்து அவரை மருத்துவமனையில் சேர்த்தனர். இன்று (நேற்று) அந்த நபர் இறந்துவிட்டார். எனவே குறித்த நபரை அடுத்த 15 நாள்களுக்குள் உறவினர்கள் அடையாளம் கண்டு பொறுப்பேற்குமாறு வேண்டப்படுகின்றீர்கள் - என்றுள்ளது.

(ம)

### வவுனியாவில் உணவு ஒவ்வாமையால்

## பாடசாலை 24 மாணவர்கள் மருத்துவமனையில் சேர்ப்பு

வவுனியா, மார்ச் 6

வவுனியா, மாமடு அக்ரபோதி வித்தியாலயத்தைச் சேர்ந்த தரம் 5 மாணவர்கள் 24 பேர் உணவு ஒவ்வாமை காரணமாக வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளனர்.

வவுனியா, மாமடு அக்ரபோதி வித்தியாலயத்தில் கல்வி கற்கும் தரம் 5 மாணவர்களுக்கான மேலதிக புலமைப் பரிசில் வகுப்பு பாடசாலையில் மாலை நடைபெற்றது. இதன்போது அங்கு கல்வி கற்றுக் கொண்டிருந்த மாணவர்கள் ஒவ்வாமை காரணமாக உடல் சோர்வுற்று சிலர் மயக்கமடைந்தனர், சிலர் சோர்வுற்ற நிலையில் காணப்பட்டனர்.

இந்த நிலையில் பாதிப்புக்குள்ளான 24 மாணவர்களையும் மாமடு வைத்தியசாலையில் பாடசாலை நிர்வாகத்தினர் அனுமதித்தனர்.

(ம-18)

# பேருந்து பிரேக் பிடித்ததில் 16 பேர் காயமடைந்தனர்

யாழ்ப்பாணம், மார்ச் 6

கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த இ.போ.சபைக்குச் சொந்தமான பேருந்து போதனா வைத்தியசாலை முன்பாக திடீரென பிரேக் பிடித்ததை அடுத்து 16 பேர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

படுவேகத்தில் வந்த பேருந்து திடீரென பிரேக் பிடித்ததை அடுத்து பேருந்துக்குள் எழுந்துநின்ற பயணிகள் விழுந்து காயங்களுக்கு உட்பட்டனர். 16 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் ஆறு பேர் விடுதிகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறுகின்றனர். ஒருவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

(ம-105)

# எந்தக் கட்சியுடனும் கூட்டணி இல்லை

## சந்திரகுமார் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 6



சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பு எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் மாத்திரம் சுயேச்சையாக போட்டியிடவுள்ளதாக அந்த அமைப்பின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மு.சந்திரகுமார் தெரிவித்தார்.

ஒன்பதாவது நாடாளுமன்றத் தேர்தல் ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி நடைபெறவுள்ளது. தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் எதிர்வரும் 12ஆம் திகதியிலிருந்து 19ஆம் திகதி நண்பகல் வரையில் இடம்பெறவுள்ளது. தேர்தலுக்கான ஏற்பாடுகளில் பல கட்சிகளும், இயக்கங்களும், அமைப்புக்களும் மும்முரமாக கவனம் செலுத்தியுள்ளன.

இந்த நிலையில் ஈ.பி.டி.பியிலிருந்து பிரிந்து சென்று சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பை, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் உருவாக்கியிருந்தார். இந்த அமைப்பு கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சுயேச்சைக் குழுவாகப் போட்டியிட்டிருந்தது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களை உள்ளடக்கிய யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் மாத்திரம் சுயேச்சைக் குழுவாக சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பு போட்டியிடவுள்ளது. வேட்பாளர் தெரிவுகள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ.5)

# விக்கியின் கூட்டணிக்கு வழங்கப்பட்டது ‘மீன்’

யாழ்ப்பாணம், மார்ச் 6

**வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணிக்கு மீன் சின்னம் வழங்கப்பட்டுள்ளது. அந்தக் கூட்டணி நிறைகுடம் சின்னத்தைக் கோரிய போதும் தேர்தல்கள் ஆணைக்குழு வழங்க மறுத்து விட்டது.**




கட்சிப் பதிவுகள், கட்சிப் பெயர் மாற்றங்களுக்கான விண்ணப்பங்கள் தேர்தல்கள் திணைக்களத்தால் கோரப்பட்டிருந்தன. நூற்றுக்கு மேற்பட்ட கட்சிப் பதிவுக்கு விண்ணப்பிக்கப்பட்டிருந்தாலும் தேர்தல் பணி காரணமாக அது இடைநிறுத்தப்பட்டுள்ளது. கட்சிப் பெயர் மாற்றங்களுக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பங்காளிக் கட்சிகளுள் ஒன்றான ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சி தனது கட்சியின் பெயரையே தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியாக மாற்ற விண்ணப்பித்திருந்தது. அது ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் சின்னமாக செவ்வரத்தம் பூ இருந்து வந்தது. கட்சிச் சின்னத்தை மாற்றுவதற்கும் விண்ணப்பிக்கப்பட்டிருந்தது. நிறைகுடம் சின்னம் வழங்குமாறு கோரப்பட்டிருந்தது.

நிறைகுடம் சின்னத்தை கலாசார அடையாளம் என்ற காரணத்தால் வழங்க முடியாது என்று தெரிவித்த தேர்தல்கள் ஆணைக்குழு மீன் சின்னத்தை வழங்கியுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சிவாஜிலிங்கம் மீன் சின்னத்தில் போட்டியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5,105)

# மன். புதைகுழி விவகாரம் எழுத்துமூல சமர்ப்பணம்!

மன்னார் சதொச வளாகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கில் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் நேற்று எழுத்து மூல சமர்ப்பணம் முன்வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட நீதிவான் எம்.கணேசராஜா முன்னிலையில் எழுத்து மூல சமர்ப்பணம் முன்வைக்கப்பட்டுள்ளது என்று பாதிக்கப்பட்டோர் சார்பில் முன்னிலையாகும் சட்டத்தரணி குறிப்பிட்டார்.

இதேவேளை, காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் சார்பில் இன்று மன்றில் எழுத்து மூல சமர்ப்பணம் முன்வைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த வழக்கு தொடர்பான கட்டளை எதிர்வரும் 10 ஆம் திகதி பிறப்பிக்கப்படவுள்ளது. (எ)

# நட்டஈடு வழங்கியமை தொடர்பாக அறிக்கை

## உத்தரவு பிறப்பித்தது உயர் நீதிமன்று

கொழும்பு, மார்ச் 6

உமா ஓயா திட்டத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்கிய முறை தொடர்பில் உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு சட்ட மா அதிபருக்கு உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஆயிரக்கணக்கான விவசாயிகளுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து, விவசாயிகள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி ரங்கநாத் தாபரே முன்வைத்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு மன்று இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

விவசாய திணைக்களத்தால் மதிப்பிடப்பட்ட நட்டஈட்டுத் தொகை, அரசால் வழங்கப்படவில்லை என நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அரசால் விவசாயிகளுக்கு குறைந்தளவான நட்ட ஈடே வழங்கப்பட்டுள்ளது என்று சட்டத்தரணி தாபரே கூறியுள்ளார்.

இந்த வழக்கை எதிர்வரும் ஜூலை 20 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கு பிரியந்த ஜயவர்தன, பி. பத்மன் சூரசேன மற்றும் யசந்த கோதாகொட ஆகிய நீதியரசர்கள் குழாம் உத்தரவிட்டுள்ளது. (எ)

# தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் சுயேச்சையாக களமிறங்குகின்றது

யாழ்ப்பாணம், மார்ச் 6

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் சுயேச்சைக் குழுவாக எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் களமிறங்கவுள்ளதாக அந்த இயக்கத்தின் தலைவர், வடக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.



யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்திலேயே அந்த இயக்கம் போட்டியிடவுள்ளதாகவும் அறிய முடிகின்றது.

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியில், தமிழ்த் தேசியப் பசுமை இயக்கமும் இணைந்து களமிறங்குவது தொடர்பில் பேச்சுகள் இடம்பெற்றிருந்தன. தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியில் சமவுரிமை இல்லை எனத் தெரிவித்து, தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் தனி வழியில் களமிறங்கவுள்ளதாக அறிவித்திருந்தது.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் அரசியல் கட்சியாகப் பதிவு செய்வதற்கு விண்ணப்பித்துள்ளது. இருப்பினும் தேர்தல்கள் ஆணைக்குழுவால் இதுவரை அங்கீகரிக்கப்படவில்லை என்பதால், எதிர்வரும் ஏப்ரல் 25ஆம் திகதி இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் சுயேச்சைக் குழுவாக களமிறங்கத் தீர்மானித்துள்ளது.

கட்சியின் வேட்பாளர்கள் தெரிவு இடம்பெற்று வருவதாகவும் அறிய முடிகின்றது. (ஒ.5)

# சிறுபான்மைக் கட்சிகள் ஒருமித்துச் செயற்பட வேண்டும்

## மௌலவி சுபியான் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 6

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் அனைத்து சிறுபான்மைக் கட்சிகளும் ஒருமித்துச் செயற்பட முன்வரவேண்டும் என்று யாழ்ப்பாண மக்கள் பணியகத்தின் தலைவரும் யாழ்ப்பாண சர்வமதக் குழுத் தலைவருமான மௌலவி சுபியான் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் மிக முக்கியமான தேர்தல். எதிர்வரும் ஐந்து ஆண்டு காலப்பகுதியில் எமது பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் இனம் சார்ந்த உரிமைகள் போன்ற பல்வேறுபட்ட விடயங்களை உள்ளடக்கியதான முக்கியமான தேர்தல்.

மக்கள் தங்களுடைய எதிர்கால வாழ்வுக்கு தங்களுடைய உரிமைகள் தங்களுடைய அபிவிருத்திக்கு யார் உண்மையாக உழைக்கக் கூடியவர்கள், அர்ப்பணிப்போடு செயற்படக் கூடியவர்கள், மக்களோடு மக்களாக நின்று பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக்கூடிய திறமை உள்ளவர்கள் என்பதை நன்கு அறிந்து தெரிந்து தகுதியுள்ள வேட்பாளர்களுக்கு வாக்களிக்க வேண்டும். - என்றார். (த-20)



# உருளைக் கிழங்குக்கு நிர்ணய விலை தேவை

## செய்கையாளர்கள் கோரிக்கை

**யாழ்ப்பாணம்,மார்ச் 6**

**உருளைக்கிழங்குக்கான நிர்ணய விலையை அரசாங்கம் அறிமுகப் படுத்தாவிட்டால், பெரும் நட்டத்தை எதிர்நோக்க வேண்டி வரும். எனவே நிர்ணய விலையை அரசு அறிவிக்க வேண்டும் என்று யாழ்ப் பாண உருளைக்கிழங்குச் செய்கையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ள னர்.**

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த வருடத்தை விட இந்த வருடம் அதிக நிலப் பரப்பில் உருளைக்கிழங்குச் செய்கை மேற்கொள்ளப்பட்டது.

அரை மானிய விலையில் விதை உருளைக்கிழங்கு வழங்கப்பட்டதால் விவசாயிகள் செய்கையில் ஆர்வம் காட்டினர்.

ஒரு பெட்டி விதை உருளைக் கிழங்கு அரை மானிய விலையில் 7 ஆயிரம் ரூபா வீதம், சுமார் ஆயிரத்து 200 விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன. இதன் மூலம் 240 மெற்றிக்தொன் விதை உருளைக்கிழங்கு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. உடுவில், கோப்பாய், சண்டிலிப்பாய், தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவில் செய்கையாளர்கள் தற்போது அறுவடையை ஆரம்பித்துள்ளனர்.

"உருளைக்கிழங்குக்கு நிர்ணய விலை இன்மையால் மிகக் குறைந்த விலைக்கே உருளைக் கிழங்கு விற்பனை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஆரம்பத்தில் ஒரு கிலோ கிராம் உருளைக்கிழங்கு சுமார் 110 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது.

அது படிப்படியாகக் குறைந்து தற்போது 65 ரூபாவில் இருந்து 80 ரூபாவுக்கு விற்பனை செய்ய வேண்டி உள்ளது. உருளைக் கிழங்கு மிகச் சிறந்த பயிராக உள்ளது. ஆனால்அதற்குநிர்ணயவிலை இன்மையால் குறைந்த விலைக்கு வழங்க வேண்டி உள்ளது.

வெங்காயத்துக்கு நிர்ணய விலை வழங்கியதைப் போன்று, உருளைக் கிழங்குக்கும் நிர்ணய விலையை அரசு நிர்ணயிக்க வேண்டும். இல்லை என்றால் பெரும் நட்டத்தை இம்முறை உருளைச் கிழங்குச் செய்கையாளர்கள் எதிர்கொள்ள வேண்டும்" என்று செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர். (க-7)

# மாணவிக்கு உதவித்தொகை

முல்லைத்தீவு,மார்ச் 6

நெருக்கடியான பொருளாதார நிலைமைக்குள் வாழும் குடும்பங்களில் இருந்து பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகும் மாணவர்களுக்கான உதவித்திட்டத்தின் கீழ், சட்டத்துறை மாணவி ஒருவருக்கு உதவித் தொகை வழங்கப்படவுள்ளது.

திருமுறிகண்டியைச் சேர்ந்த, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சட்டக்கற்கை நெறியை ஆரம்பிக்கவுள்ள மாணவிக்கு மாதாந்த ஊக்குவிப்பு உதவி வழங்கப்படவுள்ளது.

மாதாந்தம் உதவித் தொகையாக 5 ஆயிரம் ரூபா வழங்கப்படும் என்று கல்வி பொருளாதார அபிவிருத்தி அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

கனடா எட்மண்டன் மாநிலத்தைச் சேர்ந்த செல்வி. சிந்தியா குணரட்ணம் உதவியை வழங்கியுள்ளார். (க-222)

# சர்வதேசவிசாரணை நடக்கவேயில்லை

## சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 6



இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றம் தொடர்பாக சர்வதேச ரீதியான பூர்வாங்க விசாரணைகளே இடம்பெற்றுள்ளன எனத் தெரிவித்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்சிவாஜிலிங்கம் இதுவரை சர்வதேச விசாரணை இடம்பெறவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடைபெற்று முடிந்து விட்டதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுமந்திரன் மேடைகளில் கூறி வருகின்றார்.

ஆனால், இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பாக சர்வதேச ரீதியான பூர்வாங்க விசாரணைகளே இடம்பெற்றுள்ளன. அது தொடர்பான அறிக்கை வெளிவந்திருக்கின்றது. எழுத்து மூலமான வாக்குமூலங்கள், அறிக்கைகள் பெறப்பட்டு வலுவான அறிக்கை வெளி வந்தது.

பொதுவாக மிகப் பெரிய குற்றங்களுக்கு மேல் நீதிமன்றங்கள், ட்ரயல் அட் பார் நீதிமன்ற விசாரணைகள் ஊடாகவே நீதியைப் பெற்றுக் கொள்ள முடியும்.

அவ்வாறான ஒரு பொறிமுறையை நாம் கோரி வருகின்றோம். இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச நீதிபதிகள் சர்வதேச சட்டத்தரணிகள், சர்வதேச புலனாய்வாளர்கள் போன்றவர்களை உள்ளடக்கிய விசாரணையே நாம் கோரி நிற்கின்றோம்.

விசாரணைகள் ஊடாக உண்மையான குற்றவாளிகள் கண்டறியப்பட்டு அவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டும். அதனை நாம் இன்றுவரை வலியுறுத்தி வருகின்றோம். - என்றார். (ஒ.5.20)

# வெற்றியாளர்கள் கௌரவிப்பு

சாவகச்சேரி,மார்ச் 6

யாழ்ப்பாணம் சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் தேசிய மட்ட வெற்றியாளர்கள் கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

இலங்கை வனஜீவராசிகள் மற்றும் இயற்கைப் பாதுகாப்புக் கழகத்தின் இளைஞர் அணியால் பாடசாலைகளுக்கு இடையில் நடத்தப்பட்ட 'இயற்கைப் பாதுகாப்பும் அபிவிருத்தியும்' என்ற தொனிப் பொருளிலான சுவரொட்டிகள் காட்சிப்படுத்தலும், முன்வைப்புச் செய்தலும் போட்டியில் வெள்ளிப்பதக்கம் பெற்ற ச.ஆத்மிகா, சி.மதுசா, சி.ஆர்த்தியா, இ.அபிசா, தா.மதுசிகா ஆகிய மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இவர்களுடன் அகில இலங்கை கர்நாடக சங்கீதம் போட்டியில் வீணை இசைத்தலில் தங்கப்பதக்கம் பெற்ற உ.சகானா மற்றும் புல்லாங்குழல் வாசித்தலில் வெள்ளிப்பதக்கம் பெற்ற ச.ஆத்மிகா ஆகிய மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் விருந்தினர்களாக தென்மராட்சிக் கல்வி வலய விஞ்ஞான பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி அ.நிருபராணி, அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுனில் ஆரியரத்ன ஆகியோர் கலந்து கொண்டு வெற்றியாளர்களுக்கான சான்றிதழ்களையும் பதக்கங்களையும் வழங்கிக் கௌரவித்தனர். (ஐ)

# ஐ.தே.கட்சியைக் காப்பது உறுப்பினர்களது கடமை!

## சுஜீவ சேனசிங்க கூறுகின்றார்

கொழும்பு, மார்ச் 6



கட்சியைப் பாதுகாக்க வேண்டியது ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களின் கடமையாகும் என்று தெரிவித்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் செயற்குழுவின் தீர்மானம் தொடர்பாக நாம் அவதானம் செலுத்தப் போவதில்லை.

அவர்கள் கூறுவதைப் போல் செயற்பட்டால் ஐ.தே.க. அழிவை எதிர்நோக்க வேண்டி ஏற்படும். நவீன் திசாநாயக்க மற்றும் கருஜயசூரிய உள்ளிட்ட குற்றச்சாட்டுகளற்ற சிரேஷ்ட உறுப்பினர்கள் எங்களுடன் இணைந்து கொள்ள வேண்டும்.

வரலாற்றுச் சிறப்புமிக்க பழமைவாய்ந்த கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியைப் பாதுகாக்க வேண்டியது ஐ.தே.க. உறுப்பினர்களின் கடமையாகும். குறிப்பிட்ட காலமாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையிலான ஒரு ஜனாதிபதியை உருவாக்க முடியாமல் போயுள்ளது. அதைக் கருத்தில் கொண்டே கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது ஐ.தே.க. உறுப்பினர் ஒருவரைக் களமிறக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் சஜித் பிரேமதாசவை நாங்கள் களமிறக்கியிருந்தோம். எனினும் அவரால் வெற்றியடைய முடியாமல் போயுள்ளது. அவரது தோல்விக்கு எமது கட்சியைச் சேர்ந்த சிலரின் செயற்பாடுகளும் பிரதான காரணங்களாகும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் தலைமைத்துவத்தை தம்வசம் தக்கவைத்துக் கொண்டே செயற்படுகின்றனார். 26 வருடங்களாக அவரே தலைவராக இருந்து வருவதுடன் தலைமைத்துவத்தில் மாற்றத்தை ஏற்படுத்தவும் இடமளிக்காமல் இருக்கின்றார்.

இவ்வாறான நிலைமை ஜனநாயக தன்மையற்றதாகும். தொடர்ந்தும் தோல்வியை எதிர்கொண்டு வரும் ஐக்கிய தேசியக் கட்சியை வெற்றியின் பாதைக்கு இட்டுச் செல்வதற்காக நாங்கள் எடுக்கும் முயற்சிகளுக்கும் அவர் இடமளிப்பதாகத் தோன்றவில்லை. தற்போதைய அரசை விமர்சிக்கக் கூடிய பலம்வாய்ந்த எதிர்க்கட்சியை உருவாக்குவதே எமது நோக்கமாகும். - என்றார். (எ)

## தரம் 1 இல் மாணவர் இணைப்பு:

# 4 பாடசாலைகளில் எந்தவொரு மாணவரும் சேர்க்கப்படவில்லை

## யாழ். வலயத்தில் இந்த நிலை

**யாழ்ப்பாணம், மார்ச் 6**

**யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் தரம் 1இல் மாணவர்களை இணைக்கத் தகுதியான 104 பாடசாலைகளிலும் 2 ஆயிரத்து 731 மாணவர்கள் இணைந்துள்ள போதும் 38 பாடசாலைகளில் 10 இற்கும் குறைந்த மாணவர்களே இணைந்துள்ளனர்.**

வடக்கு மாகாணத்தின் 12 கல்வி வலயங்களில் ஒன்றான யாழ்ப்பாணம் கல்வி வலயத்தின் கீழ் 2020ஆம் ஆண்டில் தரம் 1ல் இணைந்த மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலேயே இந்த எண்ணிக்கை கணக்கிடப்பட்டுள்ளது. இதில் 38 பாடசாலைகளில் 10இற்கும் குறைந்த மாணவர்கள் காணப்படும் அதேநேரம் 23 பாடசாலைகளில் 5 இற்கும் குறைந்த எண்ணிக்கை மாணவர்களே இணைந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இதேநேரம் 4 பாடசாலைகளில் எந்தவொரு மாணவரும் இணைத்துக் கொள்ளப்படவில்லை.

பிரபல பாடசாலைகளில் 10 இல் மட்டும் ஆயிரத்து 388 மாணவர்கள் இணைக்கப்பட்டுள்ள நிலையில் எஞ்சிய 94 பாடசாலைகளிலும் ஆயிரத்து 343 மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஓ.5,105)

## கிராம அலுவலரிடம் விளக்கம் கோரல்

மன்னார், மார்ச் 6

மன்னார் மாவட்டத்தின் மாந்தை மேற்குப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கிராம அலுவலர் ஒருவர் அரசியல் பழிவாங்கல் காரணமாக இடமாற்றப்பட்டுள்ளார் என்ற செய்தி ஊடகங்களில் வெளியாகியிருந்த நிலையில், அது தொடர்பில் கிராம அலுவலரிடம் மாவட்டச் செயலரால் விளக்கம் கோரப்பட்டுள்ளது. (ஓ.5,105)

## இணக்கம் எட்டாவிடில் தொலைபேசி!

கொழும்பு, மார்ச் 6

சின்னம் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ளமுடியாவிட்டால், தொலைபேசி சின்னத்தில் பொதுத் தேர்தலில் போட்டியிடுவோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தலை முன்னிட்டு 8 பேர் அடங்கிய வேட்புமனுக் குழுவை அமைப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு கூட்டத்தில் நேற்றுமுன்தினம் அனுமதி வழங்கப்பட்டது.

எனினும் செயற்குழுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் தமது தரப்புக்கு அறியப்படுத்தப்படவில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார். (எ)

## அதிபர் இடமாற்றலில் அரசியல் தலையீடு!

கிளிநொச்சி, மார்ச் 6

மாவட்டச் செயலர், பிரதேச செயலர்கள் இடமாற்றங்களில் அரசியல் தலையீடு காரணமாக குளறுபடிகள் இடம்பெற்றிருந்த நிலையில் தற்போது பாடசாலை அதிபர்களின் இடமாற்றங்களிலும் அரசியல் தலையீடு காணப்படுதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதன் காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் கல்விச் செயற்பாடுகள் தேக்கமடையும் நிலைமை காணப்படுவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

வடக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு உட்பட்ட 12 கல்வி வலயங்களிலும் வருடாந்த அதிபர் இடமாற்றம் மேற்கொள்ளப்பட்டது.

கிளிநொச்சிக் கல்வி வலயத்தில் 17 அதிபர்களின் இணக்கத்துடன் அவர்களுக்கான இடமாற்றம் வழங்கப்பட்டது. இந்த இடமாற்றங்களில். ஆளும் கட்சி அரசியல்வாதி ஒருவர் தலையீடு செய்துள்ளதாகக் குற்றம் சுமத்தப்படுகின்றது.

'தலையீடு செய்த ஆளும் கட்சி அரசியல்வாதிக்கு வேண்டப்பட்ட அதிபர் தற்போது தரம் 3 இல் உள்ளார். அவரை 1ஏபி பாடசாலைக்கு நியமிக்கும் நோக்கில் மேற்படி அரசியல்வாதி இடமாற்றங்களைத் தடுக்கின்றார். அந்த அதிபர், அதே பாடசாலையில் முன்னர் இருந்த போது பல மோசடிக் குற்றச்சாட்டுக்கள் காரணமாக கட்டாய இடமாற்றம் வழங்கப்பட்டவர்' என்று இடமாற்றப்பட்ட ஏனைய அதிபர்கள் தெரிவித்தனர்.

'எமது வலயத்தில் இடமாற்றப்பட்ட 17 அதிபர்களுக்கும் அவர்கள் விரும்பிய பாடசாலைகள் அவர்களின் தரத்துக்கு ஏற்ப வழங்கப்பட்டது. இதில் எந்த முரண்பாடும் கிடையாது.

எந்தவொரு காரணமும் தெரிவிக்காது இடமாற்றத்தை நிறுத்துமாறு கல்வி அமைச்சின் செயலர் பணித்தார். அதனால் இடமாற்றம் நிறுத்தப்பட்டது. இதன் காரணமாக பெரிய நெருக்கடி எதிர்நோக்க நேரிடும்' என்று கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

'கிளிநொச்சி வலய இடமாற்றத்தில் மாறுபாடுகள் உள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டது. அதனால் இடமாற்றம் நிறுத்தப்பட்டது. இடமாற்றப்பட்ட அதிபர் இடையே முரண்பாடுகள் இல்லையென்றால் அதனை நடைமுறைப்படுத்தலாம்' என்றார் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர். (ஓ.5,105)

## ராஜிதவுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு



கொழும்பு, மார்ச் 6

வெள்ளை வான் ஊடகவியலாளர் சந்திப்பு தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் மூன்றாவது சந்தேக நபரான முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்குப் பிணை வழங்கி கொழும்பு பிரதம நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுக்கு எதிராக சட்ட மா அதிபர் தாக்கல் செய்த மீள் பரிசீலனை விண்ணப்பம் தொடர்பான விசாரணை எதிர்வரும் 10ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பம் மீதான விசாரணை நேற்று நடைபெறவிருந்த போதிலும், சட்ட மா அதிபர் சார்பில் மன்றில் முன்னிலையாகும் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் சுகவீனமுற்றிருப்பதால், இந்த விசாரணையை ஒத்திவைப்பதற்கு மேல் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (எ)

## கொரோனோ வைரஸ்

## பாதுகாப்பு வேண்டி விகாரைகளில் வழிபாடு

யாழ்ப்பாணம், மார்ச் 6

கொரோனா பாதிப்பிலிருந்து உலகத்தைப் பாதுகாக்க வேண்டி நாளை சனிக் கிழமை நாட்டின் 25 மாவட்டங்களிலும் உள்ள விகாரைகளில் சிறப்பு வழிபாட்டுக்கு அரசு ஏற்பாடு செய்துள்ளது.

உலகம் முழுவதும் தற்போது அச்சுறுத்தும் கொரோனா வைரஸிலிருந்து உலகம் மீட்சி பெறவும், பாதிப்படைந்தோர் குணமடைவதோடு ஏனைய நாடுகளை அதிலிருந்து பாதுகாத்துக் கொள்ளவும் என்று சிறப்பு சாந்தி பூசையும், பிரித் ஓதுதலும் இடம்பெறவுள்ளது. அரசு இதற்கு நிதி ஒதுக்கியுள்ளது.

புத்தசாசன அமைச்சின் ஊடாக இடம்பெறும் இந்தத் திட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் நயினாதீவு நாகதீப விகாரையிலும், மன்னாரில் முருங்கன் விகாரை, முல்லைத்தீவில் கொக்குளாய் விகாரையிலும், வவுனியாவில் மடுக்கந்தை ஸ்ரீதலதா விகாரையிலும், கிளிநொச்சியில் கரடிப்போக்கு விகாரையிலும் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நாடு முழுவதும் இடம்பெறும் இந்தச் சிறப்பு வழிபாட்டுக்காக அரசு 19 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்துள்ளது. (ஓ.5,105)

## சுகாதாரச் சீர்கேடு:

## உரிமையாளர்களை மாற்றி மாற்றி கூறிய நிறுவனத்துக்கு தண்டனை


யாழ்ப்பாணம், மார்ச் 6

யாழ்ப்பாண நகரில் இயங்கிய உணவகம் ஒன்று ஓராண்டில் மூன்று தடவைகள் சுகாதாரச் சீர்கேடுகளில் சிக்கியபோது, ஒவ்வொரு தடவையும் ஒவ்வொருவரை உரிமையாளர் என்று மாற்றி மாற்றிக் கூறியமையால், மூவரையும் தண்டப் பணத்தை செல்லுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 28ஆம் திகதி யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் 5 உணவகங்கள், வெதுப்பகம், தனியார் கல்வி நிலையம் என்பன நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாக 'சீல்' வைக்கப்பட்டன. காங்கேசன்துறை வீதியில் நகரை அண்மித்த உணவகம் ஒன்றும் 'சீல்' வைக்கப்பட்டது.

அதே உணவகத்துக்கு எதிராக கடந்த ஆண்டு ஆரம்பத்தில் சுகாதாரச் சீர்கேடு தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அதன்போது உரிமையாளர் என்று ஒருவர் தெரிவித்துள்ளார். அதே உணவகத்துக்கு எதிராக கடந்த ஆண்டு நடுப் பகுதியில் மற்றொரு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கு இப்போதும் இடம்பெறுகின்ற நிலையில் உரிமையாளர் என்று இன்னொருவரின் பெயர் வழங்கப்பட்டுள்ளது.


கடந்த 28ஆம் திகதி சீல் வைக்கப்பட்டமை தொடர்பான வழக்குக்கு உரிமையாளர் என்று இன்னொருவரின் பெயரையும் குறித்த உணவகம் வழங்கியுள்ளது. மூவரின் பெயர்களையும் சாற்று ஆவணங்களாக சுகாதாரப் பிரிவினர் நீதிமன்றில் தாக்கல் செய்தனர். உணவகத்துக்கு எதிராக 9 குற்றச்சாட்டுக்கள் விதிக்கப்பட்ட நிலையில் அதற்கு 45 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. மூவர் உரிமையாளர்கள் என்று தெரிவிக்கப்பட்டமையால், மூவரையும் தலா 45 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் செலுத்த மன்று உத்தரவிட்டது. (ஓ.5,105)




சேவலின் வெட்டிய பகுதியில் எந்தத் துண்டு வரும்


# வெள்ளைப் பூக்கள்

பூக்களின் இனப்பெருக்கம் மகரந்தச் சேர்க்கையால் நிகழ்கிறது என்பது நமக்குத் தெரியும். பூக்கள் பல வண்ணங்களில் பூக்கின்றன. பகல் நேரத்தில் பூச்சிகளை ஈர்க்க பூவின் நிறம் பெரும் பங்காற்றும். ஆனால், இரவில் பூக்கும் பூக்களில் எப்படி மகரந்தச் சேர்க்கை நடைபெறுகிறது?



இரவு நேரங்களில் வண்ணம் தெரியாது. அதற்குப் பதிலாக பூக்களில் இருந்து வெளிவரும் நறுமணம் பூச்சிகளைக் கவர்ந்து இழுக்கிறது. இதன் மூலம் மகரந்தச் சேர்க்கை நடைபெறுகிறது. மல்லிகை, முல்லை ஆகிய பூக்கள் இதற்குச் சிறந்த உதாரணம். பகல் நேரத்தில் பட்டாம்பூச்சி, தேனீ, பறவை ஆகியவை பூக்களின் நிறங்களால் கவரப்பட்டு மகரந்தச் சேர்க்கைக்குக் காரணமாக விளங்குகின்றன. இரவு நேரங்களில் அந்துப் பூச்சி, விட்டில் பூச்சி போன்றவை நறுமணக் கவர்ச்சியால் ஈர்க்கப்பட்டு இதற்கு உதவுகின்றன. எனவே இரவு நேரங்களில் பூக்களின் வண்ணத்துக்கு முக்கியத்துவம் இல்லை. இதனால்தான் இரவு நேரங்களில் பூக்கும் பூக்கள் பெரும்பாலும் வெண்மை நிறத்தில் இருக்கின்றன.

# காகமும் நாய்க்குட்டியும்..!!



ஒரு வீட்டில் நாய்க்குட்டியொன்றை எடுத்து வளர்த்து வந்தார்கள். அந்த நாய்க் குட்டி காகத்துடன் நட்பாக இருந்தது. ஒரு நாள் காகம் மிகவும் கவலையுடன் அமர்ந்திருந்தது. இதைக் கண்ட நாய்க் குட்டி காகத்திடம் சென்று.

என்ன காக்கையாரே! ஏன் ஒன்றும் பேசாமல் வருத்தமாக இருக்கிறீர்? என்று கேட்டது.

அதற்கு காகம், மனிதர்கள் மற்றப் பறவைகளை அன்புடன் வளர்க்கின்றார்கள். அவைகளின் செயல்களைப் பாராட்டுகின்றார்கள் ஆனால் என்னை வெறுத்து. கல்லால் எறிந்து துரத்துகிறார்களே ஏன்? என்று கேட்டது காகம்.

இதற்குக் காரணம் உங்கள் தீய குணங்கள்தான். இதை நீங்கள் இல்லாது செய்தால் உங்களையும் அன்பாக நடத்துவார்கள், என்றது நாய்க் குட்டி.

எங்களிடம் அப்படியென்ன தீய குணங்கள் உள்ளன? கடமை, சுத்தம், இப்படிப் பல நல்ல குணங்களில் நாங்கள்தான் சிறந்தவர்கள்!என்று சொன்னது காகம்.

உண்மைதான்! என்றது நாய்க் குட்டி.

பகிர்ந்துண்ணும் பண்பைக் கற்றுத்தந்ததும் நாங்கள்தான்! என்று பெருமையோடு சொன்னது காகம்.

ஆமாம் அதுவும் உண்மைதான்! என்று மறுபடியும் சொன்னது நாய்க்குட்டி.

இப்படி நல்ல குணங்கள் எம்மிடம் இருந்தும், மற்றப் பறவைகளுக்கு உள்ள மதிப்பு எங்களுக்கு இல்லையே ஏன்?

குயில் கூவும்போது அதன் இனிமையை இரசிக்கிறார்கள். மயிலாடும் போது அதை இரசித்துப் பாராட்டுகிறார்கள். கிளியை வீட்டில் வளர்த்து பேசக் கற்றுக் கொடுக்கிறார்கள்.ஆனால் எவ்வளவோ நல்ல குணங்கள் இருந்தும் எம் இனத்தைக் கண்டாலே துரத்துகிறார்களே ஏன்? என்று மீண்டும் கேட்டது காகம்.

ஏன் என்று நான் சொல்லுகிறேன். உங்களிடம் எவ்வளவு நல்ல குணங்கள் இருந்தாலும். உங்களிடம் இருக்கும் சில தீய குணங்களால் தான் மனிதர்கள் உங்களை வெறுக்கிறார்கள், என்று கூறியது நாய்க்குட்டி


அப்படி என்ன தீய குணங்கள்? என்று கேட்டது காகம்.

திருடுதல், ஏமாற்றுதல் என்று சொன்னது நாய்க்குட்டி. காகம் தலை குனிந்தது.

**நீதி: ஒருவரிடம் எவ்வளவு நல்ல பண்புகள் இருந்தாலும். அவரின் ஒரு சிறு தீயசெயல் அவரை, அவரின் அத்தனை நல்ல பண்புகளில் இருந்தும் மறைத்து அந்தத் தீய செயலே முன்னிற்கும்.**



# வரைந்து பழகுவோம்





## பாட்டியம்மா கடையிலே

பாட்டியம்மா கடையிலே
பருப்பு வட சுடையில
காகம் வந்தது இடையில
கௌவிச் சென்றது வாயில
பாட்டியம்மா கடையிலே
பருப்பு வட சுடையில
காகம் வந்தது இடையில
கௌவிச் சென்றது வாயில
நரி அண்ணா வந்தாராம்
பாட்டுப்பாட சொன்னாராம்
நரி அண்ணா வந்தாராம்
பாட்டுப்பாட சொன்னாராம்
வடை கீழ விழுந்ததாம்
நரி தூக்கி சென்றதாம்
பாட்டியம்மா கடையிலே
பருப்பு வட சுடையில
காகம் வந்தது இடையில
கௌவிச் சென்றது வாயில

# விடுகதைகள்

1. கசக்கிப் பிழிந்தாலும் கடைசிவரை இனிப்பான். அவன் யார்?
2. உயரத்தில் இருப்பிடம்.தாகம் தீர்ப்பதில் தனியிடம் அது என்ன?
3. வாயிலே தோன்றி வாயிலே மறையும் பூ அது என்ன?
4. எட்டுக்கால் ஊன்றி இருகால் படமெடுக்க வட்டக் குடைபிடித்து வாறாராம் வன்னியப்பு அது என்ன?
5. ஏரியில் இல்லாத நீர்,தாகத்திற்கு உதவாத நீர், தண்ணீர் அல்ல அது என்ன?
6. கண்ணீர் விட்டு வெளிச்சம் தருவாள் அவள் யார்?
7. ஓர் அரண்மனையில் முப்பத்திரண்டு காவலர்கள் அது என்ன?
8. வெள்ளி ஓடையில கறுப்பு மீன் துள்ளி விளையாடுது?
9. மருத்துவர் வந்தாரு. ஊசி போட்டாரு. காசு வாங்காமல் போனாரு அவர் யார்?
10. ஊரெல்லாம் சுத்துவான், ஆனால் வீட்டிற்குள் வரமாட்டான் அவன் யார்?



## விடைகள்

1.கரும்பு 2.இளநீர்
3.சிரிப்பு 4. நண்டு
5.கண்ணீர் 6. மெழுகுதிரி
7. பற்கள் 8.கண்
9. நுளம்பு 10செருப்பு

## மரண அறிவித்தல்கள்

பிறப்பு
10 ... 08 ... 1936



இறப்பு
02 ... 03 ... 2020

### திருமதி துரையம்மா சீவரட்ணம்

யாழ். கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், கனடா Torontoவை வதிவிடமாகவும் கொண்ட துரையம்மா சீவரட்ணம் அவர்கள் **(02-03-2020)** திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான நாகமணி இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கனகசபை அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சீவரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், கலாமதி, கேதீஸ்வரன், மாலா, இரஞ்சினி, புஸ்பதேவி ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற அரியரத்தினம் மற்றும் அருந்ததி, செல்வராஜா, சுதேசன், சிறிசந்திரா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான நாகரத்தினம், நடராசா, குணசிங்கம், பாலச்சந்திரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான கனகசபை, குணரட்ணம், சிவபாக்கியம், கணேசபிள்ளை, மற்றும் தர்மபூபதி, சந்திரகுமாரி, மகேஸ்வரி, பாலசுப்ரமணியம், சத்தியசிவபாலன் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், ஜீவிதா - திருச்செல்வம், சபிதா - பிரதீபன், இந்துசன், விஜனுசா, ஜெயசன், சோனிகா, மோனிகா, தனுசன், சுமிரா, காலஞ்சென்ற வினோஜன், மற்றும் கிருஸ்ணா ஆகியோரின் பாசமிகு பேத்தியும், தேனுஜன், ஹரிஸ்மன், நேத்திரன், சஷ்மிகா, அபிமன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

தகவல் : அ.கலாமதி(மகள்) கொக்குவில், மேற்கு.

பிறப்பு
27 . 03 . 1943



இறப்பு
04 . 03 . 2020

### திருமதி மேரியோசேப்பின் (மலர்) திருச்செல்வம்

சிறுவிளான் இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட மேரி யோசேப்பின் (மலர்) 04.03.2020 புதன்கிழமை அன்று கனடாவில் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை - ஞானம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான அல்போன்ஸ் மேரி யோசப்பின் அன்பு மருமகளும், அல்போன்ஸ் திருச்செல்வத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மாலா மற்றும் மீரா (ஆசிரியை, தாண்டிக்குளம் பிரமண்டு வித்தியாலயம்), ஸ்ரெலா (கனடா), வேணி (அபிவிருத்தி உத்தியோகத்தர், கச்சேரி வவுனியா), றேணு (சுவிஸ்), செல்டன் (கனடா), ஜெனி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயராசா, சீலன், ஜோண்சன், ஈசன், குமார், ஜெயா, அஜந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும் நிருக்ஷன் சுதேஷன், தனுசன், திவ்யன், கிஷானி, அனுஷன், துஷான், வினோஜன், பிரசாந்தி, தனுஷாந், வித்தி, அபி, றொனால்ட், டெரிக், றேச்சல், டெவின் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.03.2020) சனிக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
**பிள்ளைகள், மருமக்கள்.**

077 161 8767, 077 573 2594, 041 783 477 172

## முதலாம் ஆண்டு நினைவுநாள்

06.03.2020

### திருமதி மேரி நற்குணம் பாலசுப்பிரமணியம்



பூவுலகில் 13.04.1945
மகிமைக்குள் 06.03.2019

"பாரினில் நீர் தேவதைபோல் வந்துதித்தீர்
பாசத்தையும் நேசத்தையும் உறவில் தந்தீர்
நற்குணங்கள் கொண்டமையால் உம் பெயரும்
பொருத்தம்
எம்மைத் துயரத்தில் ஆழ்த்தி இறுதிப்பயணமானீர்
காலங்கள் ஒருவருடம் கடந்த போதும்
கலைந்திடுமோ உம் நினைவு எம் மனதைவிட்டு"

**குடும்பத்தினர் மற்றும் உறவுகள்**
இல.113, பழைய பூங்கா வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

## துயர் பகிர்கின்றோம்



நுணாவில் மேற்கை பிறப்பிட
மாகவும் கனடாவை வசிப்பிட
மாகவும் கொண்ட
**திருமதி**
**பரமேஸ்வரி சோமசுந்தரம்**
நேற்று 05.03.2020 அன்று
கனடாவில் காலமான செய்தி
அறிந்து துயர் அடைவதுடன்
அவரது ஆத்மா
சாந்தியடைய எல்லாம் வல்ல
கொல்லங்கிராய் விநாயகரை வேண்டுகின்றோம்.

கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.
**எழில் குடும்பம்**

## மரண அறிவித்தல்



### திருமதி திருச்செல்வம் விஜயரட்ணம்

(பன்னாலை, தெல்லிப்பழை)

பன்னாலை ஆள்வான் கிணத்தடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திருச்செல்வம் விஜயரட்ணம் நேற்று (05.03.2020) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை விஜயரட்ணம் (காந்தி - அகில இலங்கை திரையரங்குகளின் முன்னாள் முகாமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வைரமுத்து - இராமாசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், சாந்தினி (நெதர்லாந்து), வாகினி (ஜேர்மனி), வினோதினி (உதவிப் பணிப்பாளர், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், யாழ். மாவட்டம்) ஆகியோரின் அன்புத் தாயும், தில்லைராஜன் (குகன் - நெதர்லாந்து), சிவகுருநாதன் (சிவா - ஜேர்மனி), சிறீமேனன் (நூலகம், யாழ். பல்கலைக் கழகம்) ஆகியோரின் அன்பு மாமியும், சாங்கவி, பகல்யா, பிரணவன், தர்மிகா, பானுசன், தமிழாயினி, சந்தோஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், திருவிளங்கம், திருவாதவூரர், காலஞ்சென்ற மாணிக்கவாசகர், சரோஜா (டென்மார்க்), வத்சலா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.03.2020) முற்பகல் 10.00 மணிக்கு பன்னாலையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆள்வான்கிணத்தடி,
பன்னாலை,
தெல்லிப்பழை.

**077 005 8775**

தகவல்:
குடும்பத்தினர்.

# நல்லூர் பிரதேச சபைப் பகுதியில் 6 வலயங்களாக இனி கழிவுகள் அகற்றல்

நல்லூர், மார்ச் 6

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேசங்கள் ஆறு வலயங்களாகப் பிரிக்கப்பட்டு திண்மக் கழிவுகள் அகற்றும் புதிய நடைமுறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இது தொடர்பில் அறிவுறுத்தும் துண்டுப் பிரசுரங்களை சபை பொதுமக்களுக்கு வழங்கி வருகின்றது.

பொது மக்களுக்கு வழங்கப்பட்ட இந்த அறிவுறுத்தலுக்கு அமைய திண்மக் கழிவுகள் யாவும் பிரிக்கப்பட்ட வலய ரீதியாகவே இனி வரும் நாள்களில் அகற்றப்படும். திண்மக் கழிவகற்றல் புதிய பொறிமுறையின் கீழ் நேர அட்டவணைப்படி கழிவு ஏற்றும் வாகனம் ஒலியெழுப்பியவாறு வாரத்தில் இரண்டு தடவைகள் வருகைதரும். பிரிக்கப்பட்ட திண்மக் கழிவுகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

தரம் பிரிக்கப்படாத கழிவுகள் எந்தக் காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. சட்டத்துக்குப் புறம்பாக விதிகள் மற்றும் காணிகளில் கழிவுகள் கொட்டுகின்றமை தடை செய்யப்பட்டுள்ளது.

மீறுவோர் மீது சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் பிரதேச சபை அறிவித்துள்ளது. வலய ரீதியாகப் பிரிக்கப்பட்ட இடங்கள் வருமாறு.

வலயம் 1 - ஆடியபாதம் வீதி, சட்டநாதர் வீதி, சிவன் வீதி, இராமலிங்கம் வீதி, பூநாறி வீதி.

வலயம் 2 - ஆடியபாதம் வீதி, பலாலி வீதி, காங்கேசன்துறை வீதி, இருபாலை கோண்டாவில் வீதி.

வலயம் 3-பலாலி வீதி, ஆடியபாதம் வீதி, செம்மணி வீதி, பருத்தித்துறை வீதி, கோண்டாவில் இருபாலை வீதி.

வலயம் 4 - பூநாறி வீதி, நீதிராசா வீதி, மானிப்பாய் - யாழ்ப்பாணம் பிரதான வீதி, ஆனைக்கோட்டை - குளப்பிட்டி வீதி, பொன்னையா வீதி, முதலி கோவில் வீதி, கே.கே. எஸ்.வீதி. வலயம் 5- இருபாலை - கோண்டாவில் வீதி, பலாலிவீதி, அன்னங்கை வீதி, கே.கே.எஸ்.வீதி.

வலயம் 6- அரியாலை - மணியம்தோட்ட பிரதேசம். (த-17)

---

*மொட்டி...*

உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது எனவும் பொதுமக்கள் முன்னணியின் முக்கியஸ்தர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் முன்னணியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். (ம-22)

*காணா...*

லாச் சம்பவங்களையும் அப்படிச் சொல்ல முடியாது.

காணாமல் போனதாகச் சொல்லப்படுபவர்கள் கனடாவிலும் இருக்கலாம் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ.

பத்திரிகை ஆசிரியர்களுடன் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் இந்தக் கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போரின் இறுதியில் படையினரும் காணாமல் போனார்கள். அவர்களின் பெற்றோர்கள் என்னிடம் வந்தார்கள். அவர்கள் காணாமல் போனதாகச் சொன்னார்கள். அவர்கள் இருக்கின்றனர் எங்கோ இருக்கின்றார்கள் என்றும் கூறினார்கள். அவர்கள் உயிருடன் இல்லை என்று நான் கூறினேன். அந்தப் பெற்றோர் ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் இதை, தமிழ்ப் பெற்றோர்கள் ஏற்றுக் கொள்கின்றார்கள் இல்லை.

காணாமல் போனவர்கள் பலர் தமிழீழ விடுதலைப் புலிகளால் கட்டாய ஆள்சேர்ப்பில் பிடிக்கப்பட்டு புலிகள் அமைப்பில் இணைந்து போர்க் களத்திலேயே காணாமல் ஆக்கப்பட்டனர். இவர்கள் போரில் கொல்லப்பட்டிருக்கலாம். ஒரு சிலர் படையினரால் காணாமல் ஆக்கப்பட்டிருக்கலாம். அதை வைத்து எல்லோரையும் அப்படிச் சொல்ல முடியாது.

காணாமல் போனதாகச் சொல்லப்படுபவர்கள் கனடாவிலும் இருக்கலாம். காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என்று சொல்லப்படுபவர்களுக்கு இறப்புச் சான்றிதழ் வழங்குவதே இப்போது வழி. வேறு வழி இல்லை - என்றார். (ஒ,5)

*அரசியல்...*

கரவாத குற்றச்சாட்டுக் களின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவர் என்று கோத்தாபய ராஜபக்ஷ தேர்தல் அறிக்கையில் உறுதியளித்திருந்தாலும், அரசியல் கைதிகள் என்று யாரும் இல்லை என்று நேற்றுத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவுக்கும் ஊடக நிறுவனங்களின் ஆசிரியர்களும் இடையிலான பத்திரிகையாளர் சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இதில் தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு அவர் பதிலளிக்கையில், அரசியல் கைதிகள் என்று யாரும் இருப்பதாக நான் நம்பவில்லை என்று குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், அவரது தேர்தல் அறிக்கையில், ஆயுதங்களுடன் சரணடைந்த 13 ஆயிரத்து 784 புலிகள் இயக்க உறுப்பினர்களுக்கு மன்னிப்பு வழங்கப்பட்டு, மறுவாழ்வளித்து சமூகமயப்படுத்துவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுத்திருந்தும், போர் கால கட்டத்தின் போது பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு உட்பட்ட இராணுவ உறுப்பினர்கள் தொடர்பில் அவ்வாறானதொரு நடவடிக்கை எடுக்கவில்லை.

போர் தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகியிருக்கும் மற்றும் தண்டனைகளை அனுபவித்து வருகின்ற இராணுவ உறுப்பினர்களைப் போன்றே தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களையும் படிப்படியாக மறுவாழ்வுக்கு உட்படுத்தப்பட்டு சுதந்திர குடிமக்களாக சமூகமயப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

பயங்கரவாத குற்றச்சாட்டுகளின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைவருக்கும் மூன்று மாதங்களுக்குள் வழக்குத் தாக்கல் செய்வதற்கு அல்லது அவர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும், என்று குறிப்பிடப்பட்டிருந்தமை நினைவில் கொள்ளத்தக்கது. (ஒ.5)




## ஓடுகள் விற்பனைக்கு உண்டு

நல்ல பழைய ஓடுகள்
5000 க்கு மேல் விற்பனைக்குண்டு

**தொடர்பு - 077 253 0865**

## நாகபூஷணி திருமண சேவை

பதிவுக் கட்டணங்கள் யாவும் **இலவசம்**
**04.03.2020** முதல் **08.03.2020** வரை
**மணமகள்களுக்கு** மட்டும்.
பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தரப்படும்.

**257, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**
**021 222 9306, 077 138 7596**

## பெயர்மாற்றம்

**பொன்னன் காந்தியப்பா** ஆகிய நான் இன்றுமுதல் எனது பெயரை **பொன்னன் காந்தி** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **காந்தி** என்றே கையொப்பம் இட்டு பயன்படுத்துவேன் என இலங்கை சோசலிச குடியரசுக்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.

**காந்தி**

(CS/31682)(11,17)




## அதிஷ்ட இலாபச் சீட்டு முடிவுகள்

- **முதலாம் பரிசு** - 12828 - குளிர்சாதனப் பெட்டி
- **இரண்டாம் பரிசு** - 04663 - தையல் இயந்திரம்
- **மூன்றாம் பரிசு** - 21823 - 32" LED தொலைக்காட்சி

ஆறுதல் பரிசாக மின்னமுத்தியைப் பெறும் இலக்கங்கள் பின்வருமாறு

| | | | |
|---|---|---|---|
| 00146 | 04918 | 00701 | 06545 |
| 02266 | 13367 | 02298 | 13404 |
| 04007 | 16343 | | |

**பரிசுக்குரியவர்கள் 04.04.2020 ஆம் திகதிக்கு முன்னர் அதிபருடன் தொடர்புகொண்டு ப்ரிசுப்பொருட்களை பெற்றுக்கொள்ளவும்.**

**கிளி/ பளை மத்தியகல்லூரி,
பழைய மாணவர் சங்கம்**

## யா/ வேலணை மத்திய கல்லூரி
## பழைய மாணவர் சங்கம், வேலணை.
## பவளவிழா தொடர்பான கலந்துரையாடல்

மேற்படி விடயம் தொடர்பாக

எமது கல்லூரியின் பவளவிழா இவ்வாண்டு கொண்டாடப்பட இருக்கின்றது. எனவே அது தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் **08.03.2020** ஞாயிற்றுக்கிழமை அன்று முற்பகல் **10.00** மணியளவில் **கல்லூரியின் பிரதான மண்டபத்தில்** நடைபெறவுள்ளதால் கல்லூரியின் பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தலைவர்**
**திரு. சி.கிருபாகரன்**
**(கல்லூரி முதல்வர்)**

**செயலாளர்**
**திரு. சி.அசோக்குமார்**

(J11827) (13.17)

# இலவு காத்த கிளிகள்



**கடந்த ஜனாதிபதி தேர்தலில் அப்போதைய ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியானது, அபிவிருத்தி உத்தியோகத்தர், பட்டதாரி பயிலுநர்கள் மற்றும் உயர்தரத் தேர்ச்சி பெற்றோருக்கான பயிலுநர் வேலைகளுக்காக தேர்தலுக்கு ஒரிரு மாதங்களுக்கு முன்னர் வேலைகளுக்கான விண்ணப்பங்களைக் கோரியது.**

மதுசூதன்

தேர்தல் காலங்கள் வந்தாலே பட்டதாரிகளுக்கு வேலை தருகிறோம் என அரசு கூவி வேலைக்கு அழைப்பதும், தேர்தல்கள் திணைக்களம் நியமனங்களை நிறுத்தி வைக்குமாறு பணிப்பதும் காலம் காலமாக நடைபெற்று வரும் நிகழ்வுகளின் படிமான ஒழுங்குகளாகும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அப்போதைய ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, அபிவிருத்தி உத்தியோகத்தர் பட்டதாரி பயிலுநர்கள், மற்றும் உயர்தரத் தேர்ச்சி பெற்றோருக்கான பயிலுநர் வேலைகளுக்காக தேர்தலுக்கு ஓரிரு மாதங்களுக்கு முன்னர் வேலைகளுக்கான விண்ணப்பங்களைக் கோரியது.

தமிழ் மாணவர்கள், பெற்றோர்கள், உறவுகள் சகிதம் அரச மாளிகைக்கு வெளியே கொட்டும் வெயிலில் போர்க்கால நிவாரணம் பெறுவது போன்று நீண்ட வரிசையில் காத்திருந்து நேர்முக தேர்வுக்குச் சென்று வந்திருந்தனர்.

அப்பாடா நேர்முகத்தேர்வு முடிந்து விட்டது. இனி வேலைதான் என நேர்த்தி வைத்த அத்தனை கடவுளரையும் வரும் பஸ்ஸில் கண்மூடித் தரிசித்து விட்டு வரும் வழியில், முறிகண்டிப் பிள்ளையாருக்கும் ஒரு தேங்காய் ஓங்கியடித்து நிம்மதிப் பெருமூச்சு விட்டு காத்திருக்க, தேர்தல் அறிவிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து தேசப்பிரிய தனது அறிவிப்பை வழமை போல் வெளியிட்டார். அதாவது "தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளதால் தேர்தல் முடியும் வரை அரச நியமனங்கள் எதுவும் வழங்கப்பட கூடாது, அத்தனை நியமனங்களும் நிறுத்தப்பட வேண்டும்" என்ற அறிவித்தல் விடுத்தது அத்தனை மாணவர்களினதும் வயிற்றிலும், அவர்களது பெற்றோரின் வயிற்றிலும் புளியைக் கரைத்தது தான் மிச்சம். தேர்தல் முடிய இலவு காத்த கிளிகளைப் போல் எமது பட்டதாரிகள் மாறிவிடுவார்கள். தற்போது புதிய ஜனாதிபதி பதவியேற்று நூறு நாள்கள் முடிந்த போதும், இன்னும் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்படவில்லை, நினைத்திருந்தால் வழங்கியிருக்கலாம். பட்டதாரிகளின் தரவுகள் எப்போதும் கைவசம் திணைக்களங்களில் இருக்கும். எனினும் பொதுத் தேர்தலை இலக்காகக் கொண்டு சாதாரண தர சித்தி எய்தியோர், பட்டதாரிகளுக்கு அரச வேலை தருவதாக அண்மையில் விண்ணப்பங்கள் கோரினர். அவர்களும் பாய்ந்தடித்து விண்ணப்பித்து அதே களைப்போடு வந்து அமர, கடிதம் வருகிறது , வந்து கொண்டிருக்கிறது என எதிர்பார்த்திருக்க, நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் அறிவிக்கப்பட்டது.

தேர்தல் ஆணையாளர் தேசப்பிரிய, புன்னகையோடு தன் வழமையான அதே அறிவிப்பைச் செய்ய, விண்ணப்பித்து புன்னகைத்து இருந்தவர்களின் முகமும், மனமும் இருசேர கருக இதுவே இவர்களின் தொடர் கதையாக நீள்கிறது.

தேர்தல் காலங்கலில் அரச வேலைகளுக்கு விண்ணப்பம் கோருவதும், அவர்களின் வாக்குகளை இலகுவாகப் பெற்றுவிடலாம் என்ற கட்டமைக்கப்பட்ட நிகழ்ச்சி நிரல்களில் இவ்வாறான வேலை வாய்ப்பு வாக்குறுதிகள் மாறி மாறி வரும் அரசுகளால் வெளிவிடப்படுவது வழமை. ஆனால் என்ன இலவு காத்த கிளிகளாக காத்திருப்பதோ பட்டதாரிகளும், விண்ணப்பித்தவர்களுமே. உண்மையில் கட்டமைக்கப்பட்ட எதிர்கால சிந்தனையல்லாத நாட்டை, நீடித்த, நிலைத்த பொருளாதார கொள்கைகளினூடாக அரசுகள் கொண்டு நகர்த்த முடியாது.

தோற்றுப் போனதால் வந்த இந்த அவலம் இன்னும் இன்னும் தொடரவே செய்யும். இலக்குகள் நோக்கி அரசுகள் பொறுப்புணர்வுடனும், தேசிய நலன் கருதியும் நகர்ந்தால் மட்டுமே, நாடு சுபீட்சமிக்க எதிகாலத்தை நோக்கி சிறு அடியேனும் எடுத்து வைக்க முடியும்.

---

# ஊனம் ஒரு தடையல்ல

## எமக்கு நல்வழிகாட்டியவர் சிவராஜா ஐயா

என்.ஜெயக்குமாரி
வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம்



வைத்திய கலாநிதி சிவராஜா இறையடி சேர்ந்து இன்றுடன் ஓராண்டு கடந்து செல்கின்றது. ஊனம் ஒரு தடையல்ல என்பதற்கு எடுத்துக்காட்டாக எமக்காக அர்ப்பணித்த குருவாக அவரை நான் போற்றுகின்றேன்.

நான் போலியோ நோயால் பாதிக்கப்பட்டு, நடமாட்ட பிரச்சினை உடையவராக இருந்த போதும், இன்று எனது சொந்த உழைப்பில் பலரது மதிப்புகளையும் பெற்று மன நிறைவுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றேன் என்றால் சிவராஜா ஐயா என்ற தனி மனிதனின் உன்னத சேவை தான் அதற்குக் காரணம்.

நோய்கள் ஏற்பட்ட வேளையெல்லாம் எமது எண்ணங்களில் வருவது சிவராஜா ஐயா தான். அச்சமின்றி தொலைபேசியிலேயே நோய்க்கான மருந்து பெற்றோம். மேலதிக சிகிச்சைக்காக பிற வைத்திய நிபுணர்களிடத்திலும் இலகுவாகச் சிரமப்படாது சிகிச்சை பெற்றோம். எமக்கு மட்டுமன்றி எமது உறவினரின் நோய்க்குக் கூட சிவராஜா ஐயாவின் உதவி பெற்றோம். சுற்றுலாவாக வெளிமாவட்டங்களுக்குக் கூட்டிச் சென்றதும், கலை கலாசார நிகழ்வுகள் நடத்தி மகிழ்ச்சிப் படுத்தியதும், சுயமாக வாழ்வதற்காக பல சுயதொழில் பயிற்சிகளைப் பயிற்றுவித்ததும், உடல் வலிமைக்காக இயன் மருத்துவ சேவை வழங்கியதும், மாற்றுத் திறனுக்காக உபகரணங்கள் பெற்றுத் தந்ததும், உள வலிமைக்காக ஆற்றுதல்களையும், பாதுகாப்பையும் வழங்கியதையும் ஓராண்டு கடந்து நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

கூப்பிட்ட குரலுக்கு ஓடி வந்ததும், பிள்ளையைப் போல் பராமரித்து வந்ததும், எமது செயற்பாடுகளுக்குப் பக்கபலமாக இருந்ததும் நன்றியுடன் நினைவு கூருகின்றேன். எமது தன்னம்பிக்கைக்கும், சுய முயற்சிக்கும் அன்புக்கும் உறுதுணையாக இருந்த உங்களை இழந்துள்ளோம். ஓராண்டு நினைவு நாளில் மீண்டும் உங்களின் மகத்தான சேவையை வியந்து நன்றி கூறுகின்றோம்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தள்ளி வைக்க வேண்டியது இவர்களையும்தான்!

தெற்கின் அரசியல் தலைமைகள் தமிழ் மக்களின் கோரிக்கைகள் தொடர்பில் வாக்குறுதிகளை அள்ளி வீசுவதும், பின்னர் அவற்றைக் காற்றில் பறக்கவிடுவதும் வழமையானதே. அதற்குத் தற்போதைய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவும் விதிவிலக்கல்லர்.

எந்தவித விசாரணைகளும் இன்றி நீண்டகாலமாக சிறைகளில் அடைக்கப்பட்டு தங்களின் வாழ்க்கையின் பெரும் பகுதியைச் சிறையறைக்குள் தொலைத்துவிட்ட தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும் என்பது தமிழ் மக்களின் ஏகோபித்த கோரிக்கை.

கடந்த காலங்களில் ஆட்சிப்பீடம் ஏறியவர்கள் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் பல வாக்குறுதிகளை தமிழ் மக்களுக்கு வழங்கியிருந்தபோதும், அவை எதுவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. தற்போதைய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ கடந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டபோது அவரது தேர்தல் அறிக்கையில், ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டிய 3 மாதங்களில் பயங்கரவாதக் குற்றச்சாட்டுக்களின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவர் என்று உறுதியளித்திருந்தார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஏனைய அரசியல் தலைமைகளை விட மாறு பட்டவர் சொன்னதைச் செய்பவர் என அவருடன் சேர்ந்து நின்ற தமிழ் அரசியல்வாதிகளும் ஆதரவாளர்களும் பெரும் பிம்பம் ஒன்றை உருவாக்கியிருந்தனர். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் கோத்தாபய ராஜபக்ஷவுக்கு வாக்களிக்காதிருந்தது முட்டாள்தனமானது என்று கூடக் கூறியிருந்தனர்.

கடந்த வாரம் "உதயன் சஞ்சீவிக்கு" கருத்துத் தெரிவித்திருந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், அரசியல் கைதிகள் விடுதலை கண்டிப்பாக நடக்கும். இந்த விடயத்தில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இருவரும் உறுதியாக இருக்கின்றனர் என்று கூறியிருந்தார். அரசியல் கைதிகள் விடுதலைக்கென பொறிமுறை உருவாக்கப்பட்ட பின்னரே விடுவிக்க முடியும் என்று கூறிய அங்கஜன் இராமநாதன், நாடாளுமன்றத் தேர்தல் முடிந்த பின்னர் தமிழ் அரசியல் கைதிகள் கட்டம் கட்டமாக விடுவிக்கப்படுவார்கள் என்று சமாதானமும் கூறியிருந்தார்.

இப்போது பொதுத் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியாகியுள்ள நிலையில் தான் ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் வழங்கிய உறுதிமொழிக்கு முற்றிலும் மாறான ஒன்றைத் தெரிவித்துள்ளார் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ. ஊடக நிறுவனங்களின் ஆசிரியர்களை நேற்று ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்த கோத்தாபய ராஜபக்ஷ, அரசியல் கைதிகள் என்று எவருமே இல்லை அரசியல் கைதிகள் என்று எவரும் இருப்பதாகத் தான் நம்பவில்லை என்று கூறியுள்ளார்.

தமிழ் மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாது ஆதிக்க மனப்பான்மையுடன் கூறிய கருத்தாகவே இதை நோக்க முடியும். பெரும்பான்மைக் கட்சிகள் தமிழர் விடயத்தில் உளச் சுத்தியுடன் நடந்துகொள்ளவில்லை. தங்களின் அரசியல் ஆதாயத்துக்காக தமிழ் மக்களைப் பகடைகளாக்குகின்றன என்பதற்கான சான்றாக இதைக் கொள்ள முடியும். ஒரு செயலில் கூட வாக்குறுதியை நிறைவேற்ற முடியாத தெற்கு அரசியல் தலைமைகள் தமிழ் மக்களுக்கான நிரந்தரத் தீர்வைத் தாமாகத் தருவார்கள் என்பது முட்டாள்தனமானது. பொறுப்புக் கூறலை வலியுறுத்தும் சர்வதேசம் இனியாவது சரியான பொறிமுறையை அழுத்தத்தைப் பிரயோகித்து தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு இலங்கை அரசை உந்த வேண்டும்.


தேர்தல் காலங்களில் தங்கள் சுயநல அரசியலை முன்னிறுத்தி தமிழ் மக்களுக்கு வாக்குறுதிகளை அள்ளி வீசுவதும் தேர்தலின் பின்னர் வாக்குறுதிகளைத் தூக்கிக் கடாசிவிட்டுச் செல்வதையும் பெரும்பான்மைத் தலைமைகள் வழக்கமாகக் கொண்டிருக்க, பெரும்பான்மைக் கட்சிகளுடன் இணைந்திருக்கும் தமிழ் அரசியல்வாதிகளும் அதற்குத் துணைபோவது வேதனையானது.

தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ள மறுக்கும் பெரும்பான்மைக் கட்சிகளை ஒதுக்கி வைக்கும் அதேநேரத்தில் அந்தப் பெரும்பான்மைக் கட்சிகளுடன் ஒத்திசைந்து நடக்கும் தமிழ் அரசியல்வாதிகளையும் தமிழ் மக்கள் தூரத் தள்ளி வைக்க வேண்டும்.

# மொட்டுக் கட்சியினரே மைத்திரிக்கு எதிர்ப்பு!

கொழும்பு, மார்ச் 5

**முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிர்வரும் நாடாளு மன்றத் தேர்தலில் தாமரை மொட்டு சின்னத்தில் போட்டியிட வாய்ப்பளிக்க வேண்டாம் என்று அந்தக் கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவை உட்கட்சி பிரமுகர்கள் பலர் வலியுறுத்தியுள்ளனர் என்று கூறப்படுகின்றது.**



பொது நிகழ்வுகளில் சர்ச்சைக்குரிய கருத்துக்களை மைத்திரி வெளியிட்டு வருகின்றமையால் தேர்தல் காலத்தில் அதன் தாக்கங்கள் ஏற்படலாம் என்று கருதியே இந்த நடவடிக்கையை எடுக்கவேண்டும் என்று வலியுறுத்தப்படுகின்றது என்றும் அறிய முடிந்தது.

மைத்திரி உள்ளூர் அரசியல்வாதிகளை இலக்கு வைத்து மேற்கொள்ளும் விமர்சனங்கள் அவரின் பழிவாங்கும் உள்ளக நோக்கத்தை காட்டுவதால் முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும் மேற்படி பிரமுகர்கள் மஹிந்தவிடம் சுட்டிக்காட்டியுள்ளனர் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கிடையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய மான பிரமுகர்கள் பலர் தாமரை மொட்டு கட்சியில் இணையபஸில் ராஜபக்ஷவுடன் பேச்சு நடத்தியுள்ளனர். மைத்திரியின் செயற்பாடுகளால் அதிருப்தியடைந்துள்ள தயாசிறி ஜயசேகர உட்பட்ட பலர் எதிர்வரும் தேர்தலில் தாமரை மொட்டின் வேட்பாளர்களாக களமிறங்கயோசித்து வருகின்றனர்.

பொலன்னறுவை மாவட்டத்தில் கூடுதலான வாக்குகளை பெற்று அடுத்த நாடாளுமன்றத்தில் சபாநாயகர் பதவியைப் பெற மைத்திரி யோசனை செய்து வருகிறார் எனச் சொல்லப்படுகிறது. ஆனால் அது அவருக்கு வழங்கப்படும் சாத்தியம் இல்லை என்று அறிய முடிந்தது. (எ)

# இனியபாரதிக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, மார்ச் 6

கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் இனிய பாரதி என்றழைக்கப்படும் குமாரசாமி புஸ்பகுமார் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டபோது, அவரை எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்ற நீதிபதியும் மேலதிக நீதிவானுமாகிய எம்.எச்.எம். ஹம்ஸா இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

2006ஆம் ஆண்டுக்கும், 2009ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில், அம்பாறை - திருக்கோவில் மற்றும் அக்கரைப்பற்று - ஆலையடிவேம்பு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 6 பேரை கடத்திக் காணாமலாக்கியமை தொடர்பில் இனிய பாரதிக்கு எதிராக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

காணாமலாக்கப்பட்ட 6 பேர் தொடர்பில், பாதுகாப்பு அமைச்சு மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் அலுவலகங்களில் செய்த முறைப்பாட்டிற்கு அமைய சந்தேகநபர் மீது 6 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. (எ)

# 1,187 முறைப்பாடுகள் இதுவரையில் பதிவு!

கொழும்பு, மார்ச் 6

அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு இதுவரையில் ஆயிரத்து 187 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. அதே வேளை இன்றுடன் முறைப்பாடுகளைப் பெற்றுக் கொள்வதற்கான காலம் நிறைவடைய உள்ளது.

முறைப்பாடுகளின் அடிப்படையில் முதற்கட்ட விசாரணைகள் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பொலிஸ் பிரிவின் ஊடாக முன்னெடுக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ)

# நெல் காயும் தளம் இன்றி நெற்செய்கையாளர் அவதி

மன்னார், மார்ச் 6

மன்னாரில் நெல் காயப்போடுவதற்குப் போதியளவு தளம் இல்லாததால் வீதிகளில் நெல் காயப்போடும் அவலநிலை நீடிக்கின்றது என்று மன்னார் மாவட்ட விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஏற்கனவே மழை வெள்ளப் பாதிப்பால் செலவுகள் அதிகரித்துக் காணப்படுகின்றது. பல கிலோமீற்றருக்கு அப்பாலுள்ள தளங்களில் காயப்போடுவதற்கு ஏற்றி இறக்கும் செலவுகள் அதிகமாகின்றன. அதனால் விவசாயிகள் நெல் காயப்போடுவதற்கு வீதிகளைப் பயன்படுத்துவதாகக் கூறுகிறார்கள்.

மன்னார் பெருநிலப்பரப்பு விவசாயப் பூமியாகக் காணப்பட்டபோதும் விவசாயிகளின் தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. விவசாய நடவடிக்கையில் மிக முக்கிய தேவையாக உள்ள நெல் காயப்போடும் தளங்கள் போதியளவு இல்லை. அமைக்கப்பட்டிருக்கும் சில தளங்களும் பல கிலோமீற்றருக்கு அப்பால் அதாவது பொருத்தமில்லாத இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. அவை அளவுகளில் சிறியனவாகவும் காணப்படுகின்றன. தற்போது அறுவடைகள் மிகவேகமாக நடைபெற்று வருகின்றன. அதனால் ஒன்றிரண்டு தளங்கள் போதுமானவையாக இல்லை.

நெல் மூடைகளை ஏற்றி இறக்குவதற்கும் வீதிகள் இலகுவாக இருக்கின்றமையால் நெற்செய்கையாளர்கள் வீதிகளைப் பயன்படுத்த வேண்டிய நிலை காணப்படுகின்றது என்று நெற்செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

காப்பெற் வீதிகளும் கொங்கிறீட் வீதிகளும் இல்லாவிட்டால் துன்பப்பட நேரிடும். பொருத்தமான இடங்களில் அதிகளவான நெல் மூடைகளைக் காயப்போடுவதற்கு ஏற்ற வகையில் தளங்கள் அமைத்துத் தருவதற்கு உரிய அதிகாரிகள் ஏற்பாடு செய்யவேண்டும். என்று கோரிக்கை விடுக்கின்றனர். (த-213)



# மகனைத் தேடிப் போராடி இறந்த தாய்க்கு அஞ்சலி

வவுனியா, மார்ச் 6
பத்து வருடங்களாகப் பிள்ளையைத் தேடிப் போராடி வந்த தாய், நேற்றுமுன்தினம் உயிரிழந்த நிலையில், அவருக்கு வவுனியாவில் நேற்று அஞ்சலி செலுத்தப் பட்டது.

பாலசுப்ரமணியம் மங்கையர்க்கரசி (வயது- 72) என்பவரே நேற்றுமுன்தினம் சுகவீனம் காரணமாக உயிரிழந்தார். அவர் இறுதிப் போரின்போது காணாமல் ஆக்கப்பட்ட தனது பிள்ளையான பாலசுப்ரமணியம் அருட்செல்வனை (காணாமல் ஆக்கப்படும்போது வயது 21) தேடிப் போராடி வந்தார்.

வவுனியா புளியங்குளத்தை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட அவர், காணாமல் ஆக்கப்பட்டாரை தேடிக்கண்டறியும் உறவுகளால் வவுனியாவில் நடத்தப்பட்டுவரும் சுழற்சி முறையிலான உணவு ஒறுப்புப் போராட்டத்தில் பங்கேற்றுவந்தார். நேற்றுமுன்தினம் ஆயிரத்து நூற்று பதினொரு நாள்களை எட்டியுள்ள நிலையில், அந்தப் போராட்டத்தில் தொடர்ச்சியாக தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருந்த நிலையில் அவர் உயிரிழந்துள்ளார். (த-110)

# மூன்றிலிரண்டு பெரும்பான்மை கிட்ட ஐ.தே.கட்சி வழிசமைக்கும்

## சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 6
ஐக்கிய தேசியக் கட்சிக்குள் மோதல் உக்கிரமடைந்துள்ளதால் பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவால் இலகுவில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை பெறமுடியும் என்று சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பொதுத்தேர்தல் நெருங்கும்வேளையில் ஐக்கிய தேசியக்கட்சிக்குள் மோதல் உக்கிரமடைந்துள்ளது. இதனால் அக்கட்சியின் உறுப்பினர்கள் இரு அணிகளாக தேர்தலில் போட்டியிடுவதற்கான வாய்ப்புகள் அதிகமாகவே உள்ளன.

மறுபுறத்தில் மத்திய நிலைப்பாட்டைக்கொண்ட ஐக்கிய தேசியக்கட்சியின் ஆதரவாளர்களும் அக்கட்சியின் செயற்பாடுகளால் அதிருப்தியடைந்துள்ளனர். எனவே, இம்முறை மாற்றுத்தேர்வாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கே வாக்களிப்பார்கள்.

இதன்மூலம் அரசமைப்பு மறுசீரமைப்பு உட்பட முக்கிய பணிகளை செய்வதற்கான மூன்றிலிரண்டு பெரும்பான்மை ஆணையை மக்கள் எமக்கு வழங்குவார்கள். அதேவேளை, நான் தேசியப்பட்டியலில் வரமாட்டேன். தேர்தலில் போட்டியிட்டு மக்கள் ஆதரவுடனேயே சபைக்கு வருவேன். மக்கள் நிராகரித்தால் கைவசம் கல்வித் தகைமையும், தொழிலும் இருக்கின்றது. - என்றார். (எ-44)

# தேசியப் பட்டியலில் முக்கிய புள்ளிகள்!

**கொழும்பு, மார்ச் 6**
**மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ், ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி ஆகியோர் தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்றம் வருவார்கள் என நம்பகரமான வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.**

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப்பட்டியல் விவரத்தில் இந்த மூவரின் பெயர்களே முன்னிலையில் உள்ளது என்றும் ஏனையோரின் பெயர்களும் பரிசீலிக்கப்பட்டு வருகின்றனதாகவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

அத்துடன், பஸில் ராஜபக்ஷ, விமல் வீரவன்ஸ ஆகியோர் தேர்தல் வழி நடத்தும் குழுவில் அங்கம் வகிப்பதால் இவர்களும் தேசியப் பட்டியல் ஊடாகவே நாடாளுமன்றம் வரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேவேளை, அம்பாந்தோட்டை மாவட்டத்தில் போட்டியிடும் தனது அண்ணன் சமல் ராஜபக்ஷ, மகன் நாமல் ராஜபக்ஷ ஆகியோரின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்காகவே இந்த முறையும் அங்கிருந்து வெளியேறி, மஹிந்த ராஜபக்ஷ குருநாகலில் போட்டியிடுகிறார் எனக் கூறப்படுகின்றது.

இதற்கிடையில் தமக்கு தேசியப்பட்டியல் வாய்ப்பு வேண்டும் என சஜித் பிரேமதாசவிடம் அவரின் சகாக்கள் பலர் கோரிக்கை விடுத்துள்ளனர் எனத் தெரியவருகின்றது.

முக்கியமாக தமிழ் முற்போக்கு கூட்டணி, முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஹெல உறுமய ஆகியவற்றுக்கு தலா ஒரு தேசியப்பட்டியல் வீதம் வழங்குவதற்கு சஜித் பச்சைக்கொடி காட்டியுள்ளார். (எ-44)






# சர்வதேச சித்த மருத்துவ கண்காட்சி நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மார்ச் 6
சர்வதேச சித்த மருத்துவ ஆராய்ச்சி மாநாடும், கண்காட்சியும் கைதடி சித்த மருத்துவ வளாகத்தில் நேற்று ஆரம்பமானது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சித்த மருத்துவ அலகு மற்றும் வடக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம் ஆகியவற்றின் இணை ஏற்பாட்டில் “சித்த மருத்துவத்தினூடான ஆரோக்கிய வாழ்வு “ என்னும் தொனிப்பொருளில் கைதடி வளாகத்தில் கண்காட்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாளை மறுதினம் வரை நடைபெறவுள்ள கண்காட்சியில் ,சித்த மருத்துவத்தின் வரலாறும் அதன் புத்துயிர்ப்பும், நோய் பற்றிய விளக்கமும் அதற்கான தீர்வும், மருத்துவ மூலிகைகளின் காட்சிப்படுத்தல், பாரம்பரிய உணவுகளின் காட்சிப்படுத்தல், சித்த மருத்துவ விற்பனை ,குழந்தைகள் மற்றும் மகளில் தொடர்பான பிரச்சினைகளும், தீர்வுகளும், வீட்டுத் தோட்டம் ,யோகாசன பயிற்சி முறை உள்ளிட்ட பல்வேறு வகையான விடயங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. “யாழ்ப்பாணத்தில் நடைபெறும் இந்த கண்காட்சி மிகவும் பயனுள்ளது.

உடல் ஆரோக்கியம் மனித வாழ்க்கையின் அடிப்படை. முன்னோர்கள் சிறந்த உணவுப் பழக்க வழக்கத்தைப் பின்பற்றி நீண்ட காலம் ஆரோக்கியமாக வாழ்ந்தார்கள். ஆனால் இன்று அவ்வாறு இல்லை. விஞ்ஞான வளர்ச்சி நாட்டின் அபிவிருத்தி என்று பல மாற்றங்கள் வந்தாலும், புதிய நோய்கள் பரவி வருகின்றன. அதற்கு மருந்துகளைக் கண்டு பிடிப்பதும் கடினமாக உள்ளது. உடல் ஆரோக்கியத்துக்குத் தேவையான பொருள்கள் இயற்கையாகவே எமது சூழலில் உள்ளன. ஆனால் நாம் அவற்றைக் கண்டு கொள்ளாமலும், பலவற்றைப் பயன்படுத்தாமலும் உள்ளோம். ஆகவே எமது பாரம்பரியம் என்ன? முன்னோர்கள் எவ்வாறு இயற்கையுடன் ஒன்றித்து வாழ்ந்தார்கள், அவர்களின் உணவுப் பழக்க வழக்கம் என்ன? என்பது தொடர்பில் எமது இளம் சந்ததியனருக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். நோய் வரும் முன் காப்போம் என்று கூறுவார்கள். ஆனால் நாம் நோய் வந்த பின்னர் அதனை எவ்வாறு குணமடைய செய்வது என்பது தொடர்பில் வாழ்ந்து வருகின்றோம்.“ என்று வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்தார்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் தகுதி வாய்ந்த அதிகாரி பேராசிரியர் கெ.கந்தசாமி,வடக்கு மாகாண பிரதி முதன்மை செயலர் ஏ.பத்திநாதன,மதிப்புறு விருந்தினர்களாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் கெ.தெய்வேந்திரம்,யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பேராசிரியர் ஜி.மிகுந்தன் உட்பட மாணவர்கள்,மருத்துவர்கள்,ஆசிரியர்கள்,பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (க-7-159)

# விசவாயுவை சுவாசித்ததால் 70 மாணவர் பாதிப்பு

கொழும்பு, மார்ச் 6
விசவாயுவைச் சுவாசித்ததால் சுமார் 70 பாடசாலை மாணவர்கள் பாதிக்கப்பட்ட நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களின் சிகிச்சைகளின் பின்னர் அங்கிருந்து சென்றுள்ளனர் என்று வாரியப்பொல மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

வாரியப்பெல பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றுக்கு அருகிலிருந்த குப்பையில் பரவிய தீயிலிருந்து இந்த விசவாயு பரவியுள்ளது. பாடசாலையில் கல்விச் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்த மாணவர்கள் விசவாயுவைச் சுவாசித்ததால் பாதிக்கப்பட்டனர். வைத்தியசாலைக்கு சிகிச்சை பெற வந்த 70 மாணவர்களில் 5 மாணவர்கள் தொடர்ந்தும் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சைபெற்று வருகின்றனர் என்றும் ஏனையவர்கள் சிக்சை பெற்று அங்கிருந்து திரும்பியுள்ளனர் என்றும் மருத்துவமனைத் தகவல்கள் தெரிவித்தன.

வெளியேறிய விசவாயு தொடர்பாக எந்தவிதத் தகவலும் தெரியாத நிலையில் சம்பவம் தொடர்பில் வாரியப்பொல பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# சிங்கள வேட்பாளரை மட்டும் தெரிவு செய்யுமாறு அழுத்தம்

## நாட்டின் அரசியல் நிலைமை மோசம் என்கிறார் சத்தியலிங்கம்



**வவுனியா, மார்ச் 6**

**ஜனாதிபதித் தேர்தல் வெற்றிக்குப் பின்னர் நாட்டின் அரசியல் நிலைமை ஆபத்தானதாக மாறியுள்ளது. இந்த நாடு பௌத்த சிங்களவர்களுக்கு மட்டுமே உரித்தானது என்ற கடும்போக்கு நிலை பெரும்பான்மை மக்களிடம் உருவாக்கப்பட்டுவருகின்றது. பௌத்த சிங்கள வேட்பாளர்களை மட்டும் தெரிவுசெய்யும்படி பெரும்பான்மை சிங்கள மக்களிடம் பௌத்த துறவிகள் கோரிக்கை முன்வைத்து வருகின்றமை இவற்றுக்குச் சிறந்த உதாரணம்.**

இவ்வாறு தெரிவித்துள்ளார், வடக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சரும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வவுனியா மாவட்டத்தலைவருமான மருத்துவர் ப.சத்தியலிங்கம்.

வவுனியா குடியிருப்பில் அமைந்துள்ள கட்சியின் அலுவலகமான தாயகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கட்சியின் பொதுக் குழுக் கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பல்லின சமூகங்கள் வாழும் நாட்டில் இவ்வாறான நிலைமை இருப்பதானது சிறுபான்மை மக்களின் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கியுள்ளது. வன்னித்தேர்தல் தொகுதியைப் பொறுத்தவரையில் மூவினங்களும் வாழுகின்ற பகுதி. தமிழ் மக்களே அதிகமாக வாழுகின்றனர். சிங்கள, முஸ்லிம் மக்கள் எண்ணிக்கையில் குறைவானவர்களே காணப்படுகின்றனர். எனவே பெரும்பான்மைக் கட்சிகளின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் வெற்றிபெறுவதற்கு அவர்களுடைய வாக்குகள் மட்டும் போதா. எனவேதான் தமிழ் மக்களின் வாக்குகளைச் சேகரித்துக் கொடுப்பதற்காக அரசஆதரவுக் கட்சிகள், குழுக்கள் களத்தில் இறக்கிவிடப்பட்டுள்ளன. இவர்களால் ஒருபோதும் வெற்றி பெறமுடியாது. இதுதொடர்பில்தமிழ் மக்கள் மிகஅவதானமாக இருக்கவேண்டும்.

வன்னி தேர்தல் மாவட்டத்தில் திட்டமிட்ட வகையில் இனப்பரம்பலை மாற்றியமைக்கும் நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. வவுனியா மாவட்டத்தில் செட்டிகுளம், கீழ்மல்வத்து ஓயா திட்டம், நெடுங்கேணியில் நடைபெற்றுவரும் சிங்களக் குடியேற்றம், முல்லைத்தீவு மணலாறு குடியேற்றம் மற்றும் மகாவலி 'எல்' வலயம் என்பனவற்றில் தமிழ் மக்களின் இருப்பைக் கேள்விக்குறியாக்கியுள்ளது. வடக்கில் 2013இல் மாகாண சபை உருவாக்கப்பட்ட பின்னர் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் நடைபெறுகின்றன. இவை ஓரளவு குறைந்திருந்தாலும் எதிர்காலத்தில் மீள ஆரம்பிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. - என்றார். (த-110)

# ரணிலை கைது செய்க: வலியுறுத்துகிறது சு.க.!

கொழும்பு, மார்ச் 6

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை உடனடியாகக் கைது செய்ய வேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் வீரகுமார திசாநாயக்க வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

மத்திய வங்கி கொள்ளை தொடர்பாக ரணில் விக்கிரமசிங்கவை கைது செய்யப்பட வேண்டும் என்பதே எமது எண்ணமாகும்.

அது மாத்திரமின்றி இந்த மோசடிகளுடன் வேறு எவராவது பங்குக் கொண்டுள்ளாரா?. இதன்போது மோசடி செய்யப்பட்டுள்ள பணத்திற்கு என்ன நடந்துள்ளது?. இந்த சொத்துகளை மீளப் பெறுவது எவ்வாறு என்பது தொடர்பாகவும் ஆராய்ந்துப் பார்த்து. மோசடிச் செய்யப்பட்ட சொத்துக்களை மீளப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இந்த மோசடிகள் தொடர்பான தடயவியல் அறிக்கை, ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை என்பன வெளியிடப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பான விசாரணைகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை என்று பலரும் தெரிவித்து வந்தனர்.

அவற்றை ஆதாரமாக கொண்டு சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்றும் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளுக்கு எதிரான தண்டனைகளை பெற்றுக் கொடுக்குமாறும் சட்டமா திணைக்களத்துக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம். என்றார். (எ)

# பிரதேச சபை அதிகாரிக்கு மிரட்டல் விடுத்து கடிதம்

## சுன்னாகம் பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 6

வலிகாமம் தெற்கு பிரதேச சபையில் பணியாற்றும் பெண் உயர் அதிகாரி ஒருவருக்கு மிரட்டல் விடுத்துக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்றும் இது பற்றி சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

வலி.தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட இணுவிலில் பிரதேச சபையின் அனுமதி எதுவும் பெறாமல் கட்டடம் கட்டப்பட்டு வந்துள்ளது.

அந்தக் கட்டடத்துக்கு உரிய அனுமதியைப் பெறுமாறு பிரதேச சபையின் உபஅலுவலகத்தில் பணியாற்றும் பெண் பொறுப்பதிகாரி கட்ட உரிமையாளருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். இரண்டு மூன்று தடவைகள் அறிவுறுத்தல் வழங்கியும் இன்றுவரை கட்டடத்துக்கு உரிய அனுமதி பெறப்படவில்லை.

இந்நிலையில் வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் உபஅலுவலகப் பொறுப்பதிகாரி அந்தக் கட்டடத்தை அப்புறப்படுத்துவதற்குச் சபையிடம் அனுமதி கோரியுள்ளார்.

பிரதேச சபைக்குரிய அனுமதி பெறாமல் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளதால் அந்தக் கட்டடத்தை அப்புறப்படுத்துமாறு தவிசாளர் உத்தரவு பிறப்பித்துள்ளார். இந்த நிலையிலேயே எச்சரிக்கைக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அதில், "அதிகாரியான நீங்கள் தேவையில்லாத விடயங்களில் தலையிடவேண்டாம். அவ்வாறு தலையிட்டால் முன்னர் இருந்த பொறுப்பதிகாரிக்கு நடந்ததே உங்களுக்கும் நடக்கும்" என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட பெண் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு செய்துள்ளார். பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (த-20)

# தெல்லிப்பழையில் நவீன மயப்படுத்தப்பட்ட கூட்டுறவு கிராமிய வங்கி

## நாளை வைபவ ரீதியாக திறப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 6

தெல்லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிக் கட்டடம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்படும்.

சங்கத்தின் தலைவர் என்.கனேசன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் கடற்றொழில் நீரியல் வள அமைச்சர் டக்ளஸ் தேவானந்த முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு புதிய கட்டடத்தைத் திறந்து வைப்பார்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ.வாகீசன், தெல்லிப்பழைப் பிரதேச செயலர் சிவஸ்ரீ ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக வலி.வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன், மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திருமதி எஸ்.சியாமளா, பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ்.தெய்வேந்திரம், தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் என்.உமாகரன், வலிகாமம் கொத்தணியின் தலைவர் எஸ்.செல்வராசா ஆகியோர் கலந்து கொள்வர்.

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இந்தக் கூட்டுறவுக் கிராமிய வங்கி நவீனமயப்படுத்தப்பட்ட கணினிமயமாக்கல் வசதியுடன் திறந்து வைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-17)

# உழைக்கும் சமூகத்தில் இருந்து பிரதிநிதியை தெரிவு செய்வோம்

## மக்கள் மேம்பாட்டு ஐக்கிய முன்னணி அழைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 6

உழைக்கும் மக்களை ஆட்சியாளர்கள் இன, மொழி, மத, வர்க்க, பிரதேச, சாதி, பால் அடிப்படைகளில் பிரித்துப் பிளவுபடுத்தி, தமது ஆளும் வர்க்க அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றனர். அதனால், உழைக்கும் மக்களுக்கு அரசியல் அதிகாரம் என்பது எட்டாக் கனியாகவே இருந்து வருகின்றது. இந்தத் தேர்தலில் அவர்களுக்கு வாய்ப்பு வழங்க ஒன்றிணைவோம்.

இவ்வாறு மக்கள் மேம்பாட்டு ஐக்கிய முன்னணி அழைப்பு விடுத்துள்ளது. இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- வடக்கு கிழக்கு உட்பட நாட்டின் நாலா திசைகளிலும் வாழ்ந்து வரும் உழைக்கும் மக்கள் பல்வேறு நிலைகளிலும் ஒடுக்கப்படுவோராகவே வாழ்ந்து வருகின்றனர்.

தெற்கில் சிங்கள பௌத்த பேரினவாத, ஆளும் வர்க்க சக்திகள் மாறி மாறி ஆட்சி அதிகாரத்தில் இருந்து வருகின்றன, ஆனால், இதுவரை உழைக்கும் மக்களின் எந்தவொரு பிரச்சினையும் தீர்த்து வைக்கப்படவில்லை. நாட்டின் பொருளாதாரப்பிரச்பினைகளுக்கோ அல்லது தேசிய இனப்பிரச்சினைக்கோ தீர்வு எதுவும் காணப்படவில்லை.

வடபுலத்துத் தமிழ் மக்கள் மத்தியில் நிலம், இருப்பிடம், தொழில், கல்வி, சுகாதாரம் போன்றவற்றில் வளர்முக நிலையில் இருக்கும் உழைக்கும் மக்களில் ஒரு பகுதியினர், சாதி அடிப்படையிலான புறக்கணிப்புகள், பாரபட்சங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

எனவே, நாம் அரசியல், சமூக, பொருளாதார, கல்வி, பண்பாட்டு விழிப்புணர்வு பெற்று முன்னிற்க வேண்டும். உழைக்கும் மக்களின் அதிகாரம் என்ற இலக்கை அடைவதற்கான ஆரம்பத்தைத் தோற்றுவிக்க நாம் அனைவரும் ஐக்கியப்பட்டு அடி எடுத்து வைப்போம் - என்றுள்ளது. (க)

# பளை மிருக வைத்தியசாலையில் மருத்துவர் இல்லாததால் சிரமம்

## கால்நடை வளர்ப்போர் சுட்டிக்காட்டு

**கிளிநொச்சி, மார்ச் 6**

**பளை பிரதேச கால்நடை மிருக வைத்தியசாலையில் வைத்தியர்கள் ஒரு வாரமாகக் கடமையில் இல்லை. இதனால் கால்நடைகளுக்கு வைத்தியம் பார்க்க பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றோம் என்று பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.**




பளை பிரதேச ஒட்டுமொத்தக் கிராமங்களின் கால்நடைவளர்ப்போர் இந்த வைத்தியசாலையை நம்பி வாழ்கின்றனர். மருதங்கேணி, தாளையடி போன்ற இடங்களில் இருந்தும் தமது கால்நடைக்கான சிகிச்சைகளுக்குக் கொண்டு வருபவர்களும் உள்ளனர்.

கடந்த ஒரு வாரகாலமாக வைத்தியசாலைக்கு ஆடுகள், மாடுகள், வளர்ப்பு நாய்களுக்குச் சிகிச்சை அளிக்க மக்கள் கொண்டு செல்வதும், மருத்துவர்கள் இல்லையெனத் திரும்பிச் செல்லும் நிலைமை தொடர்கிறது. இதனால் பெறுமதிமிக்க கால்நடைகள் உயிரிழக்கின்றன.

இது தொடர்பாக பளை கால்நடை வைத்தியசாலையினரைத் தொடர்பு கொண்டு கேட்ட போது, இரு வைத்தியர்கள் கடமையில் உள்ளனர். அவர்கள் இருவரும் பரீட்சை ஒன்றுக்காகச் சென்றதன்காரணத்தால் இந்தநிலைமை ஏற்பட்டுள்ளது. மாற்று வைத்தியர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார் - என்றனர்.

நியமிக்கப்பட்ட வைத்தியர் கடமைக்கு வருகை தரவில்லை. அதனால் கால்நடைகளை கிளிநொச்சிக்குக் கொண்டு சென்று வைத்தியம் பார்க்க வேண்டியுள்ளது என்று மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (க-6)

## பெற்றதைப் பகிர்வோம்

தவக்கால சிந்தனை

நாம் கேட்பவற்றை வழங்கச் சித்தமானால் நிச்சயம் இறைவன் கொடுப்பார் என்ற அசையாத நம்பிக்கையில் எழுப்பப்படுவதே வேண்டுதலாகும். இடைவிடாத இறை வேண்டுதல் குறைவுபடாத அருளைத் தரும். ஏனெனில் கேட்போர் எல்லாரும் பெற்றுக் கொள்கின்றனர். தேடுவோர் கண்டடைகின்றனர். தட்டுவோருக்குத் திறக்கப்படுகிறது (மத்7:8).

நாம் கேட்பது இறைஞானமாகவும் தேடுவது மீட்பாகவும் தட்டுவது இறையரசின் வாயிற்கதவாகவும் இருந்தால் அப்பத்தைக் கேட்கும் போது கல்லையும் மீனைக் கேட்டால் பாம்பையும் கொடுக்காது நாம் கேட்பவற்றை நிறைவாகக் கொடுப்பார் இறைவன். நாம் பெற்றுக்கொண்ட கொடைகளை பத்திரப்படுத்தி மூடி வைக்காது பிறருக்கும் பயன்பட பகிர வேண்டும். பிறர் உங்களுக்குச் செய்ய வேண்டும் என விரும்புகிறவற்றை எல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள் என இயேசு அழைப்புவிடுக்கின்றார்.

பெற்றுக் கொள்வதை விட கொடுத்தலே பேறுடைமை (தீப 20:35). நம் ஆண்டவர் இயேசுவின் போதனையில் பிறருக்குக் கொடுத்தல், ஏழைகளுக்கு உதவுதல், பசித்தோருக்கு உணவளித்தல் பற்றியே அதிகமாக உரைத்துள்ளார். திருத்தூதர்களும் ஏழைகளுக்கு உதவும் புண்ணியத்தையே வலியுறுத்தியுள்ளனர். எமக்கும் சமூகத்துக்கும் நலம்பயக்கும் வரத்தையே நாம் இறைவனிடம் கேட்க வேண்டும். அவரும் அதனை மகிழ்வோடு அருளுவார்.

**எஸ்.யேசுதாஸ், கொழும்புத்துறை.**

# சுமந்திரன் தன் கருத்தை மீளப்பெறவே வேண்டும்

## சிவசக்தி ஆனந்தன் கூறுகின்றார்

வவுனியா, மார்ச் 6

"தமிழீழ விடுதலைப் புலிகள் குறித்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் பொதுவெளியில் தெரிவித்த கருத்தை மீளப் பெற்றுக் கொள்ள வேண்டும்" என்று ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

தமிழீழ விடுதலைப் புலிகள் இறுதி வரையில் விடுதலைக்கான ஒரே வழியாக ஆயுதப் போராட்டத்தையே முன்னிலைப்படுத்தியிருந்தனர்.

சுமந்திரனின் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான கருத்துக்களால் ஆயுதப் போராட்டத்துக்கு வந்த இயக்கங்கள் மத்தியிலும் பொதுமக்கள் மத்தியிலும் பழைய கசப்பான சம்பவங்களை கிளறி விரிசல்களை ஏற்படுத்தப் பார்க்கின்றார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான மனோ நிலையையும் கொள்கை ரீதியான முரண்பாடுகளையும் கொண்டிருக்கும் சுமந்திரன் போர்ச்சூழல், நெருக்கடியான நிலைமைகள் அனைத்தும் நிறைவுக்கு வந்த பின்னரே அரசியலில் பிரவேசித்தார்.

ஆகவே, விடுதலைப் போராட்டத்தில் வித்தாகியவர்களின் அர்ப்பணிப்பை இவர் உணர்ந்திருப்பதற்கு எந்தவிதமான வாய்ப்புக்களும் இல்லை. விடுதலைப் புலிகளுக்கு எதிரான தனது தனிப்பட்ட கருத்தியலைப் பொதுவெளியில் வெளிப்படுத்தி ஒட்டுமொத்த விடுதலை இயக்கங்களையும் அகௌரவப்படுத்தியுள்ளார்.

கடந்த கால கசப்பான விடயங்களை மீட்டு உயிர்த் தியாகங்களைச் செய்த விடுதலை இயக்க நபர்களைக் கொச்சைப்படுத்தியுள்ளார். ஆயுத விடுதலைப் போராட்டம் சம்பந்தமாக எந்தவொரு கருத்தையும் வெளிப்படுத்துவதற்கு அருகதையற்ற இவர், விடுதலை இயக்கங்களை விமர்சிப்பதானது பௌத்த சிங்கள மேலாதிக்க தரப்புக்களின் கரங்களைப் பலப்படுத்தும் மறைமுக நிகழ்ச்சி நிரலை வலுப்படுத்தும் செயற்பாடாகவே கருத வேண்டியுள்ளது.

ஆயுதப் போராட்டத்துக்கு பிள்ளையார் சுழிபோட்ட இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர்களின் செயற்பாடுகளை அந்தக் கட்சியின் கத்துக்குட்டியாக இருக்கும் சுமந்திரன் போன்றவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டியது காலத்தின் கட்டாயம் - என்றார். (த-110)

# அங்கேயும் இல்லை இங்கேயும் இல்லை

## பட்டதாரிகளின் பரிதாப நிலை

அரசை நம்பி புருசனை கைவிட்ட கதையாக பட்டதாரிகளின் நிலைமை மாறிவிட்டது. அரசின் வேலை வாய்ப்பை நம்பிச் சென்ற பட்டதாரிகளுக்கு இப்போது அதுவும் இல்லாமல், முன்னர் செய்த தனியார் வேலையும் இல்லாது இக்கட்டுக்குள் சிக்கியுள்ளனர்.

பட்டதாரிகள் பலர் தனியார் துறையில் பணியாற்றி வந்தனர். அவர்கள் அரசால் பயிலுநர் ஆள் சேர்ப்புக்கு உள்வாங்கப்பட்டனர். அவர்களுக்கான நியமனக் கடிதங்களும் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலரால் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள சூழலில் இந்த நியமனங்கள் வழங்குவது பொருத்தமற்றது என்று தெரிவித்து தேர்தல்கள் ஆணைக்குழு நியமனங்களை இடைநிறுத்தியுள்ளது. இதனால் பட்டதாரிகள், முன்னர் பணியாற்றிய இடங்களுக்கு மீண்டும் நேற்றுச் சென்றுள்ளனர்.

பட்டதாரிகளுக்கு அங்கும் வேலை இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அரச வேலை கிடைத்துச்சென்றமையால், அவர்களின் வெற்றிடத்துக்கு வேறு நபர்களைப் பணிக்கு அமர்த்தியுள்ளமையால் வேலை வழங்க முடியாது என்று தனியார் நிறுவனங்களின் தொழில் வழங்குநர்கள் தெரிவித்துள்ளனர். இதனால் பட்டதாரிகள் அங்கேயும் வேலை இல்லாமல் இங்கேயும் வேலை இல்லாமல் திண்டாட்டத்துக்குள் தள்ளப்பட்டுள்ளனர். (ஒ.5.105)



# மணலுக்குள் மரம்; கடத்தல் முறியடிப்பு

கிளிநொச்சி, மார்ச் 6

சூட்சுமமான முறையில் மரம் கடத்தினர் என்ற குற்றச்சாட்டில் டிப்பர் வாகன சாரதிகைதுசெய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி கல்லாறு பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு சட்டவிரோதமாக டிப்பரில் மணல் ஏற்றி அதற்குள் மரக் குற்றிகளை மறைத்து யாழ்ப்பாணத்துக்குக் கடத்தியபோதே பிடிபட்டார்.

முரசுமோட்டையில் வைத்து நேற்று முன்தினமிரவு 11மணியளவில் பொலிஸ் விஷேட அதிரடிப்படையினர் டிப்பரை வழிமறித்துச் சோதனையிட்டனர். அதன்போதே கடத்தல் தெரியவந்தது. சாரதி சான்றுப்பொருள்களுடன் கிளிநொச்சிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். 6 முதிரை மரக்குற்றிகள், 24 தேக்கு மரக்குற்றிகள் என்பன சூட்சுமமான முறையில் கடத்தப்பட்டமை தெரியவந்தது. (த -214)



ஐக்கிய நாடுகளுக்கான அரசியல் மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான விவகாரப் பணிப்பாளர் மேரி ஜெமஸ்டிடா, யாழ் மாநகர சபை முதல்வர் இ.ஆனல்ட் மற்றும் ஆணையாளர் த.ஜெயசீலன் மற்றும் உத்தியோகத்தர்களை நேற்றுச் சந்தித்தார். (க-111)

# கோத்தாபய மாற்றுவார்: உவிந்து நம்பிக்கை

கொழும்பு, மார்ச் 6
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ நாட்டை மாற்றியமைக்க விரும்புகிறார் என்று ஜே.வி.பியின் நிறுவுநர் ரோஹண விஜேவீரவின் மகன் உவிந்து விஜேவீர தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்துள்ளதாவது:-
தேர்தலில் போட்டியிடுவது குறித்து இன்னமும் முடிவுசெய்யவில்லை. நாட்டுக்கும் தேசியவாதத்துக்கும் ஊக்கமளிக்கும் ஒரு தலைமையைத் தேர்ந்தெடுப்பேன்.

பெரும்பான்மையான மக்களுக்கு ஜனாதிபதி மீது நம்பிக்கை உள்ளது. அவரால் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்று நான் நம்புகிறேன். நாட்டின் முன்னேற்றத்துக்கு பங்களிக்கக் கூடிய படித்த மற்றும் அறிவார்ந்த வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்குமாறு மக்களைக் கேட்டுக் கொள்கிறேன்.-என்றார். (ஏ)

# திருநெல்வேலி சந்தையில் 115 கமராக்கள்

திருநெல்வேலி சந்தை வளாகப் பகுதிக்கு 115 வரையான கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப் படவுள்ளன.

நல்லூர் பிரதேச சபையால் கண்காணிப்புக் கமராக்கள் அடுத்த வாரத்தில் பொருத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தையின் உட்பகுதி மற்றும் சந்தை வளாகப் பகுதி போன்றவற்றுக்குக் கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்படும்.

சந்தையில் இடம்பெற்று வரும் திருட்டு மற்றும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில், வியாபாரிகளின் கோரிக்கைக்கு அமைவாக கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்படவுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-17)

# சிரமதானம்

கொழும்புத்துறைப் பகுதியில் உள்ள சமுர்த்திப் பயனாளிகள் இணைந்து பொது இடங்களை சிரமதானம் மூலம் அண்மையில் சுத்தம் செய்தனர்.

ஜே/63 கொழும்புத்துறை, ஜே/62 கொழும்புத்துறை கிழக்கு, ஜே/61 நெடுங்குளம் போன்ற கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த சமுர்த்திப் பயனாளிகள் தத்தமது பகுதிகளில் உள்ள பொது இடங்களைத் தூய்மையாக்கினர்.

கொழும்புத்துறை, இலந்தைக்குளம், வெள்ளவாய்க்கால் பிள்ளையார் ஆலயப்பகுதி, கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலய வளாகம் போன்ற இடங்கள் சிரமதானம் செய்யப்பட்டன. (ஐ-135)

# அரசை நம்பவில்லை என்று தேர்தலில் காட்டிவிடுங்கள்

## இதுவே சர்வதேசத்துக்குத் தேவை என்று கூறுகின்றார் சிவமோகன்



**மன்னார், மார்ச் 6**
**இலங்கை அரசின் கழுத்தை சர்வதேசம் இறுக்கவேண்டுமானால், தமிழ் மக்கள் இலங்கை அரசை நம்பவில்லை என்பதைச் சர்வதேசத்துக்குத் தெரிவிக்க வேண்டும். நடைபெற இருக்கும் பொதுத் தேர்தலில் அதைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும்" என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமேகன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-**

தமிழின அழிப்புக்குப் பொறுப்புக் கூறாமல் இலங்கை அரசு உலக நாடுகளிடமிருந்து தப்பிக்க முடியாது என்று பூனைக்கு தப்பிய சுண்டெலி கோட்டாவின் நெருப்புச் சட்டியில் விழுந்தது போல் ஆகிவிட்டது தமிழர்களின் நிலைப்பாடு.

மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் இருந்த அடக்குமுறையிலிருந்து தப்பிப்பதற்காக மைத்திரியை ஆதரித்த எமது தமிழ் மக்கள், மைத்திரி ரணில் ஊடாக தடைமுகாம்கள், இராணுவ பரிசோதனைகள், புலனாய்வாளர்களின் ஊடுருவல்கள், செய்தியாளர்கள் மீதான அடக்குமுறைகள் என அனைத்தும் நீங்கி வாழத் தொடங்கினர்.

அந்த நிம்மதியைச் சீர்குலைப்பதற்காக ராஜபக்ஷ குழுவினர் பல சூழ்ச்சிகளை மேற்கொண்டு 2018 ஆம் ஆண்டு 53 நாள்கள் குழப்பங்களை ஏற்படுத்தி முன்னால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆசியுடன் ஒரு ஆட்சிக் கலைப்புக்குத் திட்டம் தீட்டினார்கள். அன்றிலிருந்து தொடர்ச்சியாக மஹிந்த சகோதரர்கள் அரசகட்டிலேறுவதற்கு முனைப்புக் காட்டி வந்தார்கள்.

**சூழ்ச்சிகள் அரங்கேறும்**

அடுத்த மாதம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் பெரும்பான்மையை நிரூபிக்க அரசு சூழ்ச்சிகளையும் தேர்தல் வன்முறைகளையும்மேற்கொள்வார்கள்என்பதில் எந்தச் சந்தேகமும்இல்லை. நடைபெற இருக்கும் பொதுத் தேர்தலில் பெரும்பான்மைச் சிங்களவர்களின் ஆதரவைப் பெறுவதற்காகவே ஐ.நா. மனித உரிமைகள் தொடர் ஆரம்பிக்கும்போது நாடாளுமன்றத்தைக் கலைத்தது மட்டுமன்றி, ஐ.நா. தீர்மானங்களிலிருந்தும் இலங்கை விலகுவதாக அரசு அறிவித்தது. -என்றார். (த-213)

### பளை பிரதேச சபை ஆளுகையிலுள்ள

# ஆயுர்வேத வைத்தியத்துறையினர் பணிப்புறக்கணிப்புப் போராட்டம்

பளை, மார்ச் 5
பளை பிரதேச சபையின் ஆளுகையிலுள்ள ஆயுர்வேத வைத்தியசாலை மருத்துவர் மற்றும் பணியாளர்கள் நேற்றுமுன்தினம் முழுவதும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

வைத்தியசாலை இயங்கும் சுற்றாடல் சுகாதாரச் சீர்கேடாகவுள்ளது. நூலக கட்டடத்தின் ஒரு பகுதியில் இந்த வைத்தியசாலை இயங்குகின்றது. அதனருகே உள்ள மலசலகூடங்களில் ஒன்றிலிருந்து துர்நாற்றம் வீசிக்கொண்டிருக்கின்றது. காற்றோட்ட வசதி போதாதுள்ளது என்பன உள்ளிட்ட கோரிக்கைகளைத் தீர்க்கவேண்டும் என்று கோரிக்கை வைத்து பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இது பற்றி ஒரு வருடத்துக்கு முன்னரே சபைத் தவிசாளருக்குக் கடிதம் எழுதியும் எந்தப் பயனும் ஏற்பட்டிருக்கவில்லை என்று வைத்தியர் தெரிவித்தார்.

இதனால் கரைச்சிப் பிரதேச சபை வாயிலில் வைத்தியர் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டார். நேற்று வைத்தியசாலைக்கு வந்த நோயாளர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர். வைத்தியசாலைக்கு புதிய கட்டடம் கட்டித்தருவதாகக் கூறியபோதும், மாற்று இடம் தருவதாகக் கூறியும் இன்னும் வழங்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இது பற்றி பளை பிரதேச சபைத் தவிசாளர் சு.சுரேனிடம் கேட்டபோது, "வைத்தியசாலைக்குப் புதிய கட்டடம் அமைக்க நிதிப் பற்றாக்குறை உள்ளது. அதனால் வைத்தியசாலை முன்னர் இயங்கிய கட்டடம் சீரமைக்கப்படுகின்றது. அதில் வைத்தியசாலை இயங்கவைக்கப்படவுள்ளது. வைத்தியசாலைத் தரப்பினரின் கோரிக்கைகள் விரைவில் நிறைவேற்றப்படும்" என்று தெரிவித்தார். (த-6)






# 1111 நாள்களை எட்டியது உறவுகளின் போராட்டம்

## அரசியலிலிருந்து 3 எம்.பிக்களும் விலகவேண்டும் என்றும் வலியுறுத்து

வவுனியா, மார்ச் 6
சம்பந்தன், சுமந்திரன், சேனாதிராசா ஆகியோர் அரசியலிலிருந்து வெளியேற வேண்டும் என்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நேற்றுமுன்தினம் நடத்திய போராட்டத்தில் வலியுறுத்தினர்.

வவுனியாவில் சுழற்சிமுறை உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் போராட்டம் நேற்றுமுன்தினம் 1111 நாள்களை எட்டியது. அதையொட்டி அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதன்போதே மேற்கண்ட விடயத்தைக் கூறினர். 12.30 மணியளவில் குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது "எங்கள் பிள்ளைகள் எமக்கு வேண்டும், வெளிநாடுகள் தலையிட்டு எமக்குரிய தீர்வைப் பெற்றுத்தர வேண்டும், உங்கள் கைகளில் ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகள் எங்கே, சர்வதேச விசாரணை வேண்டும்" போன்ற பல்வேறு கோசங்களை எழுப்பியவாறு கதறி அழுது தமது கவலையை வெளிப்படுத்தியிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட உறவுகள் கருத்து தெரிவிக்கும் போது, "போர்க்குற்றம் ஒரு சர்வதேச குற்றம். எனவே இது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் அல்லது சர்வதேச தீர்ப்பாயத்தில் விசாரிக்கப்பட வேண்டும். ஐ.நா. மனித உரிமைகள் பேரவை வடக்கு, கிழக்குக்கு வரவேண்டும். எங்கள் துயரங்களை நேரில் பார்க்க வேண்டும்" என்றும் தெரிவித்திருந்தனர். (த-110)


# பிராமணக்கட்டு குள சீரமைப்பு ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 6
நல்லூர் பிராமணக்கட்டு குளத்தைத் துப்புரவு செய்யும் பணிகளை யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் ஆரம்பித்துள்ளது.
அங்கு அடர்ந்து வளர்ந்திருந்த பற்றைகளும் வெட்டி அகற்றப்பட்டு வருகின்றன. குளத்தில் படர்ந்து வளர்ந்திருக்கும் சல்பீனியா தாவரங்களும் அகற்றப்படுகின்றன. இதற்கென குளத்தில் படகு ஒன்றைப் பயன்படுத்தி சல்பீனியாக்களை அகற்றத் திட்டமிடப்படுகின்றது.
மாநகர வேலை மேற்பார்வையாளர் பூ.ஜெயராசா தலைமையிலான தொழிலாளர்கள் குளத்தைத்துப்புரவுசெய்யும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். குளக்கரைப் பகுதியில் திண்மக்கழிவுகள் கொட்டுவோர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-17)

# கண்டல்காட்டை சுவீகரிப்பதற்கு வனவளத் திணைக்களம் முயற்சி

## *சரசாலைப் பகுதி மக்கள் குற்றச்சாட்டு*

**கொடிகாமம், மார்ச் 6**
**சரசாலை வடக்கு (குருவிக்காடு) கண்டல் காட்டுப் பகுதியை உள்ளடக்கிய 986 ஹெக்ரேயர் காணியையும் கையகப்படுத்தும் நோக்கில் வனவளத் திணைக்களம் எல்லைக் கற்களை நடுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.**



“வீதி அவிருத்திக்காக அந்தக் கற்கள் நடப்படுகின்றன என்றே முன்னர் நினைத்தோம். பின்னர்தான் தெரிந்தது, அது காணிகள் அபகரிப்பு முயற்சி என்று” என அங்குள்ள மக்கள் தெரிவித்தனர்.
சம்பவம் தொடர்பாக பொதுமக்கள் சாவகச்சேரிப் பிரதேச சபைத் தவிசாளர் மற்றும் அதன் உறுப்பினர்களிடம் கடந்த திங்கட்கிழமை முறையிட்டனர்.
நேற்றுமுன்தினம் சபையின் விஷேட அமர்வு நடைபெற்றது.
பல நூறு வருடங்களாக இந்தப் பிரதேசம் மீன்பிடித்தல், விறகு சேகரிப்பு; கால்நடை வளர்ப்பு போன்ற வாழ்வாதாரச் செயற்பாடுகளுக்கு உட்பட்டு வருகின்றது. இந்தப் பகுதியில் மயானம், சவாரித்திடல், வயல் என்பன உள்ளன.
விசாலமான மரங்கள், உள்ளூர் வதிவிடப்பறவைகள் மற்றும் ஏனைய கடல்வாழ் உயிரினங்களின் பிரதான வாழ்விடமாகவும் விளங்குகின்றது.
இந்தப் பகுதியை சமுதாயக் காடாக அறிவிப்பதுடன் பிரதேச செயலகம், உள்ளூர்மட்ட அமைப்புகள் என்பனவற்றுடன் இணைந்து சாவகச்சேரி பிரதேச சபை, உள்ளூர் ஆளுகை பொறிமுறையினூடாக பாதுகாக்க முடிவெடுத்துள்ளது. சூழலுக்கு நட்புறவான சுற்றுலாவுக்கும் நீர்வள அபிவிருத்திக்குமென இந்தப் பகுதி ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளது. இதை முழுமையாகப் பாதுகாக்கும் பொறுப்பை பிரதேச சபை எடுத்துக்கொள்கின்றது.
சரசாலை குருவிக்காட்டுப் பகுதியை சமுதாயக் காடாக அறிவித்தல் வேண்டும் என்று தவிசாளரால் தீர்மானம் முன்வைக்கப்பட்டுள்ளது.
இந்த நிலையில், அந்தப் பகுதியை வனவளத் துறையினர் சுவீகரிக்க முற்பட்டால் மக்கள் எதிர்ப்பு ஏற்படுவதைத் தவிர்க்கமுடியாது என்று வனவளத்துறையினருக்குக் கூறியுள்ளேன் என்று பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் தெரிவித்தார்.
(த-159,9)

# யாழ்.மாவட்ட செயலகத்துக்கு தேசிய ரீதியில் தங்க விருது

2015 ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்ட இணையமயப்படுத்தப்பட்ட நிதிச் செயலாற்றுகையின் மதிப்பீட்டின் கீழ், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்துக்கு தங்க விருது கிடைத்துள்ளது.
கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றில் நடைபெற்ற விருது வழங்கும் நிகழ்வில், யாழ்ப்பாணம் மாவட்ட செயலர் க.மகேசன் கலந்து கொண்டு 97 புள்ளிகளுடன் முதலிடத்தைப் பெற்றமைக்கு தங்கவிருதைப் பெற்றுக் கொண்டார் .
இலங்கையில் உள்ள 844 நிறுவனங்களின் நிதிச் செயலாற்றுகை மதிப்பீடு செய்யப்பட்டது. இதன் பிரகாரம் 2018 ஆம் ஆண்டு நாடாளுமன்றக் கணக்கீடு தொடர்பான நிதிச் செயலாற்றுகையின் தொடர்ச்சியான முன்னேற்றத்துக்கான நாடாளுமன்றப் பொதுக்கணக்குகள் குழுவால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளில், 110 நிறுவனங்களுக்கு அதி உயர் நிதிச் செயலாற்றுகையை வெளிப்படுத்தியமைக்காக விருதுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.
இது தொடர்பில் மாவட்டச் செயலக பிரதம கணக்காளர் ஜே. கில்பேட் குணம் தெரிவித்ததாவது:
நிதி மற்றும் நிர்வாக நடைமுறைகள் வினைத்திறனாக பேணப்பட்டமையால், யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு விருது கிடைத்துள்ளது. மாவட்ட மற்றும் பிரதேச உத்தியோகத்தர்களின் அர்ப்பணிப்பான சேவையால் மாதாந்த மற்றும் ஆண்டு அறிக்கைகள் உரிய அமைச்சு மற்றும் திறைசேரிக்கு உரிய காலத்தில் அனுப்பி வைக்கப்பட்டன. அரச வளங்களை வினைத்திறனாகப் பயன்படுத்தியமை மதிப்பீடு செய்யப்பட்டு தங்கவிருது வழங்கப்பட்டது - என்றார். (க-7)

# நுழைவாயில் திறப்பும் பரிசளிப்பு விழாவும்


ஏழாலை,மார்ச் 6
கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயத்தின் பாடசாலை பெயர் மாற்றம் செய்யப்பட்ட பதினொராவது ஆண்டு நிறைவு நாளில் நுழைவாயில் திறப்பு விழாவும், பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறும்.
பாடசாலை அதிபர் சி.சிவகுமாரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக வடமாகாணக் கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ. இளங்கோவன், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலயத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளர் (வர்த்தகம்) சு.சிறிகுமரன், கௌரவ விருந்தினர்களாக இலங்கை வங்கியின் ஓய்வுபெற்ற வங்கி முகாமையாளர். சி.விக்கினராஜா, வலி வடக்குப் பிரதேச சபையின் முகாமைத்துவ உதவியாளர் இ.சித்திரா ஆகியோர் கலந்து கொள்வர். (த-39)

# ஆக்கத்திறன் பேச்சு போட்டியில் முதலிடம்

ஏழாலை, மார்ச் 6
கடந்த வருடம் அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட தேசிய ஆக்கத்திறன் பேச்சுப் போட்டியில் சுன்னாகம் கதிரமலைச் சிவன் தேவஸ்தான அறநெறிப் பாடசாலை மாணவரும் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் தரம் 7 மாணவியுமான சசிதரன் கிருத்திகா அகில இலங்கை ரீதியில் முதலாம் இடம் பெற்றுள்ளார்.
இவர் இசை, நடனம் ஆகிய போட்டிகளில் சாதனை படைத்திருக்கிறார் என்றும் தெரிவிக்கப்பட்டது. இவரின் சாதனையைப் பாராட்டி மதிப்பளிக்கும் நிகழ்வு சுன்னாகம் கதிரைமலைச் சிவன் கோவிலில் அண்மையில் நடைபெற்றது. (த-39)

# போதியளவு விற்பனையின்றி நிலத்தில் ஊற்றப்படும் ‘கள்’

## *யாழ்ப்பாண மாவட்டத்தில் இந்தநிலை என்று சங்கங்களின் கொத்தணித் தலைவர் தெரிவிப்பு*



யாழ்ப்பாணம், மார்ச் 6
“தற்போதைய பருவப் பெயர்ச்சி காலநிலையால் கள் உற்பத்தி அதிகரித்துள்ளது. எனினும், யாழ்ப்பாணக் குடாநாட்டில் கள் போதிய விற்பனை இன்றி நிலத்தில் ஊற்றவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது” என்று பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணித் தலைவர் எஸ்.செல்வராசா தெரிவித்துள்ளார்.
அண்மையில் மூன்று கள்ளு விற்பனை நிலையங்களும் பூட்டப்பட்டுள்ளன. இதனால் அங்கத்தவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.
அநேகமாக பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் போதிய விற்பனையின்றி கள் பானத்தை ஊற்ற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. கள் விற்பனை நிலையங்கள் பூட்டப்பட்டுள்ளன. இத்தகைய நிலைக்குச் சங்கங்கள் தள்ளப்பட்டுள்ளன. கள் விற்பனை இன்றி ஊற்றப்படுவதால் நூற்றுக்கும் மேற்பட்ட அங்கத்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். முடக்கப்பட்ட கள் விற்பனை நிலையங்களைத் திறந்து வைக்குமாறு பிரதேச செயலர் மற்றும் மாவட்டச் செயலர் ஆகியோரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது- என்றார்.
(த-17)

# வரணியில் 2 பசுக்கள் திருட்டு

கொடிகாமம், மார்ச் 6
தென்மராட்சி வரணியில் நேற்றுமுன்தினம் இரவு இரண்டு பசுக்கள் களவாடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.
வரணி கரம்பைக்குறிச்சி கிழக்கு கொம்புட்டி கோவிலுக்கு அண்மையிலுள்ள காணி ஒன்றில் கட்டப்பட்டிருந்த பசுக்களே களவாடப்பட்டுள்ளன. அவை கன்றுத்தாச்சி மாடுகள் என்றும் தெரிவிக்கப்பட்டது.
இந்தப் பகுதியில் அடிக்கடி மாடுகள் களவுபோகின்றன என்று கால்நடை வளர்ப்போர் கவலை தெரிவிக்கின்றனர். இத்தகைய களவுகளைத் தடுத்து நிறுத்துமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (த-159)

# பதம் பார்த்த குளவிகள் ஒருவர் மருத்துவமனையில்


சாவகச்சேரி, மார்ச் 6
பனை மரத்திலிருந்து வீழ்ந்த ஓலைக்குள்ளிருந்து புறப்பட்ட கருங்குளவிகள் (கொ[illegible]பரப்பான்) அந்த வழியே சைக்கிளில் பயணித்த குடும்பத்தலைவரைத் தாக்கியுள்ளது.
மோசமாகப் பாதிக்கப்பட்ட அவர், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். சம்பவம் மிருசுவில் தெற்கில் நேற்று இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த 44 வயதுடையவரே பாதிக்கப்பட்டார். (த-9)

## ஒன்றுகூடல்

சாவகச்சேரி, மார்ச் 6

நாவற்குழி மகா வித்தியாலயத்தின் 2007 சாதாரண தர மாணவர்கள் நடத்தும் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்குமான ஒன்றுகூடல் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.
2007 சாதாரண தர மாணவத் தலைவர் திருமதி டிலானி துயோஸ்கரன் தலைமையில் நடைபெறும் ஒன்றுகூடலில், பிரதம விருந்தினராக பாடசாலை முன்னாள் அதிபர் திருமதி வசந்தாதேவி மேகலிங்கம் கலந்து கொள்வார். (க-159)

# அதிகரிக்கிறது வெப்பநிலை மாணவர்களுக்கு அறிவுறுத்து



**கிளிநொச்சி,மார்ச் 6**

**கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது வெப்பமான காலநிலை அதிகரித்துக் காணப்படுவதால், பாடசாலைகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருகின்றன என்று மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.**

நாட்டில் சில பாகங்களில் தற்போது வெப்பநிலை அதிகரித்துக் காணப்படுகின்றது. கிளிநொச்சி மாவட்டத்திலும் வெப்ப நிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. அது தொடர்பாக தொடர்ச்சியாக அவதானிக்கப்பட்டு வருகிறது. பாடசாலைகளுக்கு சில அறிவுறுத்தல்கள் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவால் வழங்கப்பட்டுள்ளன.
காலை 9 மணி முதல் 3 மணி வரை வெப்பநிலை அதிகமாகக் காணப்படுவதால், அந்த நேரங்களில் அவதானமாக இருக்கவும். மாணவர்கள் விளையாட்டுகளில் ஈடுபடுதலை அவதானிக்கவேண்டும் என்று மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு அறிவுறுத்தியுள்ளது.
அத்துடன் பொதுமக்களும் அதிகளவு நீரைப் பருகவும். வெப்ப நேரங்களில் வெளியில் செல்வதைத் தவிர்ப்பதுடன் மெல்லிய ஆடைகளை அணியவும். குடை, தொப்பிகள் போன்றவற்றைப் பயன்படுத்தவும் என்று கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது. (க-6)

## இந்திராபுரத்தில் பொது மண்டபம்

பளை,மார்ச் 6

பச்சிலைப்பள்ளியில் அண்மையில் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட இந்திராபுரம் கிராமத்தில், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட நிறுவனத்தால் பொது நோக்கு மண்டபம் அமைக்கப்படவுள்ளது.
அதற்கான அடிக்கல் கடந்த செவ்வாய்க்கிழமை நடப்பட்டது. பிரதேச செயலர் திருமதி ஜெயராணி பரமோதயன் அடிக்கல்லை நட்டார்.
நிகழ்வில் நிறுவனப் பிரதிநிதிகள், பிரதேச செயலக அதிகாரிகள் கலந்து கொண்டனர்.
நிறுவனத்தால் கிராமத்தில் சுமார் 3 கிலோ மீற்றர் நீளமான வீதிகள் புனரமைப்பு, தொழிற்பயிற்சி நிலையக் கட்டம் அமைத்தல் வாழ்வாதார உதவிகள் உள்ளிட்ட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. (க-9)



# செவிப்புலனற்றோர் நிறுவனத்தின் மாநாடு

வவுனியா,மார்ச் 6

அகில இலங்கை செவிப்புலனற்றோர் அபிவிருத்தி நிறுவனத்தின் மாநாடு, வவுனியா மாவட்ட சமூக சேவை அலுவலகத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.
தலைவர் கு.கணநாதன் தலைமையில் நடைபெற்ற மாநாட்டில், பிரதம விருந்தினராக மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் செ.ஸ்ரீநிவாசன் கலந்து கொண்டார்.
வவுனியா, கொழும்பு, திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கண்டி, மன்னார், கிளிநொச்சி, நுவரெலியா மற்றும் இந்தியாவில் இருந்து வருகை தந்த உறுப்பினர்கள் மாநாட்டில் கலந்து கொண்டனர். (க-222)

# கோவில்குடியிருப்பில் தொடர் பகல் கொள்ளை

முல்லைத்தீவு,மார்ச் 6

முல்லைத்தீவு கோவில்குடியிருப்புப் பகுதியில் தொடர்ச்சியாக பகல் கொள்ளைச் சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன என்று கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.
நேற்று முன்தினம் புதன்கிழமையும் பட்டப்பகலில் வீடொன்று உடைத்து கொள்ளைச் சம்பவம் நடந்துள்ளது.
முல்லைத்தீவு நகரப்பகுதியில் அமைந்துள்ள கோவில் குடியிருப்பு வீதி ஒன்றில், கடந்த வாரம் தொடர்ச்சியாக மூன்று வீடுகளில் பகல் கொள்ளைச் சம்பவங்கள் நடந்துள்ளன.
குறிப்பாக பகல் வேளைகளில் வீடுகளில் ஆள்கள் இல்லாத வேளை, வீடு உடைக்கப்பட்டு பெறுமதியான பொருள்கள், நகைகள், பணம் கொள்ளையிடப்பட்டுள்ளன.
இவ்வாறு தொடர்ச்சியாக மூன்று கொள்ளைச் சம்பவங்கள் நடந்துள்ளன. இது தொடர்பில் முல்லைத்தீவுப் பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.
சம்பவங்கள் தொடர்பில் முல்லைத்தீவுப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க-19)

## சிக்கன கடன் கூ. சம்மேளன மகளிர் தின நிகழ்வு

வவுனியா, மார்ச் 6

இலங்கை சிக்கன கடன் கூட்டுறவுச் சம்மேளனமும், சனச அமைப்பும் இணைந்து சர்வதேச மகளிர் தின நிகழ்வை இந்தமுறை வவுனியாவில் நடத்தத் திட்டமிட்டுள்ளது.
வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் நாளை மறுதினம் 8ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கு இது நடைபெறும். (க-222)

வவுனியா த.ம.ம.வித்தியாலய

# புதிய அதிபர் நேற்று கடமை ஏற்றார்



வவுனியா,மார்ச் 6

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் நிரந்தர அதிபராக ஆ.லோகேஸ்வரன் கல்வி அமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் நேற்றுக் காலை தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.
புதிய அதிபரை பாடசாலையின் முன்னாள் அதிபர் த.அமிர்தலிங்கம் மற்றும் வலயக்கல்விப் பணிப்பாளர் முத்து ராதாகிருஷ்ணன் மற்றும் பாடசாலை சமூகத்தினர் வரவேற்றனர்.
பாடசாலை வளாகத்திலுள்ள வித்தியா விநாயகர் ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொண்டதன் பின்னர், அதிபர் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.
பொதுச்சேவை ஆணைக்குழுவின் அனுமதியுடன், தேசிய பாடசாலை அதிபராக கல்வி அமைச்சர் டளஸ் அழகப்பெரும, கடந்த வாரம் கொழும்பில் வைத்து அதிபருக்கான நியமனக் கடிதத்தை வழங்கி இருந்தார்.
புதிய அதிபர் முகாமைத்துவ உதவியாளர், ஆசிரியர், உதவிக்கல்விப்பணிப்பாளர், இறுதியாக மடுக் கல்வி வலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி இருந்தார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-110)

# விழிப்புணர்வுக் கருத்தரங்கு



யாழ்ப்பாணம்,மார்ச் 6

யாழ். லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்களிடையே அதிகரித்து வரும், கைத்தொலைபேசி பாவனை, சமூக வலைத்தளப்பாவனை தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நல்லூர்வடக்குசன சமூக நிலைய மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.
கருத்தரங்கில் தகவல் தொழில்நுட்ப வல்லுநர் ஷர்மிக் யோகராஜா வளவாளராகக் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினார். பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், லயன்ஸ் கழக உறுப்பினர்கள், சனசமூக நிலைய நிர்வாகத்தினர் கருத்தரங்கில் கலந்து கொண்டனர். (க)



வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் ஆலோசனை வழிகாட்டல் பிரிவும், 2020 பொறியியல் தொழில்நுட்பப்பிரிவும் இணைந்து நடத்திய குருதித்தான முகாம் பாடசாலை வளாகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. (க-18)


# தரம் – 5 புலமைப்பரிசில் பரீட்சை
# மாணவர்களுக்கான மாதிரி வினாப்பத்திரம்
## உதயன் பயிற்சிப் பரீட்சை – 1
### பகுதி– I

ஆக்கம்: கோபி.

நேரம்: 45 நிமிடங்கள். பெயர்: ................................ . பாடசாலை: .................................................

01ம் 02ம் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள சொற்களுக்கு பொருத்தமான படத்தின் கீழ் கோடிடுக.


01. மென்மை – அனைத்துமுண்ணி


1)

2)

3)

02. பிரயாணம் - சூழல் பாதுகாப்பு


1)

2)

3)

03. பின்வருவனவற்றுள் இரண்டு உருவங்கள் ஒத்த தன்மையுடையவை. வேறுபட்ட உருவின் கீழ் கோடிடுக.


1)

2)


3)


04. கூட்டில் உள்ள எண்களுக்குப் பதிலாக ஈடுபடுத்தக் கூடிய எண்களைக் கொண்ட கூட்டைத் தெரிவு செய்க.

10+ | 10 + 5 | = 25

1) | 10 x 5 |    2) | 8 + 7 |    3) | 9 x 6 |


05. பின்வரும் உருவில் ஆறு சதுர முகங்களைக் கொண்ட திண்ம உருவைத் தெரிவு செய்க.


1)


2)

3)




06. பின்வரும் உருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?

1) 4
2) 5
3) 10



07. அடுத்து வரும் உருவைத் தெரிவு செய்க.


............?.............


1)

2)

3)

08. குளிர் - நடுக்கம் அது போல புழுக்கம்?............

1) காற்று    2) வியர்வை    3) வெயில்

09. பத்திரிகை – அச்சகம் எனின் துணி?......................


1) தொழிற்சாலை    2) தையற்காரன்    3) ஊசி

10. ஒரு மைதானத்தில் சிவப்பு, பச்சை, மஞ்சள் என்னும் ஒழுங்கில் கொடிகள் நடப்பட்டன. எனில் 55 வது கொடியின் நிறம் யாது?

1) சிவப்பு
2) பச்சை
3) மஞ்சள்

11. படத்தில் உள்ள உருவின் சுற்றளவு, பரப்பளவு என்பவற்றின் ஒழுங்கை தருக.

1) 90cm 20cm$^2$
2) 18cm 20cm$^2$
3) 14cm 20cm$^2$


4cm
5cm

12. வளர்ப்பு நாய்களினால் ஏற்படக் கூடிய அசௌகரியம் ஒன்று.


1) வீடுகளுக்குள் நுழைதல்.
2) உரத்து சத்தமிடல்.
3) பொது இடத்தில் மலம், சிறுநீர் கழித்தல்.

13. முகம் பார்க்கும் கண்ணாடியில் எவ்வெழுத்து மாற்றம் இன்றி தோன்று

1) E    2) U    3) B

14. இவ்வுருவில் உள்ள சதுரங்களின் எண்ணிக்கை யாது?

1) 16
2) 20
3) 30



15. நான்கு அப்பிள் பழம் வாங்கும் பணத்துக்கு எட்டு தோடம்பழம் வாங்கலாம். நான்கு தோடம்பழம் வாங்கும் பணத்துக்கு மூன்று விளாம்பழம் வாங்கலாம். விளாம்பழம் ஒன்றின் விலை ரூபாய் 8.00 எ அப்பிள் பழம் ஒன்றின் விலை யாது?

1) ரூபாய் 12.00    2) ரூபாய் 8.00    3) ரூபாய் 48.00

☺ 16 தொடக்கம் 17 வரையான வினாக்களுக்கு ஒன்றுக்கொன்று தொடர்புள்ள சொற்கள் இடம் பெறும் அடைப்பினைத் தெரிவு செ

16.

| 1) | 2) | 3) |
|---|---|---|
| சாரதி<br>நடத்துநர்<br>பயணிகள் | சட்டத்தரணி<br>பொலிஸ்<br>கைதிகள் | முகாமையாளர்<br>காவலாளி<br>பொதுமக்கள் |

17.


| 1) | 2) | 3) |
|---|---|---|
| விதை<br>செடி<br>மரம் | நெற்பயிர்<br>நெல்<br>அரிசி | பூச்சாடி<br>பூ<br>பழம் |

18. இலக்கம் 90 தொடக்கம் 100 வரை எண்களை எழுதும் போது இலக்க வரும் தடவைகள் எத்தனை?

1) 10    2) 11    3) 12


☺ பின்வரும் எண்கோலத்தை அவதானித்து விடை தருக.

19.




1) 12
2) 144
3) 36

20.




1) 169    2) 108    3) 45

☺ பொருத்தமான கூற்றை தெரிவு செய்க.

21. தினசரி காலையும் மாலையும் கட்டாயம் செய்ய வேண்டியது?
1) குளித்தல் 2) பற்துலக்குதல் 3) சிரித்தல்

22. பிற நாடுகளிலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் முக்கியமான பொருள்?
1) பெற்றோல் 2) தேயிலை 3) பாண்


☺ 23ம் 24ம் வினாக்களுக்கு பின்வரும் கூற்றை அவதானித்து விடை தருக.
ஒரு மோட்டார் வண்டி புறப்படும் போது அதன் தூரம் காட்டும் மானியின் வாசிப்பு **12440km** ஆக இருந்தது. அது இரண்டு மணி நேரம் பயணித்தது. பின்பு மானியின் வாசிப்பு **12815km** காட்டியது. அப்பயணத்திற்கு 3லீற்றர் எரிபொருள் செலவானது.

23. மோட்டார் வாகனம் சராசரியாக ஒரு மணி நேரத்தில் எவ்வளவு தூரம் பயணித்துள்ளது?
1) 375km 2) 187.5km 3) 69.5km

24. இம் மோட்டார் வண்டி 1லீற்றர் எரிபொருளில் எத்தனை km பயணிக்கிறது?
1) 375km 2) 100km 3) 125km

25. விருந்து ஒன்றில் 10 நண்பர்கள் தங்களுக்கிடையே கைகுலுக்கிக் கொண்டனர் அவர்களுக்குள் நிகழ்ந்த கைகுலுக்கல்களின் எண்ணிக்கை யாது?
1) 90 2) 45 3) 9

26. இவ் உருவின் உள்ளே உள்ள செங்கோணங்களின் எண்ணிக்கை யாது?
1) 6
2) 5
3) 8




☺ 27ம் 28ம் வினாக்களுக்கு பின்வரும் கூற்றை அவதானித்து விடை தருக.
ஒரு மைதானத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார்களினதும் முச்சக்கர வண்டிகளினதும் மொத்த எண்ணிக்கை 12 ஆகும். அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார்களின் சக்கரங்களின் எண்ணிக்கை 20 எனின்.

27. அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டிகளின் எண்ணிக்கை யாது?
1) 5 2) 7 3) 8

28. அங்கு எத்தனை கார்கள் காணப்பட்டிருக்கும்?
1) 5 2) 6 3) 9

29. தீபாவளி தினத்தின் போது 8 நண்பர்கள் தங்களுக்கிடையே வாழ்த்து அட்டைகளை பரிமாறிக் கொண்டனர். எனவே அவர்களுக்கிடையே பரிமாறப்பட்டுள்ள வாழ்த்து அட்டைகளின் எண்ணிக்கை யாது?
1) 07 2) 56 3) 15

30. பின்வரும் உருவில் நிழற்றிய உருவின் பின்னத்தை தெரிவு செய்க.
1) 4/6
2) 1/6
3) 2/6



31. தை மாதம் 28ம் திகதி நாட்டப்பட்ட விதை ஒன்று நாட்டப்பட்டு நான்காவது நாள் காலையில் முளைத்தது. விதை முளைத்த திகதி?
1) 31ம் திகதி
2) 1ம் திகதி
3) 2ம் திகதி

32. ஒரு மாணவனின் வீட்டிலிருந்து பாடசாலைக்கு உள்ள தூரம் 500m ஆகும். அவன் காலையில் பாடசாலைக்கு செல்லும் போது மொத்த தூரத்தில் அரைவாசிக்குச் சென்று திரும்பி வீட்டுக்கு வந்து மறுபடியும் பாடசாலைக்குச் சென்றான். அவன் சென்ற மொத்த தூரம் யாது?
1) 750m
2) 1000m
3) 1250m

33. சங்கரின் தங்கை ரேவதி ஆவாள் அவளுக்கு மூன்று சகோதரர்களும், இரு சகோதரிகளும் உள்ளனர். சங்கருக்கு இருக்கும் சகோதரர்களின் எண்ணிக்கையும் சகோதரிகளின் எண்ணிக்கையும் யாவை?
1) சகோதரர்கள் 2 சகோதரிகள் 2
2) சகோதரர்கள் 2 சகோதரிகள் 3
3) சகோதரர்கள் 3 சகோதரிகள் 3

34. குமரன் ஒரு மாபிளை தான் நின்ற இடத்திலிருந்து வடக்கு நோக்கி வீசி எறிந்த போது அது அவன் நின்ற இடத்திலிருந்து 75m தூரத்தில் வீழ்ந்தது. அதனை எடுத்து அவனது தம்பி மீண்டும் குமரனை நோக்கி மாபிளை எறிந்தான். மாபிள் தம்பி நின்ற இடத்திலிருந்து 30m தூரத்தில் வீழ்ந்தது. இப்போது மாபிளுக்கும் குமரனுக்கும் இடையிலுள்ள தூரம் யாது?
1) 30m 2) 105m 3) 45m

35. குறிப்பிட்ட இலக்கங்களின் மொத்தக் கூட்டுத்தொகை 18 அத்தகைய 3 இலக்கங்களையும் பெருக்கினால் 210 ஆகும். அந்த இலக்கங்கள் எவை
1) 3, 7, 8
2) 5, 6, 7

☺ 36 தொடக்கம் 38 வரையான வினாக்களுக்குப் பின்வரும் கணிதச் செய்கையை அவதானித்து விடை தருக.

□ x □ = 25
□ + □ = △
△ - ○ = 2

36. வட்டத்தின் பெறுமதி யாது?
1) 10 2) 15 3) 8

37. சதுரத்தின் பெறுமதி என்ன?
1) 5 2) 10 3) 15

38. முக்கோணத்தின் பெறுமதி யாது?
1) 15 2) 10 3) 20

39. 50 தொடக்கம் 60 வரையுள்ள இலக்கங்கள் போட்டி ஒன்றிற்காக மாணவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது. இதில் கூட்டுத்தொகை 6 வருவதை யாரும் பெற விரும்பமாட்டார்கள். இப்படி எத்தனை இலக்கங்கள் இருக்கும்?
1) 9 2) 7 3) 2

40. ஓர் அனர்த்தம் காரணமாக மே 14ம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் உட்படத் தொடர்ச்சியாக 9 நாட்களுக்கு ஒரு பாடசாலை மூடப்பட்டது. அப்பாடசாலை மறுபடியும் திறக்கப்படும் தினம்?
1) மே 22 செவ்வாய்
2) மே 23 செவ்வாய்
3) மே 23 புதன்

புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயாராகும் மாணவச் செல்வங்களே வாராந்தம் வெள்ளிக்கிழமைகளில் தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்கள் வந்து கொண்டிருக்கும். அவற்றுக்கான விடைகளை எழுதி கீழ்க்குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். வெற்றியாளர் பெயர் புள்ளிகளுடன் பிரசுரிக்கப்படும்.

**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

# ரணில், சஜித் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்

## ராஜித சேனாரத்ன தெரிவிப்பு

**கொழும்பு, மார்ச் 6**

**ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும், ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியின் தலைவர் சஜித் பிரேமதாசவும் யானைச் சின்னத்தில் ஒரே அணியில் போட்டியிடுவதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடுவது குறித்து ஆராயப்பட்டு வருகிறது.**

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஐ.தே.கட்சியின் தலைவர் விக்கிரமசிங்கவுக்கும், சஜித்பிரரேமதாசவின் கூட்டணியினருக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளோம். ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியின் யாப்பில் காணப்படும் குறைபாடுகளின் காரணமாகவே இத்தகைய முரண்பாடுகள் தோன்றியுள்ளன.

எமது கட்சியின் செயலாளர் பதவியை அவர்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒருவருக்கு கொடுக்குமாறு கேட்டுக்கொண்டனர். இந்தப் பிரச்சினைக்கான தீர்வை கூடிய விரைவில் காணமுடியும் என எதிர்பார்க்கின்றோம்.

அவ்வாறு இணைந்து செயற்படுவதன் ஊடாக மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெறும் வாய்ப்பு எமக்கு அதிகளவில் உள்ளது. கூட்டணியின் யாப்பு கட்சின் யாப்பை போன்று அமைந்துள்ளமையின் காரணமாகவும் முரண்பாடுகள் தோன்றியுள்ளன. கூட்டணியின் யாப்பில் மாற்றமேற்படும் பட்சத்தில் எம்மால் அவர்களுடன் இணைந்து பயணிக்கக் கூடியதாகவிருக்கும்.



யானைச் சின்னத்தில் போட்டியிடுவதற்கு சஜித் அணியினரும் இணக்கம் தெரிவித்துள்ளனர். எதிர்காலத்தில் பலமான கூட்டணியை உருவாக்கி அதன் ஊடாக ராஜபக்ஷ அரசை வீழ்த்துவதே எமது இலக்காகும். ஒன்றிணைந்து பயணிப்பதன் ஊடாக வெற்றி இலக்கை அடைவதே எமது எதிர்பார்ப்பாகும்.- என்றார். (எ)

# மன்னாரில் துண்டுப் பிரசுரங்கள்

மன்னார், மார்ச் 6

தமிழ் அரசியல் வாதிகளுக்கு எதிராகவும், தமிழ் மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தும் வகையிலும் மன்னாரில் துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

'மன்னார் பொது நிலையினர் சமூக பொருளாதார அரசியல் பேரவை' எனும் பெயரில் அவை வெளியிடப்பட்டுள்ளன. மன்னார் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நேற்றுமுன்தினம் இவற்றைக் காணமுடிந்தது. (த-56)

# வெளிநாட்டிலிருந்து வந்தவர் விருந்து கொடுத்தபோது வீழ்ந்து காயம்

சாவகச்சேரி, மார்ச் 6

வெளிநாட்டிலிருந்து வந்து நண்பர்களுக்கு விருந்துகொடுத்தவர் வீட்டுக்குள் வீழ்ந்து தலையில் அடிபட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

சம்பவம் மீசாலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

83வயதுடைய அவர், 35 வருடங்களின் பின்னர் சொந்த நாட்டுக்கு வந்து நாளை மீண்டும் பயணமாக இருந்தார். அதற்காக தனது நண்பர்களுக்கு விருந்துபசாரம் வழங்கினார்.

கதிரையிலிருந்து எழ முற்பட்டபோது வீழ்ந்ததில் தலையில் பலத்த காயமேற்பட்டது. சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர், பின்னர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். (த-9)

# வளியில் தூசு துகள்கள்

கொழும்பு, மார்ச் 6

வளி மண்டலத்தில் தூசு துகள்களின் செறிவு அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்று தேசிய கட்டட ஆய்வு நிலையத்தின் மூத்த ஆய்வாளர் சரத் பிரேமசிறி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது

வளிமண்டலத்தின் தூசு துகள்கள் தொடர்பான அமெரிக்க குறியீட்டின் அடிப்படையில், 50 முதல் 100 வரையிலான அளவு தூசு துகள்கள் வளிமண்டலத்தில் உள்ளன. சில சந்தர்ப்பங்களில் அந்த நிலைமை 100 முதல் 150 வரையில் அதிகரிக்கின்றது. நேற்றுமுன்தினம் குருநாகல் நகரில் வளிமண்டலத்தின் தூசு துகள்களின் செறிவு உயர் தன்மையை அடைந்துள்ளது.

இந்த நிலைமையை வாகன நெரிசல் நிலவும் நகரங்களில் அதிகளவில் அவதானிக்க முடிகின்றது.- என்றார். (எ)

# பேரம் பேசாதவர்களுக்கு 20 ஆசனங்கள் ஏன்?

## இப்படிக் கேட்கிறார் சுரேஸ்

யாழ்ப்பாணம், மார்ச் 6

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேரம் பேசுவதற்கு கிடைத்த சகல சந்தர்ப்பங்களையும் தவறவிட்ட நிலையில், இப்போது பேரம் பேசுவதற்கு 20 ஆசனங்களைத் தாருங்கள் என்று கேட்பது வெறுமனே கதிரைகளைப் பிடிப்பதற்கான முயற்சி மட்டுமேயாகும். அதன் ஊடாக பேரம் பேசல் நடக்கப்போவதில்லை என்பதே உண்மையாகும்.

இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் பேரம் பேசுவதற்கு 20 ஆசனங்களை தமிழ் மக்கள் பெற்றுத் தரவேண்டும் என்று கூறியிருந்தார். கடந்த 10 ஆண்டுகளாகப் பேரம் பேசத் தவறியது எதற்காக? இந்தக் கேள்விக்கு இன்று வரையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விளக்கமளிக்கவில்லை. ஆனால் பேரம் பேசுவதற்கான சக்தியைக் கொடுக்குமாறு கேட்கின்றார்கள்.

கடந்த அரசின் காலத்தில் வரவு - செலவுத் திட்டங்களின் போதும், ஆட்சிக் கவிழ்ப்பின்போதும், நம்பிக்கையில்லாப் பிரேரணையின்போதும் பேரம் பேசும் வாய்ப்புக் கிடைத்தும் அவர்கள் அதனைப் பயன்படுத்தவில்லை.

இவற்றையெல்லாவற்றையும் தவறவிட்டு இப்போது சந்தர்ப்பம் கேட்பது கதிரையை நிரப்புவதற்காகவே, - என்றார். (ஒ.5,20)

# வாழ்வாதார உதவியாக பசு வழங்கல்

கிளிநொச்சி,மார்ச் 6

கிளிநொச்சி மணியன்குளம் ஸ்கந்தபுரத்தைச் சேர்ந்த முன்னாள் போராளிக்கு வாழ்வாதார உதவியாக 80 ஆயிரம் ரூபா பெறுமதியான பசு மாடு வழங்கப்பட்டது.

ஜேர்மனியில் இயங்கும் உதவும் இதயங்கள் நிறுவனத்தின் ஊடாக அமைப்பின் மூத்த உறுப்பினர் க.உதயகுமார் இந்த உதவியை வழங்கியுள்ளார்.

அமைப்பின் உறுப்பினர்களான சுதாகரன் மற்றும் கிசோபன் ஆகியோர் அண்மையில் நேரில் சென்று இந்த உதவியை வழங்கினார். (ஐ-159)

# புலிகள் தொடர்பில் அவதானமாக கருத்துக்களை வெளியிடவேண்டும்

## சி.வி.கே. சீற்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 6

தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பில் கருத்துக்களை வெளியிடுவோர் அவதானமாக தமது கருத்துக்களை வெளியிட வேண்டும் என்று வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:



வடக்கு மாகாண முன்னாள் ஆளுநர் சுரேன் ராகவன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு முயற்சித்து வருகிறார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. அவர் வடக்கு மாகாண ஆளுநராக இருந்தபோது எதையும் பெரிதாகச் சாதிக்கவில்லை. ஜெனீவாவில் இடம்பெற்ற ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அமர்வில் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் குழுவில் இவரும் உள்ளடக்கப்பட்டிருந்தார். ஜெனீவா சென்று தமிழர்களுக்கு எதிராகச் சாட்சியமளித்த இவர் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட எப்படிக் கேட்க முடியும். கூட்டமைப்பு அவருக்கு ஆசனம் வழங்காது. தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பில் பேசுவதற்கு அனைவருக்கும் உரிமை உண்டு. அதனைத் தடுக்க முடியாது. போலியான பரப்புரைகளை மேற்கொள்ள முடியாது. ஆனால் அவர்கள் தொடர்பில் கதைக்கலாம். புலிகள் தொடர்பில் கருத்துக்களை வெளியிடுவோர் அவதானமாகக் கருத்துக்களை வெளியிடவேண்டும் - என்றார். (ஒ.5,11)

# ஏப்ரல் மாதத்தில் ரூ. 1,000 சம்பளம்

## அமைச்சரவைப் பேச்சாளர் தகவல்

கொழும்பு, மார்ச் 6

தோட்ட கம்பனிகளுக்கும், அரசுக்கும் இடையிலான ஒப்பந்தம் அடுத்த வாரம் கைத்திடப்பட்டு ஏப்ரல் மாதம் 1000 ரூபா சம்பளத்தை வழங்க எதிர்பார்த்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பெருமளவிலான பெருந் தோட்டங்கள் தனியார் நிறுவனங்களுக்கு சொந்தமாக உள்ளன. இதனால் அரசாங்கத்தினால் தற்துணிவுடன் எவ்வித தீர்மானங்களையும் முன்னெடுக்க முடியாது. அதனால் தோட்டக் கம்பனிகளுடன் பேச்சுகளை முன்னெடுத்தோம்.

ஆயிரம் ரூபா வழங்கும் அரசின் தீர்மானத்தால் கம்பனிகளுக்கு ஏற்படும் நிதி நெருக்கடி தொடர்பில் தோட்ட முதலாளிமார் சம்மேளனத்தின் உறுப்பினர்கள் அவர்கள் தரப்பு நியாயத்தை எடுத்துரைத்தார்கள்.

மலையக மக்களுக்கு ஆயிரம் ரூபா சம்பளம் வழங்க வேண்டும் என்ற காரணத்துக்காக தேயிலை தொழிற்றுறையின் உற்பத்திசார் வரிகளை குறைப்பதற்கும், கம்பனிகளுக்கு நிவாரணம் வழங்குவதற்கும் அரசு தீர்மானித்தது. ஆனால் தோட்டக் கம்பனிகள் இதுவரையில் மலையக தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பளம் வழங்க எவ்வித இணக்கத்தையும் தெரிவிக்கவில்லை.

அரசு குறிப்பிட்டதை போன்று மார்ச் முதலாம் திகதியில் இருந்து மலையக தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பளத்தை வழங்க முடியவில்லை. இந்த விடயம் தொடர்பில் தோட்ட கம்பனிகளுடன் பேச்சு இடம்பெற்றது. அப்போதும் அவர்கள் இணக்கம் தெரிவிக்கவில்லை. ஆகவே தோட்டக் கம்பனிகளுக்கும், அரசுக்கும் இடையிலான ஒப்பந்தம் ஒன்று அடுத்த வாரம் செய்து கொள்ளத் தீர்மானிக்கப் பட்டுள்ளது. ஒப்பந்தத்தின்படி ஏப்ரல் மாதத்தில் இருந்து ஆயிரம் ரூபா சம்பளத்தை வழங்க எதிர் பார்த்துள்ளோம் - என்றார். (எ)


## உடனடி வேலைவாய்ப்பு

எமது நிறுவனத்திற்கு நீர் சுத்திகரிப்பு இயந்திரம் தொடர்பான விடயங்களை வாடிக்கையாளருடன் அணுக கூடிய Marketing Officers தேவை.

- பொருள்களை கொண்டு சென்று விற்பனை செய்பவரும் அல்ல
- ஏனைய நிறுவனங்களை விட மாறுபட்ட வேலைவாய்ப்பினை கொண்டது.
- கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
- ஒப்பந்த அடிப்படையிலான வேலைவாய்ப்பு
- இது தொடர்பான அனுபவம் இல்லாதவர்களும் விண்ணப்பிக்கலாம். (Male / Female)

வடமாகாணத்தின் தலைசிறந்த நிறுவனங்களில் ஒன்றான Yarl Smart Water Solution ( Pvt)Ltd இல் இளைஞர்கள் வேலை செய்வதற்கான அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்.

**07.03.2020 காலை 9.00 மணிக்கு நேரில் சமுகமளிக்கவும்.**

தொடர்பு : Karadippoku Junction,
A9 Road, Kilinochchi.
077 057 3684, 076 666 5267



பாராட்டி வாழ்த்துகின்றோம்



**ஜேகப் பாக் ஹோட்டல்** திருகோணமலையில்
**29.02.2020** அன்று நடைபெற்ற **சமூக சேவைக்கான**
**2020 ஆம் ஆண்டுக்கான தேசிய விருது** வழங்கும்
நிகழ்வில் பிரபல சமூக சேவையாளரும்
கல்விக் கொடையாளருமாகிய

**செங்கைப்புரவோன் கலாநிதி**
**இராசையா குவேந்திரநாதன்**

அவர்களின் சமூக சேவையினைப் பாராட்டி
Best Wishes **மனித உரிமைகள் அமைப்பினால்** Best Wishes
**"மகாத்மா காந்தி"**
என்னும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டமையை
பாராட்டுவதோடு அவர்களின் சேவை மேன்மேலும் தொடர
நாமும் அவர்களை பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

உரிமையாளரும், ஊழியர்களும்,
**ஐங்கரன் களஞ்சியம்**
**6, பலாலி வீதி, திருநெல்வேலி.**
(ஏ.31684)(13.17)


# தற்காலத்தின் தேவை கூட்டமைப்பின் பலமே!

## மன்னார் நகர சபைத் தலைவர் தெரிவிப்பு

மன்னார், மார்ச் 6

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலப்படுத்துவது காலத்தின் தேவை என்று மன்னார் நகர சபைத் தலைவர் ஞா.அன்ரனி டேவிட்சன் தெரிவித்தார்.

எதிர்வரும் ஏப்ரல் 25ஆம் திகதி பொதுத்தேர்தல் நடைபெறவுள்ளது. இது பற்றிக் கேட்டபோது அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களின் அரசியல் பலத்துக்காக உருவாக்கப்பட்டதுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. அனைத்து மக்களும் ஒன்றிணைந்து ஒருமித்த பலத்தைக் காட்டும்போதுதான் மக்கள் மீது அடக்குமுறையைத் திணிக்க எத்தனிக்கும் பேரினவாதிகள் அச்சப்படுவார்கள்.

பலர் கட்சிகளாகப் பிரிந்துபோயுள்ளார்கள். இது ஆரோக்கியமான விடயமல்ல. இவ்வாறான செயற்பாடுகளால் எமக்குள்ள பலம் குன்றிப்போகின்றது. அதற்குத் தமிழ் மக்கள் ஒருபோதும் இடமளிக்கக் கூடாது.

தமிழர்களுக்குள் உண்டான உடைவுகள் பெரும்பான்மைக் கட்சிகளின் பலத்துக்கே வழிவகுக்கும். இதனால் இழப்புக்கள் என்பது மாற்றுக் கட்சிகளில் உள்ளவர்களுக்கு அல்ல, தமிழ் மக்களுக்குத்தான்.

ஆகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலப்படுத்தவேண்டிய கடப்பாடு தமிழ் மக்கள் அனைவருக்கும் உண்டு.

மன்னாரில் தமிழ்த் தேசியத்துக்கு அனைவரும் அதிகவிலை கொடுத்துள்ளனர். எனவே எவரும் சுயநலத்துடன் அரசியல் செய்யக் கூடாது.

மன்னாரில் மதம் சார்ந்த அரசியல் தேவையில்லை. மதம் சார்ந்து இருபகுதியிலும் சுயேச்சைக் குழுக்கள் போட்டியிடவுள்ளன என்று செய்திகள் வெளியாகியுள்ளன. இது தேவையற்ற விடயம். தேசியம் சார்ந்த அரசியல் பயணம்தான் தற்போது எமக்குத் தேவையேதவிர, மதம் சார்ந்து அல்ல. தமிழர்களுக்காக உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலப்படுத்தி தமிழர்களின் இருப்பைத் தக்கவைத்துக் கொள்ளவேண்டும் - என்றார். (த-213)


## அறிவித்தல்

**யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி**
**பழைய மாணவர் ஆசிரியர் சங்கம்**
**வருடாந்த பொதுக்கூட்டம்**

மேற்படி கூட்டம் 15.03.2020 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கல்லூரியின் நாகேந்திரராஜா மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் அனைத்து பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**குறிப்பு:-** பிரேரணைகளை சமர்ப்பிக்க விரும்புவோர் 10.03.2020 இற்கு முன்னர் சமர்ப்பிக்கவும்.

**தலைவர்**
**திரு.செ.பேரின்பநாதன்**

**செயலாளர்**
**திரு.ம.ஸ்ரீபாஸ்கரன்**

(IN 12758) (10)





## குருக்கள் தேவை

நெடுந்தீவு மேற்கு கரமத்தை
**ஸ்ரீகந்தசுவாமியார் ஆலயத்துக்கு**
**சகல கிரியைகளும் தெரிந்த குருக்கள் தேவை**

**வேத, ஆகம அறிவு நிறைந்தவராகவும் நித்திய நைமித்திய பூசைகளையும் ஊர் புரோகிதங்களையும் செய்யக் கூடியவராகவும், மனைவி, பிள்ளைகளுடன்** தங்கி இருந்து பணியாற்ற கூடியவராக இருத்தல் வேண்டும்.

ஆலயத்தினால் வீடும், வாகனமும், தகுந்த சம்பளமும் வழங்கப்படும் (சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்)

தொடர்பு: **001 647 618 7755**
**077 063 8738**



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

**நாடகமும் அரங்கக்கலைகளும் கற்கை நெறிக்காக காணி அல்லது கட்டடம் ஒன்றை நன்கொடையாக பெற்றுக்கொள்ளல்**

நாட்கமும் அரங்ககலைகளும் கற்கைப்புலமானது சமூக விருத்திக்கும் சமூகத்தின் கலாசார அடையாளத்திற்கும் பங்காற்றக்கூடிய துறையாகும். இத்துறை சார்ந்த கட்டுமான வசதிகளை மேம்படுத்தும் நோக்குடன் யாழ்ப்பாண பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் நாடகமும் அரங்கக்கலைகளும் கற்கைநெறிக்கு பொருத்தமான காணியை நலன்விரும்பிகள் மற்றும் கலை ஆர்வலர்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

**இக்காணியின் அமைவிடம் பின்வரும் அம்சங்களைக் கொண்டிருப்பது வரவேற்கத்தக்கது.**

- ஆகக்குறைந்தது 10 பரப்பு
- யாழ் பல்கலைக்கழக திருநெல்வேலி பிரதான வளாகத்திலிருந்து 10 கிலோமீற்றர் தூரத்திற்குட்பட்டிருத்தல்
- குடிநீர் வசதி
- பொதுப் போக்குவரத்து சேவைமார்க்கத்துடன் தொடர்புபட்டிருத்தல்

மேற்குறித்த அம்சங்களையுடைய காணியினை அல்லது வீட்டுடன் கூடிய காணியை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு நாடகமும் அரங்ககலைகளும் கற்கை நெறிக்காக நன்கொடையாக வழ்ங்க விரும்புபவர்கள் பின்வரும் விபரங்களை 31.03.2020 திகதிக்கு முன்பதாக பதிவாளர் அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது பதிவாளர், யாழ்ப்பாண பல்கலைக்கழகம், த.பெ. இல. 57, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு தபாலிலோ அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

- காணியை நன்கொடையாக வழங்குபவரின் விபரங்கள்
  (பெயர், விலாசம், தொடர்பு கொள்ளக் கூடிய தொலைபேசி இல. அல்லது மின்னஞ்சல் முகவரி)
- காணி உறுதியின் பிரதி
- காணி வரைபடத்தின் பிரதி
- ஏதேனும் விசேட நிபந்தனைகள் (இருப்பின்)

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**
**திருநெல்வேலி.**

தனியார் கல்வி நிலையங்களில்

# மாணவர்களுக்கு ஒரு நாள் விடுமுறை

## பிரேரணை தோல்வி

யாழ்ப்பாணம்,மார்ச் 6

யாழ்.மாநகராட்சி மன்றத்துக்கு உட்பட்ட தனியார் கல்வி நிலையங்கள் யாவும் வாரத்தில் ஒரு நாள் மாணவர்களுக்கு விடுமுறை வழங்க வேண்டும் என்று மாநகர சபை மன்ற அமர்வில் கொண்டு வரப்பட்ட பிரேரணை தோற்கடிக்கப்பட்டுள்ளது.

தனியார் கல்வி நிலைய மாணவர்கள் வாரத்தில் வெள்ளிக்கிழமைகளில் ஆலயம் சென்று வழிபட வசதியாக, அவர்களுக்கு அன்றையதினம் விடுமுறை வழங்கப்பட வேண்டும் என்று மாநகரப் பிரதி முத ல்வர் து.ஈசன் கடந்த மாநகர அமர்வில் பிரேரணை சமர்ப்பித்தார்.

பிரதி முதல்வரின் கோரிக்கையை சபை ஏற்றுக் கொள்ளவில்லை.

இது குறித்து பிரதி முதல்வர் தெரிவித்துள்ளதாவது,

மாநகரப் பிரதேசத்தில் உள்ள சகல தனியார் கல்வி நிலையங்கள் வார த்தில் ஒரு நாள் மாணவர்களுக்கு விடுமுறை வழங்க வேண்டும் என்று இரண்டு தடவைகள் சபை அமர்வில் கோரிக்கை விடுக்கப்பட்டது. கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கு ஒரு நாள் ஓய்வு வழங்க வேண்டும். வெள்ளிக்கிழமைகளில் அவர்கள் ஆலயங்களுக்குச் சென்று தரிசனம், வழிபாடுகள் மேற்கொள்ள வசதி ஏற்படுத்த வேண்டும் என்று பொதுமக்கள் என்னிடம் கோரிக்கை விடுத்தனர். கோரிக்கையை சபையில் சமர்ப்பித்தேன். அதற்கு விடை கிடைக்க வில்லை. சமய நிறு வனங்கள், பொது அமைப்பினர் தலையிட்டு இதற்கு முடிவு எடுக்கலாம்.என்றார்.

(க-17)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



பிறப்பு 01.02.1944 இறப்பு 05.02.2020

### அமரர் மார்க்கண்டு ஆனந்தம்

கடந்த 05.02.2020 புதன்கிழமை சிவபதமடைந்த மாரக்கண்டு ஆனந்தத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (06.03.2020) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச் செய்தி கேட்டு அனைத்து வகையிலும் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் உதவிகள் புரிந்த நல்லுள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

இல.15/3, புதுவீதி,
கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.

தகவல்:- குடும்பத்தினர்.
தொடர்புகளுக்கு:- 021 222 0486

## மரண அறிவித்தல்கள்

### திருமதி செளந்தரம் பஞ்சலிங்கம்



பிறப்பு 15.01.1940 இறப்பு 05.03.2020

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செளந்தரம் பஞ்சலிங்கம் நேற்று (05.03.2020) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பஞ்சலிங்கத்தின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் சேதுப்பிள்ளை தம்பதிகளின் அருமை மகளும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை கனகாம்பிகை தம்பதிகளின் மருமகளும் பகீரதன், பகீரதி, பாஸ்கரன், பாமினி, பத்மினி, பராபரன், பன்னீர்ச்செல்வன், கோபிராஜ் ஆகியோரின் தாயாரும் அனுசியா, காலஞ்சென்ற வைகுந்தவாசன், சுபாசினி, காலஞ்சென்ற நேசராசா, மகேந்திரன், நகுலேஸ்வரி, யோகேஸ்வரி, கிறிஸ்ணாகத்தரின் ஆகியோரின் பாசமிகு மாமியும் காலஞ்சென்றவர்களான சிவலிங்கம், சுந்தரலிங்கம் மற்றும் சண்முகலிங்கம், சேதுலிங்கம், சந்திரலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் இந்திரபூபதி, இந்திரவதனா, கமலராணி,தட்சணாமூர்த்தி, தர்மகுமாரி ஆகியோரின் மைத்துனியும் மயூரதன், அபரதன், அனுரதன், கோகுலரதன், அபராஜிதன், மயூரி, தீசன், சசீபன், சபிதா, சஞ்சீவன், சஷ்வின், நேருஜா, நிவேஜா, நேருஜன், சுஜீவன், சுஜித்தா, சுஜன், டிசாந், விந்தியா, சஞ்சீவன், பானுஜன், மதுஷா, அஜந்தன், டிசாந்தன், கீதன், பைசோன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.03.2020) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு கோண்டாவில் ஆலடி வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மு.ப 11.00 மணிக்கு கோண்டாவில் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆலடி வீதி, கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

தகவல்: குடும்பத்தினர்
077 932 6046, 077 116 0593



### திருமதி பரமேஸ்வரி சோமசுந்தரம்

190,நுணாவில் மேற்கை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி சோமசுந்தரம் நேற்று (05.03.2020) வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னுச்சாமி, சண்முகநாதன், நாகேஸ்வரி, வெற்றிவேலு, அரியரத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற மங்களேஸ்வரி மற்றும் கமலேஸ்வரி, காலஞ்சென்ற லிங்கேஸ்வரன், மற்றும் குகேந்திரன், விக்கினேஸ்வரன், குணேஸ்வரி (ஈசு) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னரின் இறுதிக்கிரியைகள் (08.03.2020) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மட்டுவில் தெற்கு
சாவகச்சேரி.

தகவல் : அ.சிவகாந்தி - 077 821 2450
ஈசு - 001-4168335295

## கண்ணீர் அஞ்சலி



எமது அலுவலகத்தில் கடமையாற்றும் விஷ்ணுகாந்தன் (ஆசிரிய வளவாளர்) அவர்களின் பாசமிகு தந்தை

### செல்லப்பா கந்தையா

அவர்கள் 05.02.2020 ஜேர்மனியில் இறைபதம் அடைந்தார். அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுவதோடு அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
மாகாணக் கல்வித்திணைக்களம், வடமாகாணம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியை திருமதி திவ்யா கௌரிவாசன் அவர்களின் அன்பு மாமியார்

### திருமதி இரத்தினசிங்கம் பொன்னம்மா



01.03.2020 அன்று காலமானார். இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/ உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம், உரும்பிராய்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி நிசாந்தினி முகுந்தன் அவர்களின் அன்புத் தாயார்

### அமரர் யோகரட்ணம் புவனகாந்தா



அவர்களின் மறைவிற்கு எமது விழிநீர் அஞ்சலியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், தெல்லிப்பளை.

விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!

## மரண அறிவித்தல்



### இராஜரத்தினம் இராஜகோபாலன்

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை, நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், கனடா, ரொரன்றோவை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜரத்தினம் இராஜகோபாலன் நேற்று (05.03.2020) வியாழக்கிழமை கனடாவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மதவடி இராஜரத்தினம் - சாரதாதேவி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், பருத்தித்துறையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான விஸ்வரத்தினம் - செல்வபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், லதாவின் அன்புக் கணவரும், கார்த்திக், திவ்யா, சஞ்சய் ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்திராதேவி, காலஞ்சென்ற இரத்தின கோபால் மற்றும் ஞானகோபால், சறோஜாதேவி (ரதி), ஸ்ரீகோபால், இராகினிதேவி, சந்தானகோபால் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறுமென்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

1035, காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார்கோயிலடி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
021 222 1324

(6.3165114 (3.17)



# மகத்துவம் நிறைந்த மாசி மகமும் ஒவ்வொரு ராசியினரும் வழிபடும் முறைகளும்

மகத்துவம் நிறைந்த மாசி மகம் எதிர்வரும் 8ஆம் திகதி கொண்டாடப்படுகிறது. மாசி மகம் என்பது மாசி மாத பௌர்ணமியுடன் கூடிவரும் மக நட்சத்திர நாளில் இந்துக்களால் கொண்டாடப்படும் ஒரு சிறப்பான நாளாகும். அன்றைய தினம் கடலாடும் விழா என்று கொண்டாடப்படுகிறது.

பிறவிப் பெருங்கடலில் வீழ்ந்து துன்பக்கடலில் மாய்ந்தழுந்தும் ஆன்மாவானது இறைவனது அருட்கடலாகிய இன்பவெள்ளத்தில் அமிழ்ந்து திளைக்கச் செய்யும் நன்நாளே மாசிமகக் கடலாடு தீர்த்தமாகும். தீர்த்தமாட இயலாதவர்கள் விரதமிருந்து கோயிலுக்குச் சென்று இந்நாளைக் கொண்டாடுவர்.

பன்னிரண்டு ராசியினரும் மாசி மக நாளில் விரதம் இருந்து செய்ய வேண்டிய தான, தருமங்களைப் பற்றி இங்கே பார்க்கலாம்.

**மேஷ ராசியினர்**, விரதம் இருந்து முருகனுக்கு செவ்வரளி மாலை அணிவித்து, துவரம் பருப்பு சாதம் நைவேத்தியமாக படைத்து வழிபட்டால் பணவரவு இரட்டிப்பாகும். அன்றைய தினம் தந்தை மற்றும் பெரியவர்களின் விருப்பங்களை நிறைவேற்றி, அவர்க்ளின் ஆசியைப் பெறுங்கள். முன்னோர் வழிபாடு செய்து இயன்ற அளவு அன்னதானம் செய்தால் தடை தாமதம் நீங்கும்.

**ரிஷப ராசியினர்**- விரதம் இருந்து சிவபெருமானுக்கு வில்வ மாலையும், அம்பிகைக்கு ரோஜா மாலையும் அணிவித்து, சர்க்கரை பொங்கல் நைவேத்தியமாக படைத்து வழிபட்டால் மன சஞ்சலம் நீங்கும். ஆதரவற்றவர்களை பராமரிக்கும் இல்லங்களுக்கு உணவு உடை தானம் தந்தால், காரியம் சித்தியாகும்.

**மிதுன ராசியினர்**- விரதம் இருந்து மகா விஷ்ணுவிற்கு துளசி மாலை அணிவித்து, பாசிப் பருப்பு பாயசம் நைவேத்தியமாக படைத்து வழிபட்டால் நிரந்தர செல்வம் சேருவதுடன், சுப பலன்கள் உண்டாகும். படிக்கும் குழந்தை களுக்கு அப்பியாசக் கொப்பிகள், பேனா, பென்சில் வாங்கித்தர மனக் கவலை அகலும்.

**கடக ராசியினர்**- விரதம் இருந்து அசைவ உணவை தவிர்த்து அம்பிகைக்கு பால், தயிர் அபிஷேகம் செய்து வெண்பட்டு புடவை சாற்றி, பால் பாயசம் நைவேத்தியமாக படைத்தால் சகல வினைகளும் அகலும். விவசாயிகளுக்கு தேவையான விதை, உரம், விவசாய தளவாட பொருள்கள் வாங்கி கொடுக்க, பாவங்கள் நீங்கி அதிர்ஷ்டம் வந்து சேரும்.

**சிம்ம ராசியினர்**- விரதம் இருந்து அசைவ உணவை தவிர்த்து பார்வதி, பரமேஸ்வரருக்கு பஞ்சாமிர்தம் அபிஷேகம் செய்து, கோதுமை பாயசம் நைவேத்தியம் செய்யுங்கள். சிவாச்சாரியார்களுக்கு உணவு, உடை தானம் தந்து ஆசி பெற பணவரவு பன்மடங்காகும். விட்டுப்போன பித்ரு தர்ப்பணத்தை செய்தால், சுப காரிய தடை அகலும், கர்மவினை நீங்கும்.

**கன்னி ராசியினர்**, விரதம் இருந்து மகா விஷ்ணுவிற்கு வஸ்திரம் சாற்றி வெண் பொங்கல் நைவேத்தியம் செய்து வழிபட்டால் பாவங்கள் விலகி ஓடும். பள்ளி, கல்லூரி படிப்பை தொடர சிரமம் இருப்பவர்களுக்கு பண உதவி செய்யலாம்.

**துலாம் ராசியினர்**- விரதம் இருந்து அம்பிகைக்கு பொட்டு தாலி அணிவித்து குங்கும அர்ச்சனை செய்வதோடு, கல்கண்டு சாதம் நைவேத்தியமாக படைப்பது நல்லது. அதை சுமங்கலி பெண்களுக்கு தந்தால் நற்பலன்கள் அதிகரிக்கும். அன்றைய தினம் வலம்புரி சங்கு வைத்து லட்சுமி குபேர பூஜை நடத்தினால், பண வரவு மகிழ்ச்சி தரும் விதத்தில் இருக்கும்.


**விருச்சிக ராசியினர்**- விரதம் இருந்து சிறிது பச்சரிசி, எள்ளு, தினை சேர்த்து மாவாக்கி, எறும்பு புற்றுகளில் தூவினால் வாயில்லா ஜீவன்கள் உண்டு மகிழும் போது, பல தலை முறை சாபம் நீங்கி புண்ணிய பலன் அதி கரிக்கும். கஷ்டங்களில் இருக்கும் உங்கள் சகோதர, சகோதரிகளுக்கு உங்களால் முடிந்த உதவிகளை செய்வது நல்லருளை பெற்றுத் தரும்.

**தனுசு ராசியினர்**- விரதம் இருந்து குலதெய்வத்துக்கு அபிஷேக ஆராதனை செய்து சர்க்கரை பொங்கல் படையலிட்டு வழிபட்டால், பொருளாதாரத்தில் தன்னிறைவு கிடைக்கும். மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளின் பராமரிப்பிற்கு உதவுங்கள். குழந்தைகள் காப்பகம், முதியோர் இல்லங்களுக்கு புத்தாடையுடன் இட்லியும், எள்ளு சட்னியும் தண்ணீருடன் தானம் தர முன்னோர்களின் நல் ஆசி கிட்டும்.

**மகர ராசியினர்**- விரதம் இருந்து சிவன் கோவில்களுக்கு தீபம் ஏற்ற எண்ணெய் வாங்கித் தந்து, பராமரிப்பு இல்லாத கோவில்களுக்கு திருப்பணி செய்ய உதவினால் கர்ம வினை நீங்கும். துப்புரவு தொழிலாளிகளுக்கு உணவு, ஆடை தானம் தர வேண்டும். ஆன்மாவும் உடலும் குளிர புனித நதிகளில் நீராட வேண்டும்.

**கும்ப ராசியினர்**- விரதம் இருந்து கஸ்தூரி, கோரோசனை, குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம் முதலான நறுமணப் பொருட்கள் கலந்து இறைவனுக்கு ஒரு முறை சந்தனக் காப்பு செய்தால் மோட்சத்திற்கு வழிபிறக்கும். சுத்த அன்னம் நைவேத்தியமாக படைத்து, அதை தானம் செய்ய பண கஷ்டம் நீங்கும். தொழில் விருத்தி உண்டாகும். சாலை ஓரங்களில் ஆதரவின்றி அல்லல்படுபவர்களுக்கு உணவு, உடை, மருத்துவ உதவி செய்யுங்கள்.

**மீன ராசியினர்** - விரதம் இருந்து சிவனின் திருமேனிக்கு சந்தனக்காப்பு பொருத்தி குளிர்வித்தால், உங்கள் மனதில் இருக்கும் மனக்கவலை குறையும். பசு மற்றும் மிருகங்களுக்கு உணவிடுங்கள். அன்றைய தினம் கோ பூஜை நடத்தினால் பணப் பற்றாக்குறை நீங்கும். சித்தர்களின் ஜீவ சமாதிகளுக்கு சென்று லட்டு தானம் தந்து வணங்கி வழிபட வினைப் பயன் நீங்கும்.



# ‘M’ வடிவிலான ரேகை உங்கள் கைகளில் இருக்கின்றதா?

ஜோதிடத்தில் பலவகை இருக்கின்றன, நாடி ஜோதிடம், எண் ஜோதிடம், கிளி ஜோதிடம், கை ரேகை ஜோதிடம், குறி சொல்லுதல் என மனிதர்களின் கடந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் பற்றி கூற பல முறைகள் கடைபிடிக்கப்படுகின்றமையை நாம் எமது ஊர்களில் பார்க்க முடிகிறது.

ஆனால், இதில் எதை நம்புவது, எது சரியானது என யோசிக்க ஆரம்பித்தால் கிறுக்கு பிடிக்கும் படி ஒவ்வொருவர் அவரவர் செய்யும் தொழில் தான் சுத்தமானது என்று கூறுவார்கள். இதைக் குறைகூற முடியாது. பெரும்பாலும் நாம் நம்புவது நட்சத்திரம் ஜாதகம் வைத்து பார்க்கப்படும் ஜோதிடம் மற்றும் கை ரேகை வைத்து கூறும் ஜோதிடம் தான்.

இதில் கை ரேகை ஜோதிடம் என்று எடுத்துக் கொள்ளும் போது உள்ளங்கை ரேகைகளை வைத்தே, செல்வம், வேலை, திருமணம், ஆயுள் போன்றவற்றை கூறுவார்கள். இந்த வகையில் ஒருவரது கையில் "M" வடிவிலான ரேகை அமைந்திருந்தால் அவரது வாழ்க்கை குணாதிசயங்கள் எப்படி இருக்கும் என்று இனிக் காண்போம்...

**"M" வடிவிலான ரேகை**

இந்த "M" வடிவிலான ரேகையானது, மூளை, இதயம், விதி மற்றும் வாழ்க்கை போன்ற ரேகைகளின் கலவை ஆகும். இவை மொத்தமும் சேர்ந்து "M" போன்ற வடிவில் உள்ளங்கையில் சிலருக்கு அமைந்திருப்பதைக் காண முடியும்.

**வலது கை**

இதுபோன்று "M" வடிவிலான ரேகை வலது கையில் அமைந்திருந்தால், அவர்களுக்கு செல்வம், பொருள் விஷயங்கள் மற்றும் தர்க்கமானவை கிடைக்கப்பெறும்.

**இடது கை**

இதுபோன்று "M" வடிவிலான ரேகை இடது கையில் அமைந்திருந்தால், அவர்களுக்கு தாய், தாரம் மற்றும் உணர்வு ரீதியானவற்றில் நிறைய சிறப்புகள் அமையும்.

**தலைமை வகிப்பது**

உள்ளங்கையில் M வடிவிலான ரேகை அமைந்திருந்தால் அவர்கள் இயற்கையாகவே தலைமை வகிக்கும் குணாதிசயம் பெற்றிருப்பார்கள் என்று பண்டையக் காலத்து பாரம்பரியத்தில் கூறப்பட்டுள்ளது

**வலிமையான உள்ளுணர்வு**


"M" வடிவிலான ரேகை உள்ளவர்களுக்கு வலிமையான உள்ளுணர்வு இருக்குமாம். இவர்களால் வஞ்சகம் செய்வது போன்றவற்றை முன்னரே கண்டறிய முடியும் என்றும், பெண்கள் மத்தியில் இது அதிகமாக இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

**நல்ல வாய்ப்புகள்**

இயற்கையாகவே தலைமை வகிக்கும் தன்மை உள்ள இவர்களுக்கு, வசதி வாய்ப்புகள், நல்ல எதிர்காலம் மற்றும் சிறந்த வாய்ப்புகளும் அமையப் பெறுவார்கள்.

**நல்லுணர்வு**

உள்ளங்கையில் "M" வடிவிலான ரேகை அமைந்திருப்பதும், நல்லுணர்வுக்கும் இணைப்பு உள்ளது என்றும் கூட சிலர் கூறுகிறார்கள்.



# கரைவந்தன போதைப்பொருள்கள்

கொழும்பு, மார்ச் 6

இலங்கையில் இருந்து சுமார் 600 கடல் மைல் (1111 கி.மீ) தொலைவில் 6000 மில்லியன் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய சட்டவிரோத போதைப்பொருள்கள், சந்தேக நபர்களுடன் இலங்கை கடற்படையினரிடம் சிக்கிய படகுகள் நேற்றுத் திக்கோவிட்ட துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்டன



பொலிஸ் போதைப்பொருள் பணியகம் பெற்ற உளவுத் தகவலின் படி, இலங்கை கடற்படை தனது ஆழ் கடல் கண்காணிப்பு கப்பல்களான இலங்கை கடற்படை கப்பல் சமுதுர மற்றும் சயுரல ஆகியவற்றை ஒரு மாத கால நடவடிக்கைக்கு அனுப்பியது.

அப்போது இலங்கையின் தெற்கு கடல் பகுதியில் ஹெரோயின் என்று சந்தேகப்படுகின்ற சுமார் 75 கிலோ போதைப்பொருட்களும் ஐஸ் என்று சந்தேகப்படுகின்ற சுமார் 66 கிலோ போதைப்பொருட்களும் கடத்தி சென்ற இரண்டு இலங்கை மீன்பிடி படகுகளில் நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணையில், பல நாள் மீன்பிடித்தல் என்ற போர்வையில் பயணம் செய்த மீனவர்களுக்கு போதைப்பொருள் வழங்கியதற்காக ஆழ் கடலில் இருந்த கொடி இல்லாத படகொன்று முதலில் கைது செய்யப்பட்டது. இந்த மீன்பிடி படகு சந்தேகத்தின் பேரில் சோதனை செய்யப்பட்டதுடன் அங்கு பெறப்பட்ட ரகசிய தகவல்களின் படி நான்கு நாட்களாக மேற்கொண்டுள்ள நடவடிக்கையில் அதேபோல், ஆழ்கடலில் இருந்த மேலும் ஒரு கொடி இல்லாத படகொன்று இனம்காணப்பட்டது.

அங்கு மேற்கொண்டுள்ள சோதனை நடவடிக்கையின் போது குறித்த படகில் இருந்து ஹெரோயின் என்று சந்தேகப்படுகின்ற 329 பக்கெட்களும் ஐஸ் என்று சந்தேகப்படுகின்ற 50 பக்கெட்களும் கண்டு பிடிக்கப்பட்டன. அதன்படி, மேற்கொண்டுள்ள முழு நடவடிக்கையின் போது, 397 பக்கெட்டுகளில் அடைத்து வைக்கப்பட்டிருந்த 400 கிலோ ஹெரோயின் மற்றும் 100 பக்கெட்டுகளில் அடைத்து வைக்கப்பட்டிருந்த 100 கிலோ ஐஸ் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன.

கடலில் ஒரு நடவடிக்கையின் போது கைப்பற்றப்பட்ட அதிக எண்ணிக்கையிலான போதைப்பொருள் இது வாகும். அதன்படி, பறிமுதல் செய்யப்பட்ட போதைப்பொருள் திக்கோவிட்ட மீன்பிடி துறைமுகத்திற்கு நேற்றுக் காலை கொண்டு வரப்பட்டன. (ம)

# தனித்து வாழ்ந்த முதியவருக்கு வாழ்வாதார உதவி



முல்லைத்தீவு, மார்ச் 6

தேராவில் விசுவமடு பகுதியில் நோயால் பாதிக்கப்பட்டு தனிமைப் படுத்தப்பட்டிருந்த வயோதிபருக்கு வாழ்வாதாரமாக 20 ஆயிரம் ரூபா பெறுமதியான கோழிக்குஞ்சுகள் (கோழித் தீனி, மருந்துகள் உள்ளடங்கலாக) வழங்கப்பட்டன.

இதற்கான நிதி உதவியை லண்டன் 'காக்கும் கரங்கள்' நிறுவுநர் அன்ரன்யூதாகரன் வெனிற்றா றோகினி நேற்று வழங்கினார்

(த-222)


## மரண அறிவித்தல்

## நாகமுத்து செல்லத்துரை



சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து செல்லத்துரை நேற்று (05.03.2020) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து கனகம்மா தம்பதிகளின் அன்பு புதல்வனும் காலஞ்சென்றவர்களான பூபாலு ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் செல்வநாயகியின் அன்புக்கணவரும் செல்வநாதன் (தனுஸ் மரஅரிவு ஆலை. யாழ்ப்பாணம்). வசந்தகுமாரி. குமுதினி. நளாயினி. செல்வமலர். ஆகியோரின் அன்பு தகப்பனும் ஜனனி. திருக்கேதீஸ்வரன். கமலேந்திரன். சிவகுமாரன். கிரிதரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் தனுஸ்கோடி. லாவண்யா. தர்மிகா.பதுஸ்சன். துவாரகா. கோபிராஜ். விதுஸ்ராஜ். திலக்சன். யதுர்சன். நர்த்தனா. அபிநயா. பரணிதரன் ஆகியோரின் அன்பு பேரனும் வருஸ்ணிகா. ஷகித் ஆகியோரின் அன்பு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.03.2020) வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாரதா வீதி, சாங்கத்தானை,
சாவகச்சேரி.

தகவல் : குடும்பத்தினர்


# இலங்கையில் ரஷ்யக் கப்பல்



கொழும்பு, மார்ச் 6

ரஷ்யக் கடற்படையின் இரு கப்பல்கள் நேற்று கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தன. யரோஸ்லவு மட்ரி மற்றும் விக்டர் கோனெ ட்ஸ்கி ஆகிய கப்பல்களே இலங்கைக்கு வந்தவை.

இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை அதிகரிக்கும் நோக்கில் இலங்கைக்கு வந்த இந்தக் கப்பல்களின் கட்டளை அதிகாரிகள், மேற்கு கடற்படைக் கட்டளைத் தளபதி ரியர் அட்மிரல் சுமித் வீரசிங்கவை சந்தித்து இருதரப்பு விடயங்கள் குறித்து கலந்துரையாடினார். இந்த நிகழ்வைக் குறிக்கும் வகையில் நினைவுச் சின்ன பரிமாற்றமும் நடைபெற்றது. (ம)



கொழும்புத்துறை உப்புக்குளம் விநாயகர் ஆலயத்தில் வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. இன்று வெள்ளிக்கிழமை மாலை 7 மணிக்கு சம்பறத் திருவிழாவும், நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு தேர் திருவிழாவும் நடைபெறும். (-17)


## மரண அறிவித்தல்

## செல்லையா சிவதாசன்



தோற்றம் 24.02.1959 மறைவு 05.03.2020

கச்சேரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சிவதாசன் நேற்று (05.03.2020) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

116, கச்சேரி மேற்கு வீதி,
அரியாலை

தகவல்: குடும்பத்தினர்
077 711 0251


# சிறுவர் சந்தை

அளவெட்டி, மார்ச் 6

அளவெட்டி சீனன்கலட்டி ஞானோதய வித்தியாலயத்தின் வாராந்த சிறுவர் சந்தை இன்று பாடசாலையில் காலை 9 மணிக்கு இடம்பெறும். பாடசாலை அதிபர் தி.பிரதீபன் தலைமையில் இடம்பெறும். இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக பாடசாலையின் முன்னாள் அதிபர் எஸ்.சிவராசா கலந்துகொள்வுள்ளார். (ந)

# 300 மில்லியன் மாணவர்களின் கல்வியை பறித்த கொரோனா

கொழும்பு, மார்ச் 6


கொரோனா வைரஸ் காரணமாக சர்வதேச ரீதியில் சுமார் 300 மில்லியன் மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டுள்ள துடன் அவர்கள் பாடசாலைகளுக்கு செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது என யுனெஸ்கோ தெரிவித்துள்ளது.

13 நாடுகள் பாடசாலைகளை மூடியுள்ளன என தெரிவித்துள்ள யுனெஸ்கோ 9 நாடுகள் மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளன. அதனால் 290.5 மில்லியன் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளது.

நெருக்கடி நிலையின் போது பாடசாலைகள் புதிய விடயமல்ல என்ற போதிலும் தற்போது முன்னொரு போதும் இல்லாத வேகத்தில் அளவிலும் பாடசாலைகள் மூடப்படுகின்றன என யுனெஸ்கோவின் தலைவர் ஆட்ரி ஆசோலே தெரிவித்துள்ளார்.


இந்த நிலை தொடர்ந்தால் கல்வி கற்பதற்கான உரிமை பாதிக்கப்படலாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா வைரஸ் தொடர்ந்து பரவுவதன் காரணமாக



இத்தாலி 15ஆம் திகதி வரை பாடசாலைகளுக்கும் பல்கலைக் கழகங்களுக்கும் விடுமுறையை அறிவித்துள்ளது. தென்கொரியா பாடசாலைகளின் புதிய தவணை ஆரம்பத்தைப் பிற்போட்டுள்ளது.

ஜப்பானும் அனைத்து பாடசாலைகளையும் மூடியுள்ளன. அதேவேளை 92 பேர் வைரஸ் காரணமாக உயிரிழந்துள்ள நிலையில் ஈரானும் பாடசாலைகளை முற்றாக மூடியுள்ளது. (எ)



## ரயில் தடம்புரண்டு 20 பேர் படுகாயம்!

பாரிஸ், மார்ச் 6

கிழக்கு பிரான்ஸிலிருந்து பாரிஸின் ஸ்ட்ராஸ்பர்க் நோக்கிப் பயணித்த அதிவேக ரயில் தடம்புரண்டதில் 20 பேர் படுகாயமடைந்துள்ளனர் என்று அந்த நாட்டு உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து பாஸ்ரின் பகுதியில் உள்ள இங்கன் ஹெய்ம் என்ற இடத்தில் நடந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த ரயிலில் 348 பயணிகள் பயணித்த நிலையில் விபத்தில் 20 பேர் படுகாயமடைந்துள்ளனர். அவர்களில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாகவுள்ள நிலையில் ஏனையோர் சிகிச்சை பெற்று வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மண்சரிவு காரணமாகக் குறித்த விபத்து இடம்பெற்றுள்ள நிலையில் விபத்து குறித்த மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றது என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (எ)

## 46,000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த பறவை!

நியூயோர்க், மார்ச் 6

சைபீரிய பெர்மாஃப்ரோஸ்ட் பகுதியில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த பறவைகள் மற்றும் விலங்குகளின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சைபீரிய பெர்மாஃப்ரோஸ்டிலில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்த சில அடையாளங்களையும், வரலாற்று தடயங்களையும், தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். அவற்றில் 46 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ஒரு பறவை அதன் இறகுகளோடு இறந்து கிடப்பதை கண்டுபிடித்து அதனை ஆராய்ச்சி செய்து வந்தனர்.

அந்தப் பறவையை ஆராய்ச்சி செய்ததில் 46 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த லார்க் அல்லது எரெமோபிலா அல்பெஸ்ட்ரிஸ் என்ற இனத்தை சேர்ந்தது என்றும், இது தற்போது உயிருடன் இருக்கும் இரண்டு வகையான பறவை இனங்களின் முந்தைய இனங்களாக இருக்கக்கூடும் என்றும் தெரிவித்துள்ளனர்.

சைபீரியாவில் உள்ள பெலாயா கோரா என்னும் கிராமமானது உறைந்த பனிகட்டிகளாக காணப்படும் பகுதியாகும். அங்குள்ள 23 அடி ஆழம் கொண்ட சுரங்கப் பாதையில் அங்கு வாழும் வேட்டையாடும் மக்களால் சிறகுகளுடன் உறைந்து சடலமாக இருந்த இந்த அறிய வகை பறவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பறவையின் உடம்பில் உள்ள ஒவ்வொரு மரபணுக்களையும் ஆய்வாளர்கள் ஆராய்ச்சி செய்து வருகின்றனர். விலங்குகளின் பரிணாம வளர்ச்சியையும், உறைந்த பனி அடுக்குகளில் வாழும் பறவைகளின் வாழ்வு நிலைகளையும் ஆராய்ந்து வருகின்றனர். (எ)

## கலிபோர்னியாவில் அவசரகால நிலை



கொரோனா வைரஸ் பரவல் அச்சம் காரணமாக கலிபோர்னியா மாநில ஆளுநர் கவின் நியூசோம், தனது மாநிலத்தில் அவசர கால நிலையை அறிவித்துள்ளார். அமெரிக்காவின் கலிபோர்னியாவில் தற்போது 53 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளது என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அது மாத்திரமன்றி அங்கு ஒருவர் கொரோனா தொற்றால் உயிரிழந்துள்ளனர் என்று கலிபோர்னிய சுகாதார அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

அமெரிக்காவின் வொஷிங்டன் மாநிலத்தில் ஏற்கனவே 10 பேர் உயிரிழந்துள்ள நிலையில் வொஷிங்டனுக்கு வெளியே பதிவான முதல் உயிரிழப்பு சம்பவம் இதுவாக உள்ளது. அதையடுத்தே கலிபோர்னிய ஆளுநர் அவசர கால நிலையை பிரகடனப்படுத்தியுள்ளார். (எ)



## இன்றைய நாள்



**மேடம்:** நண்பர்கள் மூலம் நல்ல தகவல் கிடைக்கும் நாள். பண நெருக்கடிகள் தீரும். உடன் பிறப்புகள் கேட்ட உதவிகளை மறுக்காமல் செயவர். ஊக்கத்தோடு செயல்படுவீர்கள். பொருளாதார நிலையில் முன்னேற்றம் உண்டு.



**இடபம்:** முன்னேற்றத்தை வரவழைத்துக் கொள்ளும் நாள். காசு, பணப்புழக்கம் அதிகரிக்கும். குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவமொன்று நடைபெறும். நீண்டநாளைய ஆசையொன்று நிறைவேறும். குடும்பத் தேவையை நிறைவேற்றுவீர்கள்.



**மிதுனம்:** வசந்த காலத்திற்கு வழிகாட்டும் நாள். செலவுகள் கூடும். பேச்சுத் திறமையால் சூழ்ச்சிகளிலிருந்து விடுபடுவீர்கள். குடும்பத்தினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும்.



**கடகம்:** இடமாற்றம் பற்றிய இனிய தகவல் வந்துசேரும் நாள். விருந்தினர் வருகை உண்டு. உறவினர்கள் வழியில் சிறுவிரய முண்டு. தொலைபேசி வழித் தகவல்தொழில் வளர்ச்சிக்கு வழிகாட்டும். பணியாளர்களுக்கு பாராட்டு கிடைக்கும்.



**சிம்மம்:** தெய்வநம்பிக்கை கூடும் நாள். சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும். இல்லத்தில் நல்லசம்பவங்கள் நடைபெறும். புதியபொருள் சேர்க்கை உண்டு.



**கன்னி:** மகிழ்ச்சி கூடும் நாள். பிற இனத்தாரின் ஒத்துழைப்பு உண்டு. தொழிலில் அனுபவ மிக்க பங்குதாரர்கள் வந்திணைவர். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவீர்கள். விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.



**துலாம்:** சொல்லும் சொற்கள் வெல்லும் சொற்களாக மாறும் நாள். பிரிய மானவர்களோடு இருந்த பிரச்சினை அகலும். பூர்வீக சொத்துக்களை விற்றுப் புதிய சொத்துக்களை வாங்கி மகிழ்வீர்கள்.



**விருச்சிகம்:** ஆசைகள் நிறைவேற ஆலய வழிபாட்டை மேற்கொள்ள வேண்டிய நாள். அலைச்சலுக் கேற்ற ஆதாயம் கிடைக்காது. எதையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது.



**தனுசு:** மகிழ்ச்சி கூட மற்றவர்களை அனுசரித்துச் செல்ல வேண்டிய நாள். மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.



**மகரம்:** தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள். தடைகள் தானாக விலகும். சந்தித்தவர்களால் சந்தோஷம் உண்டு. விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்திணைவர். திருமணப் பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும்.



**கும்பம்:** கனவுகள் நனவாகும் நாள். தொட்ட காரியம் வெற்றிபெறும். தொல்லை தந்த எதிரிகள் விலகுவர். சொத்துக்களில் இருந்த வில்லங்கங்கள் அகலும். கல்யாணப் பேச்சுக் கள் முடிவாகும். ஆரோக்கியம் சீராகும்.



**மீனம்:** திட்டமிட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும் நாள். வாகனப் பராமரிப்புச் செலவு குறையும். தாய்வழியில் ஏற்பட்ட தகராறுகள் மாறும். பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்தில் ஆர்வம் காட்டுவீர்கள்.

# முரண்பாடுகளுக்கு முடிவுகட்ட சஜித்துக்கு ரணில் காலக்கெடு!

## புரிந்துணர்வு உடன்படிக்கை செய்துவிட்டு 'யானை'யில் ஏறி சவாரி செய்ய அழைப்பு

'சஜித் பிரேமதாஸவின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்திக்கு ஐக்கிய தேசியக் கட்சியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றைச் செய்து பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. ஐ.தே.கவிலிருந்து பிரிந்து சென்றவர்கள் வெற்றியடைந்துள்ளமைக்கான சான்றுகள் இல்லை. இதனால் சஜித் தரப்பினர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைசாத்திடுவார்கள் என்று நாம் எதிர்பார்க்கின்றோம்.'

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மேற்கண்டவாறு குறிப்பிட்ட அவர் மேலும் கூறியதாவது:

'நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதை அடுத்து வேட்புமனுத் தாக்கல் திகதியும், தேர்தல் திகதியும் அறிவிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் பொதுத் தேர்தலில் வெற்றியீட்டுவது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத் துள்ளது.

பொதுக் கூட்டணி அமைப்பது தொடர்பில் கட்சிக்குள் கலந்துரையாடப்பட்டிருந்தது. அதற்கமைய சஜித் பிரேமதாஸவின் தலைமையில் பொதுக் கூட்டணி அமைப்பது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தபோதிலும், அது கூட்டணியாக இல்லாமல் தனித்த கட்சியாகவே பதிவு செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே அனுமதி பெற்றுள்ள கட்சி ஒன்றுக்குப் புதிதாக தலைவர் மற்றும் செயலாளர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஐ.தே.க. உறுப்பினர்களும் யானை சின்னத்தில் போட்டியிடுவதையே விரும்புகின்றனர். தற்போது சஜித் தலைமையிலான தரப்பினர் தனித்துப் போட்டியிடுவதாக அறிவித்துள்ளனர். இவர்கள் அவ்வாறு தனித்துப் போட்டியிடுவார்கள் என்று நான் எண்ணவில்லை.

இதேவேளை, தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கு சஜித் தரப்பினருக்கு தற்போது சந்தர்ப்பம் வழங்கியுள்ளார். இதனைக் கருத்தில்கொண்டு அவர்கள் செயற்படுவார்கள் என்று நான் கருதுகின்றேன்.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிரிந்து சென்று தனிக்கட்சி அமைத்து செயற்பட முயற்சித்தவர்கள் கடந்த காலங்களில் வெற்றியடைந்தமைக்கான சான்றுகள் இல்லை. தற்போது பிரிந்து செல்ல முயற்சிப்பவர்கள் இந்த விடயம் தொடர்பில் சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

சஜித் தரப்பினர் மறைந்த முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸவின் அணுகுமுறைகளையும், நடவடிக்கைகளையும் பின்பற்றிச் செயற்பட்டிருந்தால் இந்த முரண்பாட்டு நிலைமை ஏற்பட்டிருக்காது. அனைவரும் ஒற்றுமையாகச் செயற்பட்டாலே பொதுத்தேர்தலில் மாபெரும் வெற்றியடைய முடியும்' - என்றார். (ம-22)

# ஐ.தே.கவைப் பிளவுபடுத்துவது
# சஜித் தரப்பின் நோக்கமில்லை

## பொதுச்சின்னத்தில் போட்டியிட இணக்கம் காணப்படும் என நம்புகின்றார் ரஞ்சித்

கொழும்பு, மார்ச் 6

'ஐக்கிய தேசியக் கட்சியைப் பிளவுபடுத்தும் நோக்கம் எமக்கில்லை. மாறாக ஒரே அணியாகப் பொதுச்சின்னத்தில் போட்டியிடுவதற்கு இணக்கப்பாடு காணப்படும் என நாம் நம்புகின்றோம்' இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

நுகேகொடையில் அவரது இல்லத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்ட அவர் மேலும் தெரிவித்ததாவது:

'நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் வேட்பாளர் நியமனக்குழு அமைக்கப்பட்டு அதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. அந்தவகையில், இதற்காக விண்ணப்பங்கள் கிடைத்த வண்ணமுள்ளன. இந்த நிலையில், எமது கட்சியுடன் வந்து இணைந்து கொள்ளுமாறு கட்சிகள் மற்றும் கூட்டணிகளுக்கும் அழைப்பு விடுக்கின்றோம்.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவின் ஏகமனதான
தீர்மானத்துக்கு அமையவே
இந்தக் கூட்டணி அமைச
பட்டுள்ளது. அந்தவகை
இதில் அதிகமாக ஐ.
கவைச் சேர்ந்தோரே அ
துவம் வகிக்கின்றனர்.
அத்துடன், கூட்டணியின்
னம் தொடர்பில் சிக்கல் ந
தோன்றியது. யானை மற்
அன்னம் சின்னங்களு
விருப்புக் காணப்பட்ட
யானை சின்னத்துக்கு உ
பாடு எட்டப்பட்டிருந்த நி
யில் அதற்கு சில நிபந்த
கள் முன்வைக்கப்பட்டன
அதற்கான கலந்துரைய
களை முன்னெடுத்த வே
யில் கடந்த மூன்று மாத
மாக இழுபறி நிலை கா
பட்டது. ஆகவேதான் அ
வரும் இணைந்து பெ
சின்னமொன்றில் போ
டுவதற்குத் தீர்மானித்தே
எமது கட்சிக்கென்று சி
மொன்று உண்டு. ஆயி
பொதுச்சின்னத்தில் போ
டுவதன் ஊடாக இந்தப்
சினைக்கான தீர்
காணக்கூடியதாக இருக
அந்தவகையில் புரிந்து
ஒப்பந்தமொன்றில் கை
திடுவது தொடர்பிலும்
யப்படுகின்றது' - என்றா
(ம

### இறுதிப்...

குற்றவாளிகள் எவரையும் ஐ.நா தப்பவிடக்கூடாது' இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா.

யாழ்ப்பாணத்தில் ஐக்கிய நாடுகள் சபை பிரதிநிதிகளுடன் நேற்று நடத்திய சந்திப்பின்போதே அவர் இந்த வலியுறுத்தலை விடுத்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

'போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பில் பல்வேறு முறைப்பாடுகள் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபை உட்பட்ட அமைப்புக்களுக்கு முன்வைக்கப்பட்டுள்ளன. குறித்த முறைப்பாடுகள் தொடர்பில் நேரடியாகக் கள ஆய்வை மேற்கொண்டிருந்த மனித உரிமைகள் சபையின் முன்னாள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை விசாரணை அறிக்கை ஒன்றையும் வெளியிட்டிருக்கின்றார்.

எனவே, பல்வேறு வகைகளிலும் இலங்கை அரசும் இராணுவத்தினரும் தமிழ் மக்கள் மீது மேற்கொண்ட இன அழிப்பு நடவடிக்கைகள் தொடர்பான ஆதாரங்கள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையினரிடம் உள்ளன. ஏற்கனவே இலங்கை அரசுக்கு எதிரான தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டபோது அந்தத் தீர்மானங்களை முன்மொழிந்த நாடுகளும் ஆதரவளித்த நாடுகளுமே தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டிய விசாரணைகளைத் துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்' - என்றார். (ம-22)

### வடகிழக்கு...

லட்சம் வாக்குகளால் வெற்றி பெறவில்லை. அதனை விட மிக அதிகமான வாக்குகளாலேயே வெற்றியைப் பெற்றேன். ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் அளிக்கப்பட்ட வாக்குகளை கழிக்க வேண்டும். அதனைக் கழித்துப் பார்த்தால் எனக்கும் என்னை எதிர்த்துப் போட்டியிட்ட வேட்பாளருக்கும் இடையிலான வாக்கு வித்தியாசம் மிக அதிகம். எனவே எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணிக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை கிடைக்கும். அத்துடன் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணிக்காக தேர்தல் பரப்புரை மேடையில் ஏறுவேன்.

சஜித் பிரேமதாசாவுடன் இணைந்து பணியாற்ற முடியாது. அவர்கள் கொள்கையில்லாதவர்கள். நாட்டின் மத்தள விமான நிலையத்தை நெற்களஞ்சியமாக்கியவர்கள். அப்படிப்பட்ட அறிவுள்ளவர்களுடன் இணைந்து வேலை செய்ய முடியாது -என்றார். (ஒ.5)

### தமிழரசு...

ணிக்குத் தான் பாதகமாக அமையும். சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி தலைமையிலான கூட்டணிக்கு எந்த வழியிலும் சவால் வராது. எந்த வகையிலும் பாதிப்பும் வராது' இப்படிக் கூறியுள்ளார் பொதுமக்கள் முன்னணியின் தலைவரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் அவரது கொழும்பு இல்லத்தில் இன்று மாலை தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் நியமனக் குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது. இதன்போது தமிழரசுக் கட்சியின் சார்பில் வடக்கு, கிழக்கிலுள்ள தேர்தல் மாவட்டங்களில் போட்டியிடும் வேட்பாளர்களின் விவரங்கள் இறுதிசெய்யப்படவுள்ளன.

அதேவேளை, கொழும்பு மாவட்டத்தில் தமிழரசுக் கட்சி போட்டியிடுவது தொடர்பிலும் இன்றைய கூட்டத்தில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

'எந்தக் கட்சியும் எந்த மாவட்டத்திலும் போட்டியிடலாம். எனவே, தமிழரசுக் கட்சியும் கொழும்பு மாவட்டத்தில் சுதந்திரமாகப் போட்டியிடலாம். கொழும்பில் பொதுமக்கள் முன்னணிக்கு வாக்களிக்கும் தமிழ் மக்கள் எமது கட்சிக்கே தொடர்ந்து வாக்களிப்பார்கள். அதில் எவ்வித மாற்றமும் ஏற்படாது. ஆனால், ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிக்கும் தமிழ் மக்களில் பெரும்பாலானவர்கள் தமிழரசுக் கட்சி போட்டியிட்டால் அந்தக் கட்சிக்கே வாக்களிப்பார்கள். இதனால் பாதிக்கப்படுவது ஐக்கிய தேசியக் கட்சியேயன்றி நாம் அல்ல' -என்றார். (ம-22)

### 8 குழுக்கள்...

பணம் செலுத்தியுள்ளன.

யாழ்ப்பாணத்தில் 3 சுயேச்சைக் குழுக்களும், வன்னியில் இரு சுயேச்சைக் குழுக்களும், களுத்துறை மாவட்டத்தில் 3 சுயேச்சைக் குழுக்களும் கட்டுப் பணத்தைச் செலுத்தியுள்ளன. (ஒ.5,105)

### என்னால்...

19ஆவது திருத்தச் சட்டம் காரணமாக நான் நினைத்ததை செய்ய முடியவில்லை. இவ்வாறு ஜனாதிபதி கோத்தபய ராஜபக்ஷ ஆதங்கம் வெளியிட்டார். பத்திரிகை ஆசிரியர்களுடனான சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் ஆட்சிக்கு வந்த நூறு நாள்களில் செய்த விடயங்கள் தொடர்பில் எனக்குத் திருப்தியில்லை. என்னுடைய தகுதிக்கு அது திருப்தியில்லை. நான் நினைத்ததை செய்ய முடியாமல் இருக்கின்றது. இதற்குப் 19ஆவது திருத்தமே காரணம். அதனை நீக்க வேண்டும்.

19ஆவது திருத்தத்துக்கு அமைவாக அமைக்கப்பட்ட சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு சுயாதீனமாக இயங்கவில்லை. அந்த ஆணைக்குழுவினர்
ஊடகங்களுக்கு சகல விடயா
தொடர்பிலும் கருத்துக்களைத் தெ
தனர். ஆணைக்குழு உள் விவக
ளைக் கூட தெரியப்படுத்தியிருந்
என்றார்.

### கச்சதீவு...

என இரு தினங்கள் நடைபெறவுள்
என்று ஆலய பலிபாலகர் அருட்
எமில்போல் அடிகள் தெரிவித்துள்
இன்று வெள்ளிக்கிழமை மாலை
மணிக்கு கொடியேற்றமும் திருச்
மாலை திருச்சிலுவைத் தியானம்,
ருணை ஆராதனை, புனிதரின்
சொரூப பவனி என்பன இடம்பெற
ளன. நாளை காலை 6 மணிக்கு
செபமாலையும் யாழ். ஆயர் ஜஸ்
ஞானப்பிரகாசம் ஆண்டகை ம
இந்திய ஆயர்கள் இணைந்து ஒ
கொடுக்கும் திருப்பலியும் திருச்செ
ஆசீரும் இடம்பெறும்.
கடற்போக்குவரத்து இன்று கால
மணிமுதல் நண்பகல் 12 மணி
குறிகாட்டுவான் நெடுந்தீவு இர
துறைகளில் இருந்து நடைபெறும்.
வழிக் கட்டணமாக குறிகாட்டுவா
ருந்து 325 ரூபாவும் நெடுந்தீவிலி
250 ரூபாவும் இயந்திரப்ப
சேவைக்கு அறவிடப்படுமென தெ
கப்பட்டுள்ளது. (ம-

### காணியற்...

காக 32.5 மில்லியன் ரூபா நிதி ஒ
பட்டது. ஏப்ரல் 30ஆம் திகதிக்கு மு
இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்
வேண்டும். இந்த நிலையில் முதல
மாக 21 மில்லியன் ரூபா நிதி விடுவி
பட்டுள்ளது.

படங்கள் - ஐ.சிவசாந்தன்



வடக்கின் பெரும் போர் என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மற்றும் சென் ஜோன்ஸ் கல்லூரி அணிகளுக்கு இடையேயான துடுப்பாட்டப் போட்டி நேற்று வியாழக்கிழமை ஆரம்பமானது.

# யாழ். மத்தியை மடக்க எத்தனம்

## முதல் நாளில் ஆதிக்கம் செலுத்தியது சென்.ஜோன்ஸ்







யாழ்ப்பாணம், மார்ச் 6

வடக்கின் போரின் நேற்றைய முதல் நாளிலேயே ஆட்டத்தில் ஆதிக்கம் செலுத்துவதற்கான எத்தனத்தை வெளிப்படுத்தியுள்ளது யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி – யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி ஆகியவற்றுக்கு இடையிலான வடக்கின் போர் துடுப்பாட்டத் தொடரின் 114ஆவது ஆட்டம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென். ஜோன்ஸ் கல்லூரி அணி களத்தடுப்பைத் தீர்மானிக்க முதலில் துடுப்பெடுத்தாடியது மத்தியின் ஆரம்ப வீரர்கள் இருவருமே ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தமை மத்திக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது. சீரான இடைவெளியில் இலக்குகள் சரிவடைய 150 ஓட்டங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்தது யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி. அணி சார்பில் அதிகபட்சமாக விஜஸ்காந்த் 30 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் கிருசன் 3 இலக்குகளையும், விதுசன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு முதல் இன்னிங்ஸுக்காகக் களமிறங்கிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி நேற்றைய நாள் முடிவில் 3 இலக்குகளை இழந்து 118 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. வினோதன் 20 ஓட்டங்களுடனும், டினோசன் 29 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். சுகேதன் 49 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஆட்டத்தின் இரண்டாம் நாள் இன்றாகும். (23)

## 40 வயதுக்கு மேற்பட்டோருக்கான கால்பந்தாட்ட சுற்றுப் போட்டி நாளை

மன்னார், மார்ச் 06

மன்னார் மாவட்டத்தில் சொக்க மாஸ்ரர் விளையாட்டுக் கழகத்தின் 10 வருடங்கள் நிறைவை முன்னிட்டு மன்னார் மாவட்டத்தில் அன்ரன் தங்கேஸ்வரன் ஞாபகார்த்த கால்பந்தாட்ட சுற்றுப் போட்டி வடக்கு, கிழக்கு மாகாண ரீதியாக நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டி நாளை சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் கிளிநொச்சி, யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இருந்து 12க்கு மேற்பட்ட அணிகள் பங்குபற்றுகின்றன. இந்த கால்பந்தாட்டப் போட்டிகளில் 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் பங்குபற்றுகின்றனர். (60)

உலக கோப்பை அரையிறுதியில்

## விளையாடாமலேயே வெளியேறிய இங்கி.

சிட்னியில் மழை பெய்ததால் விளையாடாமலேயே வெளியேற்றப்பட்டதால் இங்கிலாந்து அணி கப்டன் ஹீதர் நைட் வேதனை அடைந்துள்ளார்.

ஆஸ்திரேலியாவில் பெண்களுக்கான ரி-20 உலக கோப்பை தொடர் நடைபெற்று வருகிறது. 'ஏ' பிரிவில் இந்தியா, ஆஸ்திரேலியா அணிகளும் 'பி' பிரிவில் தென்னாபிரிக்கா, இங்கிலாந்து அணிகளும் அரையிறுதிக்கு முன்னேறின.

முதல் ஆட்டத்தில் இந்தியா இங்கிலாந்து அணிகள் மோத இருந்தன. ஆனால் மழை பெய்ததால் போட்டியை நடத்த முடியாத நிலை ஏற்பட்டது. ஒரு பந்து கூட வீசப்படாமல் ஆட்டம் கைவிடப்பட்டது.

லீக் சுற்றில் தோல்வியை சந்திக்காமல் முதல் இடம் பிடித்த இந்திய அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. மழை பெய்யும் என்பதால் ரிசர்வ் டே தேவை எனக் கோரிக்கை வைக்கப்பட்டது. ஆனால் ஐசிசி இந்த கோரிக்கையை மறுத்துவிட்டது.

இந்த நிலையில் விளையாடாமலேயே வெளியேறியதால் இங்கிலாந்து அணி வீராங்கனைகள் மனமுடைந்துள்ளனர். எங்கள் நிலை வேறு எவருக்கும் வரக்கூடாது என்று இங்கிலாந்து அணி கப்டன் ஹீதர் நைட் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;


விதி அப்படி இருப்பதால் ஒன்றும் செய்ய இயலாது என்று தெரிவித்துள்ளனர். முக்கியமான போட்டி மழையால் பாதிக்கப்பட்டு விட்டது. வருங்காலத்தில் விதிமுறைகள் மாற்றப்படும் என்று நம்புகிறோம். அதை நோக்கி நகர வேண்டும். ஏனைய அணிகளுக்கு இதுபோன்ற ஒரு நிலைமை வரக்கூடாது. இந்தமுடிவைஏற்றுக்கொள்ள தற்போது எங்களுக்கு கடினமாக உள்ளது– என்றார்.





மலனின் அதிரடி சதத்தால்

# தொடரை வென்றது தென்னாபிரிக்கா



ஜேன்மேன் மலன் சதத்தால் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 2ஆவது ஒருநாள் போட்டியிலும் வெற்றி பெற்று தென்னாபிரிக்கா அணி 2:0 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியது.

ஆஸ்திரேலியா அணி தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு மூன்று ரி-20 போட்டிகள், 3 ஒருநாள் போட்டிகளில் விளையாடி வருகின்றது. இதில் ரி-20 போட்டியை ஆஸ்திரேலியா அணி 2:1 என்ற கணக்கில் கைப்பற்றியது. 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் முதலாவது போட்டியை தென்னாபிரிக்கா அணி கைப்பற்றிய நிலையில் இரு அணிகளுக்குமிடையிலான 2ஆவது போட்டி நேற்று முன்தினம் இடம்பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலியா அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 271 ரன்களைப் பெற்றது. அணி சார்பில் கப்டன் ஆரோன் பிஞ்ச், டி'ஆர்கி ஷார்ட் தலா 69 ரன்னும், மிட்சேல் மார்ஷ் 36 ரன்னும், வோர்னர் 35 ரன்னையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் லுங்கி நிகிடி 6 விக்கெட்டை சரித்தார். நோட்ஜே 2 விக்கெட்டும் ஷம்சி, பெலுக்வாயோ தலா ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா அணி 48.3 ஓவர்களில் 4 விக்கெட்டை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

அணி சார்பில் புதுமுக வீரர் ஜேன்மேன் மலன் அபாரமாக விளையாடி தனது 2ஆவது ஒருநாள் போட்டியில் சதம் அடித்தார். அவர் 4 சிக்ஸர்,7 பவுண்ரிகள் அடங்கலாக 129 ரன்களைப் பெற்றார். மில்லர் 37 ரன்னையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் ஆடம் ஜம்பா 2 விக்கெட்டையும், ஸ்டார்க், கம்மின்ஸ் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இந்த வெற்றியின் மூலம் தென்னாபிரிக்கா அணி 2:0 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியது. இரு அணிகளுக்குமிடையிலான இறுதிப் போட்டி நாளை இடம்பெறவுள்ளது.

## வங்கதேச கப்டன் மோர்டசா பதவி விலகல்

வங்காளதேசம் ஒருநாள் கிரிக்கெட் அணியின் கப்டனாக இருக்கும் மோர்டசா, தனது பதவியிலிருந்து விலகியுள்ளார்.

வங்காளதேசம் ஒருநாள் கிரிக்கெட் அணியின் கப்டனாக இருப்பவர் மோர்டசா. இவரது தலைமையில் வங்காளதேசம் அணி வரலாற்று சிறப்புமிக்க வெற்றிகளை பெற்றுள்ளது.

சமீப காலமாக இவருக்கும் வங்காளதேசம் கிரிக்கெட் சபைக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் எப்போது வேண்டுமென்றாலும் இவரது கேப்டன் பதவி பறிக்கப்படலாம் என்ற நிலை இருந்தது.

தற்போது சிம்பாப்வே அணி வங்காளதேசத்துக்குச் சுற்றுப் பயணம் செய்து 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது. இதில் வங்கதேச அணி முதல் இரண்டு போட்டிகளிலும் வெற்றி பெற்று 2:0 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியுள்ளது.

இன்று இறுதிப் போட்டி நடைபெறவுள்ள நிலையில் கப்டன் பதவியில் இருந்து விலகுவதாக மோர்டசா அறிவித்துள்ளார். சிம்பாப்வேவுக்கு எதிராக மோர்டசா விளையாடும் இறுதிப் போட்டி இதுவாகும். இதில் வெற்றி பெற்றால் 50 வெற்றிகளை ருசித்த வங்காளதேசம் கப்டன் என்ற சாதனையை அவர் பெறுவார்.

உலகக் கோப்பையில் இருந்து

# ஆஸி. வீராங்கனை எலிஸ் பெர்ரி விலகல்

நியூசிலாந்துக்கு எதிரான போட்டியின் போது காயம் அடைந்த ஆஸ்திரேலிய அணி வீராங்கனை எலிஸ் பெர்ரி உலக கோப்பை தொடரில் இருந்து விலகியுள்ளார்.

ஆஸ்திரேலியாவில் பெண்களுக்கான உலக கோப்பை கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. ஆஸ்திரேலியா அணி இறுதி லீக் ஆட்டத்தில்நியூசிலாந்துஅணியை எதிர்கொண்டது. இந்தப் போட்டியில் வெற்றி பெறும் அணிதான் அரையிறுதிக்கு முன்னேற முடியும் என்ற நிலை இருந்ததால், இரு அணி வீராங்கனைகளும் முழு ஆட்டத்திறனையும் வெளிப்படுத்தினர்.

நியூசிலாந்து அணி துடுப்பெடுத்தாடும் போது ஆஸ்திரேலிய அணியின் சகலதுறை ஆட்டக்கார வீராங்கனையான எலிஸ் பெர்ரி மிட்ஆஃப் திசையில் வந்த பந்தை பிடியெடுத்து எறிந்த போது நிலைதடுமாறினார். அவரது தொடைப் பகுதியில் ஏற்பட்ட காயத்தால் நடக்க முடியாமல் திணறினார். அதன்பின் அவர் களத் தடுப்பில் ஈடுபடவில்லை.

காயத்தின் தன்மை மிக அதிகமான அளவில் இருப்பதால் உலக கோப்பையின் எஞ்சிய போட்டியில் இருந்து அவர் விலகியுள்ளார்.



## கோக்லியின் பந்து வீச்சை எதிர்கொள்ளாதது மகிழ்ச்சி

டெய்லர் கிண்டல்

நியூசிலாந்து அணி வெற்றியை நெருங்கும்போது விராட் கோக்லி ஒரு ஓவரை வீசினார். அந்த ஓவரை எதிர்கொள்ளாதது மகிழ்ச்சி என ராஸ் டெய்லர் கிண்டலாக தெரிவித்துள்ளார்.

கிறிஸ்ட்சர்ச்சில் இடம்பெற்ற இந்தியா - நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான இறுதி டெஸ்டி போட்டியில் நியூசிலாந்து அணி வெற்றியை நோக்கி சென்று கொண்டிருந்தது. வெற்றி பெற 7 ரன்கள் தேவை என்ற நிலையில் 35ஆவது ஓவரை விராட் கோக்லி வீசினார். அப்போது ராஸ் டெய்லர் மற்றும் நிக்கோல்ஸ் ஆகியோர் களத்தில் இருந்தனர். அந்த ஓவரின் 4ஆவது பந்தை நிக்கோல் பவுண்டரிக்கு விரட்டினார். மற்ற ஐந்து பந்துகளையும் தடுத்து ஆடினார்.


அடுத்த ஓவரில் நியூசிலாந்து 3 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது. இந்திய அணி கப்டன் விராட் கோக்லி நீண்ட காலமாக பந்து வீசவில்லை. தற்போது இந்த போட்டியில்தான் பந்து வீசினார்.

இதனை கிண்டல் அடிக்கும் வகையில் ரோஸ் டெய்லர், "இந்திய அணியுடனான தொடர் சிறப்பாக இருந்தது. எந்த வகை கிரிக்கெட்டாக இருந்தாலும் அவர்கள் எப்போதுமே கடிமான எதிர் அணி. வெற்றிக்கான ரன்னை அடிப்பதற்காக விராட் கோக்லியின் பந்து வீச்சை எதிர்கொள்ளாதது மகிழ்ச்சி - என்றார்.



திருமண அழைப்பிதழ்கள்
நவீன
அழகிய, இரசிக்கத்தக்க
அழைப்பிதழ்கள்
மிகக் குறைந்த விலைகளில்
கிரிகணன்

# இறுதிக்கு முன்னேறியது ஆஸி. மகளிர் அணி




சிட்னியில் மழை அச்சுறுத்திய நிலையிலும் தென்னாபிரிக்காவை வீழ்த்தி இறுதி போட்டிக்கு முன்னேறியது ஆஸ்திரேலியா அணி.

பெண்கள் ரி-20 உலக கோப்பை தொடரின் முதலாவது அரையிறுதியில் இந்தியா- இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான போட்டி மழையால் கைவிடப்பட்டு புள்ளிகள் அடிப்படையில் இந்திய அணி இறுதிக்கு முன்னேறியது.

இந்த நிலையில் 2ஆவது அரையிறுதியாட்டத்தில் ஆஸ்திரேலியா- தென்னாபிரிக்கா அணிகள் நேற்று மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்கா அணி மழை எந்த நேரத்திலும் போட்டியை பாதிக்கும் என்பதால் பந்து வீச்சை தெரிவு செய்தது. அதன்படி ஆஸ்திரேலியா வீராங்கனைகள் முதலில் துடுப்பெடுத்தாடினர். அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 5 விக்கெட்டை இழந்து 134 ரன்களைப் பெற்றது. அணி சார்பில் கப்டன் மெக் லானிங் ஆட்டமிழக்காமல் 49 ரன்களையும், பெத் மூனே 28 ரன்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பதிலுக்கு தென்னாபிரிக்கா அணி துடுப்பெடுத்தாடத் தயாரானபோது மழை பெய்தது. சிறிது நேரம் கழித்து மழை நின்றன. இதனால் டக்வொர்த் லூயிஸ் விதிப்படி தென்னாபிரிக்கா அணிக்கு 13 ஓவரில் 98 ரன்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக் கப்பட்டது.

தொடக்க வீராங்கனைகளான லீ, டேன் வான் நீகெர்க் ஆகியோரால் அதிரடியாக விளையாட முடியாமல் திணறினர். லீ 10 பந்தில் 12 ரன்களும், வான் நீகெர்க் 12 பந்தில் 12 ரன்களையும் பெற்று ஆட்டமிழந்தனர். அணி 10 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 66 ரன்களைப் பெற்றது.

இறுதி 18 பந்தில் 32 ரன்கள் மட்டுமே தேவைப்பட்டது. ஆனால் 11வது ஓவரில் ஆஸ்திரேலிய வீராங்கனை டெலிசா கிம்மின்ஸ் ஐந்து ரன்கள் மட்டுமே விட்டுக் கொடுத்தார். இதனால் தென்ஆப்பிரிக்கா அணிக்கு நெருக்கடி ஏற்பட்டது. இறுதி ஓவரில் 19 ரன்கள் தேவைப்பட்டது. ஆனால் தென்னாபிரிக்கா அணியால் 13 ரன்கள் மட்டுமே அடிக்க முடிந்தது. இதனால் ஆஸ்திரேலியா அணி டக்வொர்த் லூயில் விதியின்படி ஐந்து ரன்னால் வெற்றி பெற்று இறுதிக்கு முன்னேறியது.

நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை மெல்போர்னில் இடம்பெறும் இறுதிப் போட்டியில் இந்தியா - ஆஸ்திரேலியா அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன.

## காதலியை கரம் பிடித்தார் குசல் ஜெனித் பெரேரா



இலங்கை கிரிக்கெட் அணியின் வீரர் குசல் ஜெனித் பெரேரா கடந்த செவ்வாய்க்கிழமை திருமண பந்தத்தில் இணைந்து கொண்டார்.

குசல்னது நீண்டநாள் காதலியான கலனி என்பவரைத் திருமணம் செய்தார். திருமணத்துக்கு முக்கிய பிரபலங்களுக்கு மாத்திரமே அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

A/L 2020 இறுதிக்கருத்தரங்கு
இடம் - NEC - பெருமாள் கோவில் அருகில்

| வணிகக்கல்வி | கணக்கீடு |
|---|---|
| MR.S.K பாலசபேஷ் | MR.K.BALAKAJEN |
| ஆரம்பம் 11.03.2020 புதன் 2.30pm | ஆரம்பம் 13.03.2020 வெள்ளி 2.30pm |

அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்
HotLine - 076 003 2511, 077 674 0450

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
பிரதி ஞாயிறு
9.00am - 3.00pm
SLTES, SLEAS, Register, LL.B, Central bank M.A, Preschool E.B
பரீட்சைகளுக்கான அனைத்து வினாத்தாள்களுக்கும்
T.P – 0766883394
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
[யாழ் ஆஸ்பத்திரி வீதியில் பஸ் நிலையத்திலிருந்து 100m தூரத்தில்]


கள உத்தியோகத்தர் தேவை
மாதம் 60,000 க்கு மேல்
உழைக்க அரிய வாய்ப்பு ஆண்.
பெண் இருபாலாரும் தேவை.
ஒருமாத பயிற்சி முடிவில்
முகாமையாளராக
தரம் உயர்த்தப்படும்.
தொடர்பு:
077 662 6438, 076 069 2486

வேலைவாய்ப்பு
வாழ்க்கையிலும் பொருளாதாரத்திலும் உங்களின் தரத்தினை உயர்த்திக் கொள்ள சர்வதேச நிறுவனமொன்றில் இணைந்துகொள்ள நல்லதொரு தருணம்.
- தகைமைகள் :- O/L கணிதம் உட்பட 6 பாடசித்தி.
- மேலதிக தகைமைகள் :-
  - A/L பூர்த்தியடைந்தவர்கள்
  - ஒருவருட வேலை அனுபவம்
- அனுகூலம்:-
  - சர்வதேச நிறுவனத்தில் பணிபுரியும் வாய்ப்பு
  - எல்லையற்ற வருமானம்
  - ஐரோப்பிய நாடுகளுக்கான வெளிநாட்டுப் பயணங்கள்
  - வாகன, வீட்டு மேற்படிப்புக்கான கடன்வசதி.

உங்களுடைய சுயவிவரக்கோவையை 12.03.2020 ஆம் திகதிக்குள் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.
(CS2483)(1,17)
விளம்பர இல. JF/1019,
மே/பா.உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை சொர்ணம்மா



பிறப்பு 30.10.1947 — இறப்பு 04.03.2020

கரவெட்டியை பிறப்பிடமாகவும், இல.1150, திருநகர் தெற்கு, கிளிநொச்சியை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட காசித்தங்கம் என எல்லோராலும் அன்பாக அழைக்கப்படும் சொர்ணம்மா அவர்கள் கடந்த (04.03.2020) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - வல்லிப்பில்லை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி -அம்முனி தம்பதியரின் ஆசைமரு மகளும் காலஞ்சென்ற துரை என அழைக்கப்ப்டும் செல்லத்துரை அவர்களின் பாசமிகு மனைவியும் தயா என அழைக்கப்படும் மனோரஞ்சினி (இந்தியா), காலஞ்சென்ற ரவி என அழைக்கப்படும் மனோகரன், ஜெயாக்குஞ்சு என அழைக்கப்படும் மஞ்சுளா (மஞ்சு இஸ்போட்ஸ் கனகபுரம் வீதி, கிளிநொச்சி) பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான மகேந்திரம் (பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்க முன்னாள் கிளை முகாமையாளர்), மங்கம்மா, அரசம்மா, தங்கரத்தினம், மாணிக்கராசா மற்றும் மணி என அழைக்கப்படும் சரஸ்வதி, தங்காள் (பிரான்ஸ்), தங்கராணி, மனோரஞ்சன் ஆகியோரின் அன்பு சகோதரியும் கண்ணன் என அழைக்கப்படும் பாலச்சந்திரன் (இந்தியா), கிளி என அழைக்கப்படும் அற்புதராசா (முச்சக்கரவண்டி தரிப்பிடம் பளை முன்பாக கிளிநொச்சி) ஆகியோரின் ஆசை மாமியும் கிளிநொச்சி இந்துக் கல்லூரி பழைய மாணவர்களான யூனுவ் (பிரான்ஸ்), றொஸ்கோ (ஆசிரியர் முழங்காவில் மகாவித்தியாலயம்), மயூரன் (யாழ் பல்கலைக்கழகம்), றொபினா என அழைக்கப்படும் டினேஸ், அனுக்ஷன், குட்டி என அழைக்கப்படும் டேனுராஜ், பிரபா என அழைக்கப்படும் கிருபாகரன், கௌசி என அழைக்கப்படும் இதயரஞ்சினி (இந்தியா), பிரவு என் அழைக்கப்படும் யோகேந்திரன், சைவ என அழைக்கப்படும் சைவேந்திரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நடைபெற்று இன்று (06.03.2020) வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் திருநகர் இந்துமயானத்திற்கு நல்லடக்கத்திற்காக பூதவுடல் எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- குடும்பத்தினர்

இல.1150, திருநகர் தெற்கு, கிளிநொச்சி.
077 339 2638, 077 622 1492

## 'தல' என்று அழைக்கும் போது அதீத அன்பு பிரதிபலிக்கின்றது

### டோனி நெகிழ்ச்சி

என்னை தல என்று அழைக்கும்போது அவர்கள் என் மீது வைத்திருக்கும் அன்பு பிரதிபலிக்கிறது என்று டோனி தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்தில் கடந்த ஆண்டு ஜூலை மாதம் நிறைவடைந்த உலகக் கோப்பை கிரிக்கெட் தொடருக்கு பின்னர் சர்வதேச கிரிக்கெட்டில் இந்திய அணியில் பங்கேற்காமல் இருந்து வருகிறார் இந்தியாவின் முன்னாள் கப்டன் டோனி.

எதிர்வரும் 29ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐபிஎல்லில் விளையாடும் டோனி, சிஎஸ்கே அணியுடனான தனது உறவு குறித்து தெரிவிக்கையில்;

சிஎஸ்கே அணி என்னை எல்லாவற்றிலும் மேம்பட உதவியது. அது தனி மனிதனாக இருந்தாலும் சரி... கிரிக்கெட் வீரராக இருந்தாலும் சரி. சூழ்நிலைகளை கையாளுவது களத்திலும் சரி, வெளியிலும் சரி கடினமானதுதான். சிஎஸ்கே ரசிகர்கள் என்னை 'தல' என்று அழைப்பதை சிறப்பாக உணர்கிறேன். தல என்றால் சகோதரன் என்று பொருள். அவர்கள் அவ்வாறு அழைக்கும்போது என் மீது அவர்கள் வைத்திருக்கும் அன்பு பிரதிபலிக்கிறது - என்றார்.

## கால்பந்தாட்ட காலணிகள் வழங்கி வைப்பு

இளவாளை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 'உயர்த்தும் கரங்கள்' செயற்திட்டத்திற்கு கிடைத்தவேண்டுகோளுக்கு இணங்க, கிளிநொச்சி மாவட்டம் விசுவமடு பிரமனந்தனாறு பாடசாலையின் மகளிர் உதைபந்தாட்ட அணிக்கு கால்பந்தாட்ட காலணிகள் வழங்கி வைக்கப்பட்டன. இதனை இளவாலை கிராமத்தைச் சேர்ந்தவரும் முன்னாள் கால்பந்தாட்ட வீரரும், தற்போது புலம்பெயர் நாட்டில் வசிப்பவருமான கிறேசியன் தனது தந்தையாரின் ஞாபகார்த்தமாக வழங்கி வைத்தார். (222)





இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.03.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.